# வள்ளுவர்
# இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்

## மூன்றும் பகுதி

ஆசிரியர் :
தமிழ்ப் பெரும் புலவர், கணியர், டாக்டர்
**இ. மு. சுப்பிரமணிய பிள்ளை**

வெளியிடுவோர் :
**சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்,**
திருநெல்வேலி.
திரு. 1993.

Thamil, First Edition } 1000
December 1962.

*Irupatham Nootrandu Thamil*
( VOLUME III )

*By*
*Dr. E. M. Subramania Pillai*

Price Rs. 2–50 nP.

*Ratna Press, Srivaikuntam.*

சென்னை, உயர்நீதி மன்ற நீதிபதி
கனம் பா. ச. கைலாசம் அவர்கள்

# முன்னுரை

டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் என்ற தமிழறிஞரும், ஆராய்ச்சியாளரும், நுண்ணறிவாளருமாகிய அன்பர் தாங்கள் எழுதியுள்ள "வள்ளுவர் இருபதாம் நூற்றுண்டுத் தமிழ்" என்ற நூலின் மூன்றும் பகுதிக்கு முன்னுரை வழங்குமாறு என்னைக் கேட்டபொழுது எனக்குச் சற்று வியப்பாகவே இருந்தது. முதலிரண்டு பகுதிகளுக்கும் இரண்டு உயர்நீதி மன்ற நீதிபதிகள் முன்னுரை வழங்கியிருப்பதை அறிந்தேன். நடுவர்களிடம் இவர்கள் முன்னுரை விரும்புவதன் நோக்கம் அவ்வுரை நடுநிலை ஆய்வுரையாக இருக்கும் என்று கருதியே என்று தோன்றியது. எவ்வாருயினும் இந்த மூன்றும் பகுதிக்கு முன்னுரை தர எனக்குத் துணிவு தந்தது இதிற் கண்ட ஒரு வரலாறு. முப்பத் தொன்பதாம் வரலாற்றுக் குரியவரான திரு. வ. த. சுப்பிரமணிய பிள்ளை என்ற ஒரு தமிழறிஞர் ஒரு நீதிபதி என்பதைக் கண்ட நான் நம்மவர் ஒருவர் இதில் இடம் பெற்றிருப்பதால் முன்னுரை எழுதலாம் என்று துணிந்தேன்.

இருபதாம் நூற்றுண்டில் தமிழ் வளர்த்த நாற்பத்தைந்து சான்றோர்களின் வரலாறுகள் இதில் இடம்பெற்றுள்ளன. சாதி, சமையம் என்ற வேறுபாடில்லாமலும், சிறு தொண்டு செய்தவர் பெருந் தொண்டு செய்தவர் என்ற வேறுபாடு இல்லாமலும், தமிழுக்காகப் பணிபுரிந்தவர்கள் வரலாற்றை இந்நூல் தருவது பாராட்டத்தக்கது. இந்த முயற்சி இல்லாமல் இருந்தால் இதிற்கண்ட பல தமிழ் அறிஞர்களின் பெயர் முற்றும் மறைந்தேகூடப் போக இடம் உண்டு. ஒவ்வொருவரைப் பற்றியும் சுருக்கமான வரலாற்றை இந்நூல் கூறுவதோடு ஒவ்வொருவர் எழுதிய நூல்களைப் பற்றிய சுருக்கம், ஆய்வுரை இவற்றையும் இந்நூல் தருவது படிப்பவர்களுக்கு மிகவும் பயனுள்ள செயலாகும்.

திருவாவடுதுறை ஆதீனத் தலைவரான தெய்வத் திரு மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் அவர்கள் தமிழிடம் வைத்திருந்த

அன்பு காரணமாக மடத்துப் பழக்க வழக்கங்களையும் மீறி நோய்வாய்ப்பட்டிருந்த திரு. மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் இருப்பிடத்திற்கே சென்று அவர்களைக் கண்டு வந்தார்கள் என்ற செய்தி நெஞ்சைத் தொடுகிறது (பக்கம்-41).

29-ம் வரலாறாகிய திரு. தண்டபாணி அடிகளின் வரலாற்றுக் கிடையே வாகீசர் என்ற அப்பர் பெருமானைப் பற்றியும், திருஞானசம்பந்தரைப்பற்றியும் இவர்கள் கூறும் சில செய்திகள் அவை பற்றிச் சிலர் கொண்டிருக்கும் ஐயத்தை நீக்கும் முறையில் அமைந்து சமைய குரவர் பெருமையை மிகுதிப்படுத்திக் காட்டுகின்றன.

மாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் மாணவர் சவராயலு நாயகர் வரலாற்றில் நாயகராகிய கிருத்தவர், குலாம் காதர் என்ற முசிலீம் இவர்களுக்கிருந்த தமிழ் ஈடுபாடு, குருபத்தி முதலிய பண்புகளும், பிள்ளையவர்கள் வேற்றுமையில்லா மனப்பான்மையும் நம்மை வியப்பிற்குள்ளாக்குகின்றன. 25-வது வரலாற்று ஆசிரியரான மாம்பழக் கவிச்சிங்க நாவலரின் ஆற்றலைப் பற்றிய செய்தி சுவைக்கத் தக்கது ஒன்று.

51-வது வரலாற்று ஆசிரியரான இராமசாமி ராசு என்ற பாரித்தர் பாடிய ஆங்கிலத் தமிழ்ப் பாடல் நகைத்து மகிழச் செய்கிறது.

இவ்வாறு பல சுவைக்கும் இருப்பிடமாய், பல சான்றுகளையும், பலவகைத் தமிழ் நூல்களையும் பற்றிக் கூறும் இந்நூல் தமிழார்வமுள்ள எல்லார்க்குமே பயன்படும்; சிறப்பாகத் தமிழ் வரலாற்று ஆசிரியர்களுக்கு நன்கு பயன்படும் என்பது என் கருத்து. இதுபோன்ற இன்னும் பல தமிழ் நூல்களைத் தமிழன்னையின் திருவடிகளுக்குக் காணிக்கை செலுத்துவார்கள் டாக்டர் இ. மு. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் என்று நம்புகிறேன்.

வாழ்க டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள்!
வளர்க அவர்கள் தமிழ்த்தொண்டு!

**பா. ச. கைலாசம்,**
30-1-1963.

சென்னை, சைதாப்பேட்டை, ஆசிரியர் கல்லூரி முதல்வர்,

## மு. ரா. பெருமாள் முதலியார் அவர்கள்

# அணிந்துரை

வள்ளுவர் இருபதாம் நூற்றுண்டுத் தமிழ் மூன்றும் பகுதியைப் படித்து மகிழ்ந்தேன். இதை இயற்றித் தமிழ் நாட்டுக்கு உதவியவர்கள் என்னுடைய நண்பர் திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள். இவர்கள் தமிழிலும், சோதிடத்திலும், மருத்துவத்திலும் நல்ல புலமையுடையவர்கள்; ஆங்கில அறிவும் பெற்றவர்கள்; இனிய எளிய தமிழ் உரைநடை எழுத வல்லவர்கள். மாணவர்கள் இவர்களுடைய தமிழ் உரைநடையை முன்மாதிரியாகக் கொண்டு பயின்றால் தகுந்த பயனடைவார்கள் என்பது என் கருத்து. இந்நூலில் நாற்பத்தைந்து தமிழ்ப் புலவர்களின் வாழ்க்கை வரலாறுகள் அடங்கியிருக்கின்றன. எல்லா வரலாறுகளுமே மிகச் சுருக்கமாக எழுதப் பெற்றுள்ளன. ஒரு சில இந்நூலின் ஒரு பக்கத்திற்கும் குறைவான இடத்தைப் பெற்றுள்ளன.மாவித்துவான் சே. சவராயலு நாயகர், மாம்பழக் கவிச்சிங்க நாவலர், தண்டபாணி அடிகள், சாமி விருதை சிவஞான யோகிகள், சொக்கலிங்கச் செட்டியார் ஆகியவர்களுடைய வரலாறுகள் மட்டும் தனித்தனியாகப் பப்பத்துப் பக்கத்துக்கு மேற் செல்கின்றன. வரலாறுகள் எல்லாம் சுருக்கமாக இருந்தாலும் அவற்றைப் படிப்பவர்கள் அவற்றிற் கூறப்பட்டுள்ள புலவர்களைப்பற்றி மேலும் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், அவர்களுடைய பாடல்களையெல்லாம் படித்து மகிழ வேண்டும் என்றும் விரும்புவார்களென நான் நம்புகின்றேன்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள புலவர்கள் அனைவரும் மிக அண்மைக் காலத்தில் வாழ்ந்து மறைந்தவர்கள். அவர்களுடைய பாடல்களில் மிகப் பெரும்பாலானவை கோவை, அந்தாதி, கலம்பகம், மாலை, பிள்ளைத்தமிழ், தலபுராணம் முதலிய வகைகளைச் சேர்ந்தவை. அவர்கள் பாடியிருக்கின்ற எண்ணற்ற பாடல்களைப் படிக்குந்தோறும், படிக்குந்தோறும் அவர்களுடைய தமிழ்மொழி அறிவு, நூலறிவு, கவிபாடும் ஆற்றல், கற்பனைச் சிறப்பு முதலியவையெல்லாம் நமது உள்ளத்தில் ஒப்பற்றதொரு கிளர்ச்சியை

உண்டாக்குகின்றன, தமிழ் மொழி அவர்களுடைய கையில் மிகச் சிறந்த கருவியாகப் பயன்படுகிறது. "சொன்னயமும், பொருணயமும், அணிநயமும், கற்பனையாச் சொல்லாநின்ற நன்னயமும், தொடை நயமும், வனப்பு நயமும்" மிகுந்த பாடல்களை அப்புலவர்கள் "இன்னவாறு பாடுக" என்று கேட்டு வாய் மூடுமுன்னம் பாடும் ஆற்றல் பெற்றவர்கள்.

இந்நூலில் எடுத்துக் காட்டாகக் காட்டப் பெற்றுள்ள பாடல்களில் மிகவும் சுவைக்கத் தக்கவை புலவர்கள் அவ்வப் போது பாடிய தனிப்பாடல்களாகும். புலவர்களுடைய கற்பனையையும் இடம் காலங்களுக்கு ஏற்பக் கவிபாடும் ஆற்றலையும் எடுத்துக்காட்டி நம்மையெல்லாம் இன்பத்திலாழ்த்துவதற்கு இப் பாடல்கள் பெரிதும் உதவுகின்றன.

மூலை முடுக்குகளிலெல்லாம் மறைந்து கிடந்த பலப்பல புலவர்களைத் தேடிக் கண்டு பிடித்து நமக்கு அறிமுகப் படுத்திய திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் வாழ்க.

**மு. ரா. பெருமாள் முதலியார்,**
**22 - 1 — 1963**

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | காப்பு | ... | 1 |
| 2. | தோற்றுவாய் | ... | 2 |
| 3, 10. | மாவித்துவான் செ. சவராயலு நாயகர் | ... | 3 |
| 4, 11. | கோடகநல்லூர்ச் சுந்தர முனிவர் | ... | 15 |
| 5, 12. | வை. விசுவநாத பிள்ளை | ... | 21 |
| 6, 13. | சதாசிவம் பிள்ளை | ... | 22 |
| 7, 14. | முகவூர்க் கந்தசாமிக் கவிராயர் | ... | 23 |
| 8, 15. | சி. சங்கர பண்டிதர் | ... | 24 |
| 9, 16. | பம்மல் விசயரங்க முதலியார் | ... | 24 |
| 10, 17. | மு. இராமசாமிக் கவிராயர் | ... | 25 |
| 11, 18. | தா. சின்னத்தம்பிக் கவிஞர் | ... | 26 |
| 12, 19. | சி. வை. தாமோதரம் பிள்ளை | ... | 27 |
| 13, 20. | தொழூவூர் வேலாயுத முதலியார் | .... | 30 |
| 14, 21. | தா. நெல்லையப்ப பிள்ளை | ... | 31 |
| 15, 22. | மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் | ... | 35 |
| 16, 23. | நகரம் முத்துசாமிக் கவிராயர் | ... | 44 |
| 17, 24. | இராமாநுசக் கவிராயர் | ... | 45 |
| 18, 25. | மாம்பழக் கவிச்சிங்க நாவலர் | ... | 46 |
| 19, 26. | பொன்னுச்சாமித் தேவர் | ... | 55 |
| 20, 27. | மதுரைச் சபாபதி முதலியார் | ... | 58 |
| 21, 28. | பெரும்புலவர் கந்தசாமி முதலியார் | ... | 59 |
| 22, 29. | தண்டபாணி அடிகள் | ... | 60 |
| 23, 30. | ஆழ்வாரப்ப பிள்ளை | ... | 71 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 24, 31. | சாமி விருதை சிவஞான யோகிகள் .... | 72 |
| 25, 32. | சாது இரத்தின குரு ... | 82 |
| 26, 33. | வ. வைத்தியலிங்கம் பிள்ளை ... | 83 |
| 27, 34. | பூண்டி அரங்கநாத முதலியார் ... | 84 |
| 28, 35. | சபாபதி நாவலர் ... | 89 |
| 29, 36. | கணபதிப் பிள்ளை ... | 101 |
| 30, 37. | திருச்சி அமிர்தம் பிள்ளை ... | 102 |
| 31, 38. | சோமசுந்தர நாயகர் ... | 102 |
| 32, 39. | வ. த. சுப்பிரமணிய பிள்ளை ... | 109 |
| 33, 40. | ம. க. வேற் பிள்ளை ... | 111 |
| 34, 41. | திருமலை சக்கையாக் கவுடர் ... | 111 |
| 35, 42. | ஏரம்பையர் ... | 112 |
| 36, 43. | சொக்கலிங்கச் செட்டியார் ... | 113 |
| 37, 44. | காசிவாசி செந்திநாதையர் ... | 126 |
| 38, 45. | ஐ. சாமிநாத பிள்ளை ... | 130 |
| 39, 46. | சிதம்பரநாதத் தம்பிரான் ... | 134 |
| 40, 47. | பாம்பன் குமரகுருதாச அடிகள் ... | 135 |
| 41, 48. | பிச்சுவையர் ... | 142 |
| 42, 49. | ஈசானிய மடம் இராமலிங்க அடிகள் ... | 142 |
| 43, 50. | மு. ரா. அருணாசலக் கவிராயர் ... | 143 |
| 44, 51. | இராமசாமி ராசு ... | 145 |
| 45, 52. | ஆலாலசுந்தரம் பிள்ளை ... | 148 |
| 46, 53. | பூவை - கலியாணசுந்தர யதீந்திரர் ... | 148 |
| 47, 54. | வெண்பாப்புலி வேலுச்சாமிப் பிள்ளை ... | 152 |

# வள்ளுவர் இருபதாம் நூற்றுண்டுத் தமிழ்

## [மூன்றும் பகுதி]

### காப்பு

"சீரார் இருபதாம் நூற்றுண்டுச் செல்வர்நம்
பேரார் தமிழ்வளர்த்த பேரறிஞர் — ஆராத
காதல்வர லாறுசொலக் கங்கையணி வேணியரன்
பாதப் பனிமலரே பற்று."

"முதலாம் இரண்டாம்சீர் முற்பகுதி தோன்றி
முதலா விளங்கிட முன்னேன் — பதமலரே
தஞ்சமாக் கொண்டு தமிழ்மூன்றும் நற்பகுதி
விஞ்ச உரைப்போம் விரைந்து."

# தோற்றுவாய்

வள்ளுவர் இருபதாம் நூற்றுண்டுத் தமிழ் முதற் பகுதி 30–6–1961லும், இரண்டாம் பகுதி 25–7–1962லும் அச்சிட்டு வெளிவந்துள்ளன. முதற் பகுதிக்குச் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மதிப்பிற்குரிய மா. அனந்த நாராயணன் அவர்களும், இரண்டாம் பகுதிக்கு உயர்நீதி மன்ற நீதிபதி மதிப்பிற்குரிய சு. கணபதியா பிள்ளை அவர்களும் முன்னுரை எழுதி ஆதரித்தார்கள். முதற் பகுதி தமிழ்நாட்டுக் கல்வி, நிதி அமைச்சர் கனம் சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில், தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளை கலைக் கல்லூரி முதல்வர் உயர்திரு அ. சீனிவாசராகவன் அவர்களால் 15–9–1961-ல் திருநெல்வேலியில் சங்க வெள்ளி விழாவிலும், இரண்டாம் பகுதி தமிழ்நாட்டுக் கல்வி, நிதி அமைச்சர் கனம் மீ. பக்தவத்சலம் அவர்கள் தலைமையில், நீதிபதி கனம் சு. கணபதியா பிள்ளையவர்களால், சென்னையில் 29–7–1962ல் நடைபெற்ற சென்னை மாகாணத் தமிழர் இருபத்தெட்டாவது மாநாட்டிலும் வெளியிடப்பெற்றன.

இரண்டாம் பகுதியில் புலவர் போப்பையர், சிதம்பரம் இராமலிங்க அடிகள், வேதநாயகம் பிள்ளை, வித்துவான் தியாகராசச் செட்டியார், கவிஞர் கிருட்டின பிள்ளை, ஆறுமுக நாவலர் ஆகிய அறுவர் வரலாறுகள், அவர்கள் எழுதிய நூல்களின் ஆராய்ச்சியுடன் விரிவாக நூற்றறு பது பக்கங்களில் அமைந்துள்ளன. இனி, வள்ளுவர் இருபதாம் நூற்றுண்டுத் தமிழின் மூன்றும் பகுதி தொடங்கப் பெறும்.

## 10. மாவித்துவான் செ. சவராயலு நாயகர்

### [கி. பி. 1829–1911; திரு. 1660–1942.]

ஐரோப்பாக் கண்டத்திலுள்ள பிரான்சு நாடு மிகு புகழ் படைத்தது. இது ஆங்கிலேயருக்கு முன்னரே இந்தியாவிற் புகுந்து வாணிகம் செய்து நாடு பிடித்தது. பிரான்சு நாட்டினர் பிரஞ்சுக்காரர் என அழைக்கப் பெறுவர். அவர்கள் தமிழ்நாட்டில் முதன்முதலாக ஒரு சேரியை அமைத்தனர். அது பண்டைச்சேரி, பாண்டிச்சேரி எனப் பெயர் பெற்றது. "பாண்டி நாடே பழம்பதி" என்றூர் மணிவாசகப் பெருந்தகையார். பண்டை நாடு பாண்டி; அதாவது பூமியில் முதன்முதலாக உயிரினம் தோன்றிப் பெருகிய பண்டைய நாடு; அதன் அரசன் பண்டையன்; அவனே பாண்டியன். பாண்டிநாடு என்பது தன்னுட் பிரிவினைக்கு முன்பு சோழநாடு, சேரநாடு முதலிய பகுதிகளையெல்லாம் உள்ளடக்கி,

> *"வடவேங்கடம் தென்குமரி-ஆயிடைத்*
> *தமிழ்கூறு நல்லுலகத்து"*

என்று பனம்பாரனாரால் தொல்காப்பியத்துப் பாயிரத்திற் பாடப்பெற்றது. ஆதலின் தமிழ்நாடு முழுவதுமே பாண்டி நாடு என்று புகழ் பெற்றிருந்தது; அதில் ஓரிடத்தில் அமைந்த சேரி பாண்டிச்சேரி எனினும் பொருந்தும். சேரி என்பது மக்கள் பலர் சேர்ந்து வாழும் இடம்; புதுவதாக அமைக்கப் பெற்றது ஆதலின், அது "புதுச்சேரி" என்றும் பெயர் பெற்றது. அது மருவிப் "புதுவை" என்றும் வழங்கும்.

இப்புதுவை மாநகரம் ஒரு சிறந்த துறைமுகம். அது பிரஞ்சுக்காரருக்குத் தலைநகரமாகத் திகழ்ந்திருந்தது.

அண்மைக் காலம் வரை அது அவர்களுடைய ஆளுகை யிலேயே இருந்து வந்தது. இப்போது அவர்களால் பெருந் தன்மையுடன் கொடுக்கப்பெற்று, நம் இந்தியக் குடியர சின் ஆட்சியில் இருந்து வருகிறது. இந்தியாவை ஆங்கி லேயர் ஆண்டு வந்த காலத்தில், தன்னுட்சி பெறுவதற் காக அவர்களை எதிர்த்துக் கிளர்ச்சி செய்த மாபெரும் வீரர்கள் சிலருக்கு அது புகலிட மாயிற்று. வங்காளப் பெருந்தலைவர் அரவிந்தர் புதுவையை அடைந்து தங்கி, அங்கே ஓர் ஞானநிலையம் கண்டு, அமர்ந்திருந்தார். எட் டையபுரம் கவி சுப்பிரமணிய பாரதியார் அங்கே மறைந் துறை வாழ்க்கையினராகச் சில ஆண்டுகள் வாழ்ந்திருந் தார். அப்போதுதான், அவ்வூரினராகிய புரட்சிக்கவிஞர் அக்கவிஞருக்கு மாணவராகிப் பாரதிதாசன் என்ற பெய ரைத் தாங்கினுர். புதுவையிற் புகாமல் ஆங்கிலப் பேரரசை எதிர்த்து நின்று வீரமுரசறைந்து சிறைபுகுந்த சிறந்த பெருவீரர்களுள் கப்பலோட்டிய சிதம்பரம் பிள்ளை ஒருவர்.

இற்றைக்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் ஞல், அபபுதுவை மாநகரில், நாயக்கர் வகுப்பில் **செயகான் நாயகர்** என்ற பெரியார் வாழ்ந்திருந்தார். அவருடைய திருமனைவியார் சந்தபார் அம்மையார். 9—12—1829ல் அவர்களுக்குத் திருமகனுகப் பிறந்தார் நம் புலவர் பெருந்தகை சவராயலு நாயகர். பிற்காலத்தில் அவர் தாம் பிறந்த நாள் இதுவென்று ஒருபாடல் பாடியிருக்கி ருர்; அது வருமாறு:

“தென்னுறும்ஆ யிரத்தெண்ணூற்றிருபத்தொன்
பாஞண்டு தெசம்பர் மாதம்
*மின்னுறும்ஒன் பான்தேதி புதவாரம்*
*வருடமோ விரோதி மாதம்*

*மன்னுறுகார்த் திகை தேதி இருபத்தா*
*றினில்காலை மணியோ நான்காம்*
*என்னும் ஒருகிருத்திகையில் பிறந்தேன்என்*
*றென் தந்தை எழுதினரே!"*

சவராயலு நாயகருடைய தந்தையார் பிரஞ்சு மன்னருக்குச் செய்த பேருதவிகளுக்காக அவ் அரசு தந்த நீடு பெருமானியங்களை உடையவராக இருந்தார்; சவராயலுவும் தம் பாடல்களுக்குப் பரிசாகப் பல நிலங்களைக் கொடையாகப் பெற்றுப் பெருஞ்செல்வராக வாழ்ந்து வந்தார். இச்செய்தி இவர் பாடிய பின்வரும் பாடலால் விளங்குகின்றது:-

*"நேடுபொருள் அல்லாமல் எந்தை பிரஞ்*
*சரசருக்கு நெடுநா ளாத்தான்*
*பாடுபெறச் செய்து வந்த நலங்களுக்கன்*
*னார்புதுவைப் பதியில் தந்த*
*நீடுபெரு மானியங்க ளாலும் என்பா*
*டல்களாலும் நிலங்கள் பெற்றுன்*
*ஏடுடைய மலரடியை நாடி மரி*
*யேசுகமா இருக்கின்றேனே."*

சவராயலு நாயகர் இளமையிலே பிரஞ்சும், தமிழும் பயின்றார். தமிழ்ப் பெரும் புலவராகவும், நாவலராகவும் ஆகவேண்டும் என்ற பெருவிருப்பம் அவருக்கு இயல்பாகவே இருந்து வந்தது. அதனால் அவர் புதுவையிலிருந்த புலவர்களை அடுத்துப் பல கருவி நூல்களைப் பயின்றார். கத்தோலிக்கக் கிருத்தவராகிய அவருக்குத் தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம் ஆகிய சிறந்த கிருத்துவ நூல்களைக் கசடறக் கற்பிக்கும் பேராசிரியர் ஒருவரைத் தேடி அடையவேண்டும் என்ற பேரவாத் தோன்றிற்று.

அக்காலத்தில் திரிசிரபுரத்தில் மாவித்துவாஞக விளங்கியிருந்தார் மீனுட்சிசுந்தரம் பிள்ளை. அவரைத் தம் ஆசிரியராக அடைய வேண்டும் என்று முடிவுசெய்து, சவராயலு நாயகர் கையுறையோடு சென்று அவரைப் பணிந்து நின்ருர். அப்போது பிள்ளையவர்கள் அவரை ஏற்றுக் கொண்டு, அவர் தகுதியறிந்து தக்க கருவி நூல்களைக் கற்பித்துப் பின் தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம் ஆகிய நூல்களை விரித்து உரைபகர்ந்தார். அதஞல் பெரும்புலமை பெற்ருர் சவராயலு நாயகர்.

இயல்பாகவே பேச்சுத்திறன் படைத்த சவராயலு நாயகர், அருட்கவி மீனுட்சிசுந்தரம் பிள்ளையின் பேரறிவுப் பெருஞ்செல்வத்தைப் பெற்றபின், ஒப்பற்ற பெருஞ்சொல் விளக்கஞராகவும், கவியாகவும் திகழ்ந்தார்; தேம்பாவணியாகிய கிருத்தவ புராணத்தைப் பேரூர்தோறும் சென்று பேசிப் பரப்பி வந்தார். அதஞல் அவர் பலராலும் "மாவித்துவான் மாணவர் மாவித்துவான்" என்று புகழப் பெற்ருர்.

நாயகர் பேருரை தொடங்கும்போது, தம் ஆசிரியர் மீனுட்சிசுந்தரம் பிள்ளையை வணங்கிப் பாடிய பின்னரே பொருளில் நுழைவார். அப்பாடல்கள் வருமாறு:—

*"ஓதுதற் கருநூல் யாவையும் உணர்ந்த*
*உணர்வினன் திரிசிரகிரியாம்*
*மேதகு பதியில் ஒளிதரு ஞான*
*விளக்கமாய் அடியவர் உளத்தில்*
*தீதறும் அவிச்சை யாமிருள் சீத்துத்*
*திகழும்எம் தேசிகஞய*
*கோதின்மீனுட்சி சுந்தரனருளால்*
*கூறுதும் இஃதுளம் துணிந்தே."*

*"விளங்குறுவெண் புகழ்வனைந்த*
*மீனுட்சி சுந்தரப்பேர்க்*
*களங்கமில்தே சிகன்என்பால்*
*கருணை நனிபுரிந்ததனுல்*
*துளங்குறுதேம் பாவணிக்குச்*
*சொலத்துணிந்தேன் உரைவிரித்து*
*வளங்கெழும்அவ் அருளிலையேல்*
*வழுத்தலரிது அரிதரிதே."*

இவ்வாறு தம் ஆசிரியரிடத்து இவர் கொண்டிருந்த நன்றியறிதலே இவருடைய முன்னேற்றத்துக்கும், பெரும் புலமைக்கும், பெருவாழ்வுக்கும் காரணமாயிற்று. மெய்யான தெய்வப் புலமை, சாதி சமைய வேறுபாடுகளை மறக்கச் செய்யும் என்பதற்குக் கத்தோலிக்கக் கிருத்துவ ராகிய இவர் தாம் பொருள் விரித்துரைக்கும் சேசுநாதரை வளர்த்தெடுத்த சூசையப்பர் வரலாருகிய தேம்பாவணிச் சொற்பெருக்கைத் தொடங்கும்போது, சைவப் பெரியா ராகிய மீனுட்சிசுந்தரம் பிள்ளையை வணங்கித் தொடங் கினுர் என்பது தக்க எடுத்துக்காட்டாகுமல்லவா! மேலும் தெய்வப் புலவர் மீனுட்சிசுந்தரம் பிள்ளை கிருத்துவராகிய சவராயலு நாயகருக்கு ஆசிரியராகிக் கிருத்துவப் புரா ணத்தைப் படித்துப் பாடம் சொன்னமையும் இதற்குப் போதிய சான்ருகும். மற்றும், மீனுட்சிசுந்தரம் பிள்ளை முனிசீபு வேதநாயகம் பிள்ளைக்கும் சவேரிநாத பிள்ளை என்ற மற்ருெரு கிருத்துவருக்கும் ஆசிரியராகித் திகழ்ந் தார். இம்மட்டோ?

நாகூரிற் புகழ்பெற்று விளங்கினுர் குலாம்காதர் நாவலர் என்ற முகம்மதியர். அவருக்கும் மீனுட்சி சுந்தரம் பிள்ளை ஆசிரியராகி, முகம்மதுநபி நாயகத்தின் வரலாருகிய சீருப்புராணத்தைப் பாடஞ் சொன்னுர் என்

ருல், மெய்ப்புலமையின் பெருமைதான் என்னே? அன்ன தானத்தினும் ஆயிரமடங்கு உயர்ந்தது ஞானதானம். இதனைப் போற்றிச் சவராயலு நாயகர் உளங் கசிந்து பாடிய பத்திப் பாடல் இது:-

*"கற்றற் கெளியனவாக் காட்டியரும் பாடலெல்லாம்*
*பற்றச்செய் நற்குணஎன் பண்ணவனும் — உத்தமநீ*
*ஞானப் பொருள்வழங்கி நற்றருமம் செய்வதுபோல்*
*தானமுண்டோ இவ்வுலகிற் றன்."*

கல்வி அருமை அறிந்தவராகிய நாயகர், கல்விமான்களுக்கெல்லாம் பொருட் கொடைபுரிந்து, பெரு வள்ளலாகவும் விளங்கினர். தாம் பெறும் கொடைப் பொருளையெல்லாம் தம் மாணவருக்கே ஆக்கி, அவர்தம் உடலை வளர்த்துத் தம்ஞான உரைகளால் அவர்களைப் புலவராக்கி வந்தவர் மீனுட்சிசுந்தரம் பிள்ளை; ஆதலின் இவர் அடிக்கடி தம் ஆசிரியருக்குப் பொருள் வழங்கிப் போற்றினர். அதனுல் மாவித்துவான் தம் மாணுக்கர் சவராயலு நாயகர் மேல் முப்பது பாடல்களில் ஒரு மாலை பாடிப் புகழ்ந்தார். இம்மாலையில் இரண்டு மலர்கள் பின்வருவன:-

*'எல்லாரும் வாழ்த்துவர் நின்னைஎன் றியாரும் [எடுத்துரைப்பார்*
*அல்லாரும் கூந்தற் பரமா தரையணை யாமையின்அந்*
*நல்லார்பொல் லான்என வைவார் உனை இது நானறிவேன்*
*வல்லார் பொலிபுது வைச்சவ ராயலு மன்னவனே!"*

*"எளியரை வாட்டும் வலியரைத் தெய்வம் இறுக்குமெனல்*
*தெளிதர லுற்றனம்; பல்லோரை வாட்டும் திறன்மிடியின்*
*களியற வாட்டுவை நீதெய்வ மேயெனல் கற்பனையோ?*
*வளியுளரும்புது வைச்சவராயலு மன்னவனே!"*

பிள்ளையவர்களின் மாணவராகிய கும்பகோணம் அரசினர் கல்லூரித் தமிழ்ப் பெரும்புலவர் தியாகராசச் செட்டியார் இவர்மேல் ஓர் இரட்டைமணிமாலை பாடிப் பாராட்டினார். அதில் அவர் இவரைப் பின்வருமாறு புகழ்கின்றார்:

*“கற்றார் குழுவுள் உடுநடுத் திங்கள் கடுப்பவனும்*
*பெற்றார் தவமலை மேற்சுடர் போலப் பிறங்குவனும்*
*செற்றார் நடுங்கி அடிவீழப் புன்னகை செய்பவனும்*
*மற்றார் முற்றோர் சவராயலு மாலன்றி மாநிலத்தே?”*

*“அற்றார்க் கருள்சவ ராயலு நாம அதிபனெல்லாம்*
*கற்றார்ந் தவனென் றியான் சொலக் கேட்ட கவிப்புலவர்*
*‘உற்றார்முன் இல்லைஎன் றோதல்கற் றான்கொல்? [உணர்வுடைமை*
*பெற்றார்ப் பிரிவுறல் கற்றான்கொல்?’ என்றெதிர் பேசுவரே.”*

கவிபாடுவதிலும், சொற்பொழிவாற்றுவதிலும், இன்னிசை பாடி மகிழ்விப்பதிலும், வள்ளன்மையிலும் நாயகர் எதிரற்றவர் என்பது இவர் ஆசிரியரே இவரை

*“தணிவரி தாம்கவி செய்தலி னுல்பிர சங்கத்தினுல்*
*அணிகிளா ரும்இசை பாடலி னுல்நல்கும் ஆக்கத்தினுல்*
*எணிமுடி யாப்பெரும் பேராசை யால்புகழ் எய்துகை நீ*
*மணிமதில் சூழ்புது வைச்சவ ராயலு மன்னவனே!”*

என்று தம் மாலையிற் பாடுதலினுல் விளங்கும். இவர்மேல் எண்ணற்ற புலவர்கள் கவிமாலை புனைந்து பொருள் பெற்றனர். இனி, நாயகர் பாடிய பனுவல்களைப் பற்றி ஆராய்வோம்.

இவர் அளித்த சாற்றுக் கவிகள் அளவில்லாதன. இவர் எழுதும் கடிதங்களிலெல்லாம் தலைப்பில் தம் ஆசிரி

யரைப்போல ஒரு பாடல் பாடியே கடிதத்தைத் தொடங்கு வார். பின்வருவது தம் ஆசிரியருக்கு இவர் எழுதியது:—

"முத்திக்கு வித்தாம் முரிமனத்துக் காறுதலாம்
எத்திக் கினும்பொருளை ஈகுவதாம் — சுத்தகலை
ஓது கருணைமிகும் உத்தமஎன் சற்குருநிற்
கேது செய்கு வன்கைம்மா றின்று."

பின்வருவது இவர் வல்லூர்த் தேவராச பிள்ளைக்குத் தீட்டியது :—

"வாசமலி கொன்றையணி ஈசன் இருதாளைப்
பூசனை புரிந்தொழுகு தாசன் இயல்வல்லோர்
நேசனென வந்தொளிரும் மாசில்குண மேலோன்
தேசமரு மாதேவ ராசமுகில் காண்க."

பின்வருவது இவர் தியாகராசச் செட்டியாருக்கு வரைந்தது:-

"முப்புர மெரித்தோன் அடிமலர் முடியில்
முடித்துநன் னூலெல்லாம் முடித்தோன்
ஒப்பிலாப் பெரியோன் புலவர்கோன் எவர்க்கும்
உயரருள் புரிந்திடும் உறவோன்
தப்பிலாப் புனிதன் இன்சொலன் என்பாற்
சந்ததம் அன்புளோன் தூய
திப்பிய புகழோன் தியாகரா சேந்திரச்
செம்மல்இக் கடிதநோக் குகவே."

மேலே கண்ட பாடல்கள் இரண்டில் இவர் 'சிவபெரு மான் திருவடிக்கே பத்தி செய்யும் மெய்யன்பர் தேவராச பிள்ளையும், தியாகராசச் செட்டியாரும்' என்று வாயாரப் புகழ்கின்றார். இதனால் அக்காலத்துப் புலவர்கள் பலரும் தம் தமக்கு ஒரு வழிபடு கடவுளை உடையவராக இருந் தாலும், பிறர் வழிபடு கடவுளர் மேலும் புகழுரைத்து, ஒன்று

பட்டு வாழ்ந்து வந்தார்கள் என்ற உண்மை புலனு கின்றமை காண்க. இது பிற்காலப் புலவருக்கும் மக் களுக்கும் சரியான வழிகாட்டி. மெய்ப்புலவர்களுடைய பாடல்களெல்லாம் ஒப்பற்ற பொருள் பொதிந்தனவாக இருப்பதோடு யாவருக்கும் விளங்கும் இனிய எளிய சொல்லோவியமாக விளங்குகின்றன.

1. தேவமாதாவின் மேல் அந்தாதித் தொடையில் இவர் நூறு பாடல்கள் கொண்ட "**பேரின்பமாலை**" பாடினுர். இது 1877-ல் அச்சிடப் பெற்றது. சைவசமையக் கவிஞர் பாடற் கருத்துக்களுக்கும், இவர் பாடற் கருத்துக் களுக்கும் வேறுபாடு சிறிதும் இராது; தெய்வப்பெயர் மட்டும் மாறிக் காணும். பொருள் வெளிப்படையாதல் காண்க.

*" மணமக னன்றே பிணமக ஞகை மணப்பறைகள்*
*பிணமதற் காய பறையா யொலிக்கப் பிறங்கிழையார்*
*கணம்அகன் ருேடக் கடம்வீழ்ந் திடுமென்று*
*கண்டிருந்தும்*
*பணம்என ஏங்கும் சிறியேனை ஆள்எம் பராபரியே!"*

*[கடம் - குடம்; உடம்பு]*

*" ஓதி யுணர்ந்தும் பிறருக் குரைத்தும் ஒழுக்கமிலாப்*
*பேதையிற் பேதை எனும்அடி யேன்செய் பெரும்*
*பிழையாம்*
*தீதைஒழித் தெனை ஆண்டால் உனை இங்குச் சீறுவர்*
*யார்?*
*மேதையர் போற்றும் திருமா மரியே விளம்புவையே."*

*[மரி - தேவமாதா, கன்னிமரியம்மை]*

2. இவர் தேவமாதாவின்மேற் பாடிய "**பேரின்பச் சதகம்**" நூறு பாடல்களில் அமைந்தது. [சதகம் - நூறு பாடல்கள் கொண்ட நூல்.] அதில் ஒரு பாட்டுப் பின் வருவது :

*" வாங்குகட லிணையுடுத்த புடவியினில் அடியேன்மெய்*
*வருந்தி வாடி*
*ஏங்குதலைக் கண்டின்னம் இரங்காத காரணம் என் ?*
*ஏழை யேனைத்*
*தாங்குவரிங் கொருவருண்டோ? தவிப்பவரை*
*ஆதரிக்கும் தாய்நீ அன்ருே ?*
*ஈங்குனது திருவடியிற் சேர்த்தெனையும் காத்தருள்என்*
*இனிய தாயே !"*

*[புடவி - உலகம்]*

3. தேவமாதா மீது "**திருநவச் சதகம்**" என்று நூறு பாடல்கள் பாடியிருக்கிருர் சவராயலு நாயகர். இச் சதகம் உலூர்து நகர் அம்மைமீது பாடப்பெற்றது. அதில் இவர், "அம்மையே நீ எத்தனேயோ புதுமைகளெல்லாம் செய்தருளினை என்பார்கள். ஆனால் அவைகளில் எதையும் நாங்கள் பார்த்ததில்லை. இப்போது நீ இந்த உலூர்து நகரில் எழுந்தருளியிருந்து கொண்டு, உன்னைக் கும்பிட வருபவர் எல்லாருடைய நோயையும் தண்ணீரைத் தந்து போக்கியருளுகின்ருய்" என்று உலகினர் அறிந்து வந்து வணங்கிப் பிணி தீர்ந்து உய்யுமாறு பாடுகிருர். உலூர்து நகர் என்பது வில்வநல்லூர்.

*" இப்படிநீ இப்படியில் எண்ணிறந்த நவங்கள்*
*செய்தாய் என்று முன்னேர்*
*செப்பினதைக் கேட்டனமல் லாற்கண்டோம் இல்லை*
*என்பார் தெளிதற் கிப்போ*

*தொப்பரிய லூர் துநகர்க் கெழுந்துதரி சனம் தந்து*
*ஓர் உதகத் தாலே*
*எப்பிணியும் அறநீசெய் கின்றநவம் கண்டிறும் பூ*
*தெய்தாரியாரே!"*

*[நவம் – புதுமை, அற்புதம்; உதகம் – தண்ணீர்.]*

4. தேவமாதாவின் மேலே "**பேரின்ப அந்தாதி**" இவர் பாடினுர். முதற்பாட்டின் அந்தம் (முடிந்த சொல்) அடுத்த பாட்டின் ஆதி (முதற்சொல்) யாக அமைந்து நூறு பாட்டுடைய நூல் அந்தாதியாம். அதில் ஒரு பாட்டுப் பின்வருவது :-

*"காரினில் தோன்றி மறைந்திடு மின்ஞே கனவுதனில்*
*சாரும் தனமோ நிசிநா டகத்தினர் தம்முருவோ*
*நீரினில் தோன்றும் அலேயோ செல்வமென நேமமுடன்*
*பாரினில் தோன்றும்இவ் வாழ்வெனக் கேன்நற்*
*பரம்பொருளே."*

*[கார் - மேகம்; மின் - மின்னல்]*

இம்மனப்பான்மையே இவரைத் தம்மிடம் குவிந்திருந்த பொருளேத் தேவையுள்ளார்க்கு வாரி வழங்கி ஆதரிக்குமாறு இவரைத் தூண்டியது.

நாயகர் அட்டநாகபந்தம், கமலபந்தம், சதுரங்க பந்தம், நான்காரைச் சக்கரங்கள் முதலிய சித்திரக் கவிகளே விளேயாட்டாகப் பாடுவார். இக்கவிஞர் பாகூர் என்னும் ஊரில் ஒரு கோவில் கட்டினுர். அதற்குச் செயராக்கினி மாதா கோவில் என்று பெயரிட்டார்; தாம் நேர்ந்து கொண்டபடி தம்மகன் செயராயலு உயரத்தில் ஒரு செயராக்கினி மாதா உருவம் செய்து அக்கோவிலில் 28—1—1866 ஞாயிறன்று நிலேபெறுத்திப் பூசனே புரிந்து பாமாலேயும் சூட்டி மகிழ்ந்தார்.

*" உன்னையல்லால் இங்கெனக்கோர் துணையும் இல்லையென்றே
அன்னைசெய ராக்கினியே ஆய்ந்தறிந்து நின்னடியேன்
தன்னை இவ்வஞ் சகர்வருத்தத் தாயேசும் மாவிருந்தால்
பின்னையென்னைக் காப்பவர்யார் பேரரசர் குலக் கொடியே!"*

என்பது அம்மாதா பேரில் இவர் பாடிய பாடல்களில் ஒன்று.

இசைத்தமிழ்ப் புலமையும் உடையவர் நாயகர்; பல இசைப் பாடல்கள் இவர் பாடியிருக்கிறார்; மேலும் தம் காலத்திற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னிருந்த பல கிருத்துவ இசைப் புலவர்கள் பாடிய இசைப் பாடல்களைத் திரட்டி, ஒன்று சேர்த்துத் திருத்தி, நான்கு பகுதிகளாக அமைத்து அச்சிட்டு உதவினார். இவருக்குக் குழந்தைச்சாமி முதலியார் முதலிய இசைத்தமிழ்ப் புலவர்கள் மாணுக்கராயிருந்தனர். தேவாரங்கள் பல பாடி மரியன்னையிடம் பின்வருமாறு விண்ணப்பம் செய்துகொண்ட சவராயலு நாயகர் 31—1—1911-ல் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

*" மண்ணளித் தாய்பொன் மணியளித்
தாய்மனை யாகநல்ல
பெண்ணளித் தாய்பிள் ளைகளளித்
தாய்பெரும் பேரளித்தாய்
எண்ணளித் தாய்நல் இசையளித்
தாய்இனி ஏகன்உறும்
விண்ணளித் தாள்மரி யேஇது
வேயென்றன் விண்ணப்பமே."*

## 11. கோடக நல்லூர்ச் சுந்தர முனிவர்

[கி. பி. 1831–1878; திரு. 1862–1911.]

நெல்லையம்பதிக்கு அண்மையிலுள்ள கங்கை கொண்டானில் 3—12—1831 கர ஆண்டு கார்த்திகை மாதம் இருபதாம் நாள் அனுடம் சேர்ந்த சனிக்கிழமை யன்று எக்ஞேசுவரசிவன் என்ற அந்தணுளருக்கும் காமாட்சியம்மைக்கும் திருமகனுகப் பிறந்தார் சுந்தர முனிவர். இவர்தம் தாயும் தந்தையும் இரண்டாண்டு களில் இறந்துபோக, இவருடைய தாய்மாமனுர் வேங்கட சுப்பையர் இவரைக் கோடக நல்லூருக்கு அழைத்துச் சென்று வளர்ப்பாராயினர். சுந்தர முனிவர் தமிழ், வட மொழி ஆகிய கடல்களில் மிக்குயர்ந்த துறைகளை யெல் லாம் கற்றுப் பெரும்புலவரானுர். இவருக்கு அமைந்த பேராசிரியர் வீரவன்நல்லூர்ச் சுந்தர சாத்திரிகள்.

நம் முனிவருக்குச் சானகி என்னும் அம்மை இல்லக் கிழத்தியாக அமர்ந்தனர். இவரும் சிவ பூசனை, அடியார் பூசனை சிறக்க நடத்தி வாழு நாளில், இவருக்கு அடைச் சாணி விசுவேசுவர சாத்திரிகள் ஞானுசிரியராக அமைந் தார். விசுவேசுரர் பூரணம் பெற்ருர். அப்போது இவர் சோமசுந்தரன் திருவருள் நோக்கைப் பெற்ருர். இவர் மதுரை, திருவானைக்கா, திருவையாறு, சீர்காழி, காசி முதலிய பல தலங்களுக்கும் அடியார்கள் சூழ்ந்துவரச் சென்று வழிபாடு செய்து திரும்பினுர்.

சூதசம்மிதை என்பது சிவபெருமானுடைய திருவருள் விளக்கத்தை விளக்கும் ஒப்பற்ற வடமொழி நூல். இதனை இவர் இடைவிடாது படித்துச் செல்லும் இடங் களிலெல்லாம் இதிற்கண்ட உண்மைகளை எடுத்தியம்பி

வந்தார். இவருக்கு வயது இருபத்து மூன்ருயிற்று; இவர் சுத்தமல்லி என்ற சிற்றூரில் சூதசம்மிதைப் பேருரை நிகழ்த்தியபோது, ஒருநாள் குடுமியையும் பூணூலையும் அகற்றித் துறவியானுர்.

இவர் பத்தமடைக்குச் சென்றிருந்தவேளை கன்னடியன் காலில் விழுந்து மடிந்த ஐந்து வயதுச் சிறுவன் இவரால் திருநீறு சாத்தப்பெற்று உயிருடன் எழுந்தான். பத்தமடைக் கீழக் கிராமத்திலுள்ள சிவன் கோவில் இவருடைய தூண்டுதலாற் கட்டப்பெற்று இன்றும் விளங்குகின்றது. திருநெல்வேலியில் ஒரு தீபாவளி நாளன்று இவர் 'உள்ளங்கையில் தீ இருக்கிறது. அதனுல் அதிற் சோறு படாமல் உண்ணவேண்டும்' என்று கூற, உடனிருந்த ஒருவர் அதனை நிலைநாட்டுமாறு வேண்டிக்கொண்டார். உடனே முனிவர் அவருடைய விலையுயர்ந்த மேலாடையை வாங்கி உள்ளங்கையில் தேய்க்க அது தீப்பிடித்து எரிவதாயிற்று. உடனே சோதித்த அவர் இவரை அடிபணிந்து மன்னித்தருள வேண்டிநின்ருர்.

இவர் திருவையாறு முதலிய ஏழு பெரும் தலங்களிலுள்ள சிவன் கோவில்களுக்கும், திருமழபாடிக் கோவிலுக்கும் ஒரே நாளில் திருக்குடமுழுக்குச் செய்து பெரும் பேறு பெற்ருர். அதுபற்றிப் பொருட்கொடை பெற இவர் திருவாவடுதுறைக்கு இசைப்பெருஞ் செல்வர் மா வைத்தியநாத சிவனும் திருநெல்வேலி ஐயாச்சாமிப் பிள்ளையும் முதலாய மாணவர் குழாங்கள் சூழ வந்திருந்தார். அப்போது இவரைக் காண வந்த மாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை கீழே விழுந்து பணிய, எழுந்து நின்று வரவேற்ற இவர் அவரை இரு கைகளாலும் வாரி எடுத்து, "ஒப்பற்ற பெரியீர்! சிவபூசைச் செல்வராகிய தாங்கள்

வணங்கும் பெருமை அடியேனிடத்தில் இல்லை. தங்கள் வணக்கத்தைச் சிவபெருமானுடைய திருவடிக்குச் சேர்த்து விட்டேன்" என்று கூறினார். திருவாவடுதுறையில் ஞானாசிரியராக எழுந்தருளியிருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் தமது ஒடுக்கத்துத் திருவாயில்வரை முன்வந்து இவரை வரவேற்று வேண்டும் துணை புரிந்தார்.

இவர் சிவபெருமானுடைய பெருமைகளை எடுத்தோதும் ஒப்பற்ற சூதசங்கிதை என்ற வடநூற் பொருள்களை, ஏழுநாட்களில், கேட்பார் நெஞ்சிற் பதியுமாறு எடுத்துரைத்து வந்தார். சூத சங்கிதையைத் தமிழில் கவிகளாக மொழி பெயர்த்திருந்தார் தெய்வக்கவிஞர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. அப்பாடல்கள் சரியான மொழி பெயர்ப்பாகவும் மனம்கரைத்து மலம் கெடுக்கும் சீருடையனவாகவும் இருந்தமையால், அவைகளைத் தம் விரிவுரைகளின் இடையிடையே எடுத்துச் சொல்லிக் கேட்பார் உள்ளத்தைக் கவர்ந்து பத்தி நெறியில் ஈடுபடுத்தி வந்தார் சுந்தர முனிவர். கடைசியாக இவர் செட்டி நாட்டிலுள்ள அரிமளம் என்ற நகரிற் சிலகாலம் தங்கியிருந்தார். இவருக்கு வயது நாற்பத்தேழு வந்தது; 1878 வெகுதானிய ஆண்டு ஐப்பசி மாதம் ஆறும் நாள் திங்கட்கிழமை மகத்தில் பகல் இருபத்து மூன்று நாழிகைக்கு இவர் சிவபெருமான் திருவடி நிழலை அடைந்தார். இவர் மண்ணுடல் புதைந்த இடத்தில் மாண்புக் கோவில் ஒன்று எழுந்து திகழ்கின்றது.

இவருடைய வரலாற்றை ஆறு விருத்தப் பாக்களிற் பாடியிருக்கிறார் இவர் மாணவர் திருநெல்வேலித் திம்மராசபுரம் பிச்சு அடிகள். அவற்றுள் ஆறுவது பாட்டுப் பின் வருவது :—

*" திகழும்ஆயிரத் தைம்பத்து நாலாண்டில்*
*செறிவெகுதானிய வருடம்*
*புகழும் ஐப்பசி ஆறும்தெய்தி மகநாள்*
*புகல் கிருட்டினபக்கத் தசமி*
*நிகழ்மகம் பகல் மூன்றுடன் இருப·்தாய்*
*நேர்ந்த நாழிகை அரிமளத்தில்*
*துகளில்சீர் அடியார் சூழ்ந்தினிதிருப்பச்*
*சுந்தரன் கலந்தனன் பரத்தே."*

ஆயிரத்து ஐம்பத்து நான்காம் ஆண்டு என்பது கொல்லம் ஆண்டு. இவர் பிறந்தது கொல்லம் ஆயிரத் தேழாம் ஆண்டு.

சுந்தரமுனிவர் எழுதிய உரைநடை நூல்கள் மூன்று. அவை "சுவாநுபூதிரசாயனம்," "சுவானுபவரசமஞ்சரி," "நிசானந்த விலாசம்" என்பன. இவற்றை இவருடைய மாணவர்களே பதித்துப் பேறுபெற்றுர்கள். சுவாநுபூதிரசா யனத்தைத் திருநெல்வேலிச் சதாசிவத் திருவடியார் என்ப வர் பதித்தார். இந்நூல் உற்பத்திப் பிரகரணம் முதல் இலளிதானுபூதிப் பிரகரணம் ஈருக இருபத்து நான்கு பகுதிகளையுடையது. இதில் எல்லாச் சமையங்களும் ஒரு முடிவையே உடையன என்று கூறியதோடு வேதாந்தம், சித்தாந்தம் ஆகிய இரண்டுக்கும் உள்ள மாறுபாட்டுக்குச் சமாதானம் கூறும் பிரகரணம் படித்துப் பயன் பெறத் தக்கது.

இரண்டாவதாகிய சுவானுபவரசமஞ்சரி இவருடைய மாணவர் கல்லிடையூர் வித்துவான் சிதம்பரநாதக் கவி ராயரால் அச்சிடப் பெற்றது. இது பஞ்சகோசானுபவம் உரைத்தது முதல் அவிமுக்தத்தலமகிமை உரைத்தது ஈருக இருபத்திரண்டு அதிகாரங்களையுடையது. இதில்

திருநீற்றுப் பெருமை, கண்மணிப் [உருத்திராக்கம்] பெருமை, ஐந்தெழுத்துப் பெருமை, சிவலிங்கப்பெருமை முதலிய மெய்ஞ்ஞானப் பகுதிகள் மாணப்பெரியன.

மூன்றுவதாக உள்ளது நிசானந்த விலாசம். இதனை அச்சு இயற்றியவர் இவர் மாணவர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை என்பவர். இப்பேராசிரியர் திருநெல்வேலி மாநகரத்தில் இன்று புகழுடன் விளங்கும் இந்துக் கல்லூரியைத் தோற்றுவித்து, அதன் முதல் முதல்வராக இருந்தவர். பின் அவர் திருவனந்தபுரம் சென்று அரசர் கல்லூரியில் அறிவுத்துறைப் பேராசிரியராக விளங்கினுர். அவர் 'மனோன்மணீயம்' என்ற ஒப்புயர்வற்ற நாடக நூலைச் செய்யுளாக யாத்தமைத்த பெருமை உடையவர். அவர் தம் ஞாஞசிரியராகிய சுந்தரமுனிவரை அந்நாடகத்துள் அரசருக்கு ஆசிரியராகப் புகுத்தி, அவர் வாயிலாகத் தாம் கண்ட பலப்பல உண்மைகளை வெளியிடுகின்றுர்.

நமது முனிவர் இந்த நிசானந்த விலாசத்தில் பதினுன்கு பகுதிகளில் மனத்தை ஒருவழிப்படுத்துவது, பல சமையங்களின் கருத்துக்கள் முதலிய உண்மைகளை உள்ளங்கை நெல்லிக்கனிபோல விஞவிடையாக வெளியிடுகின்றுர். விஞவுவது மாணவன், விடை பகர்வது ஆசிரியர். இம்மூன்று நூல்களும் ஞான நூல்கள்; ஆதலின் நேரிற் படித்தும் தக்கார் வழிக்கேட்டும் உணரும் பெருமையின. இந்நூல்கள் மூன்றையும் ஒன்ருகச் சேர்த்து 1904 குரோதி ஆண்டில் திருநெல்வேலியில் வாழ்ந்திருந்த மாவடிச் சிதம்பரம்பிள்ளையும், பசனை கோ. சிதம்பரம் பிள்ளையும் வெளியிட்டிருக்கிருர்கள். இப்பெரியார் உலகத்துக்கு உய்யும் வழியாக வாழ்ந்து எடுத்துக்காட்டிய உண்மைகள் என்றும் நின்று நிலவுவனவாகுக.

இவருடைய சமாதிக் கோவிலுக்குக் குடமுழுக்கு நடைபெற்றபோது, இவருடைய மாணவர் மா வைத்திய நாத சிவனுடைய தமையனார் இராமசாமி ஐயர் உளமுருகிப் பாடிய பாடல்களிற் சில பின்வருவன:–

*"பொன்பொழி அரிமளமாம் பொன்புரி நிகர்புரியில்*
*முன்மொழி அருண்மிகுநின் முண்டக மலரடியில்*
*அன்பொழி கொடியனுநின் அன்பர்க ளொடுவரலால்*
*துன்பொழி தரவருள்வாய் சுந்தர குருமணியே!"*

*"எந்தைநின் வடிவுறவே எங்கணும் இசைபெறவே*
*இந்திரநகர் வளமே இங்குறும் அரிமளமே*
*சந்தனின் அடியிணையே சந்ததம் ஒருதுணையே*
*சுந்தர குருமணியே! சுந்தரகுரு மணியே!"*

*"வான்மாரி நோக்கும் பயிரெனத் தாய்தன் மதுரமுலைப்*
*பான்மாரி நோக்கும் மகவென உள்ளம் பதைத்து விழி*
*தான்மாரி பெய்ய உடல்புள கிப்பநின் தண்ணருளாம்*
*தேன்மாரி நோக்கும் எனக்கருள் சுந்தர தேசிகனே!"*

போப்பையருக்கும் கோடகநல்லூர்ச் சுந்தர முனிவருக்கும் இடையே வாழ்ந்திருந்த புலவர் சிலரைப் பற்றிய குறிப்புக்கள் பின்வருவன :-

## 12. வை. விசுவநாத பிள்ளை

**[ கி. பி. 1820–1880; திரு. 1851–1911 ]**

இவர் ஈழ வளநாட்டில், சுதுமலை என்னும் ஊரில், சைவ வேளாளராகிய வைரவநாத பிள்ளைக்குத் திருமகனாக கி. பி. 1820 விக்கிரம ஆண்டு கார்த்திகை மாதம் பிறந்தார். 1832-க்குள் தமிழும் வடமொழியும் பயின்று, பின் ஆங்கிலப் பள்ளியிற் சேர்ந்து படித்து, ஆங்கிலத்திலும் வல்லவரானார். இவர் கிருத்தவராகித் தாம் படித்த ஆங்கிலப் பள்ளியிலேயே ஆசிரியராயினார்; உதயதாரகை என்ற கிருத்துவர் தாளுக்கு ஆசிரியராகவும் இருந்தார். பின் இவர் சென்னைக்கு வந்து பி. ஏ.ப் பட்டம் பெற்றார்; பல்கலைக் கழகத்தார் இவரைக்கொண்டு சில ஆங்கில நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துப் பல கல்லூரிகளிற் பாடமாக வைத்தனர்.

ஆறுமுக நாவலர் எழுதிய "சைவ தூடண பரிகாரம்' என்ற நூலுக்கு மறுப்பாக, இவர் "சுப்பிரதீபம்" என்ற நூலை எழுதினார். இருபெரும் புலவர்களும் சிதம்பரத்திற் சந்தித்துச் சொற்போரிட்டனர். அதனால் விசுவநாத பிள்ளை உண்மையுணர்ந்து, தாம் சைவத்தைப் பழித்தமைக்குக் கழுவாயாகத் தம் நாவைப் பொன்னூசியினாற் சுட்டுக் கொண்டார்.

இவர் எழுதிய நூல்களில் மிகச்சிறந்தது "தமிழ் ஆங்கில அகர வரிசை". அது இன்றும் மாணவர்களுக்

குப் பெரிதும் பயனளித்து வருகின்றது. இவர் எழுதிய பிறநூல்கள் வீசகணிதம், காலதீபிகை, கலைஞானம், அட்சரகணிதம் என்பன. "ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்" என்ற நூலுக்கு ஆசிரியராகிய கனகசபைப் பிள்ளை இவருடைய திருமகனுர். விசுவநாத பிள்ளை 21–11–1880-ல் மண்ணுலகை விட்டு மறைந்தார்.

---

## 13. சதாசிவம் பிள்ளை

**[கி. பி. 1820—1896; திரு. 1851—1927.]**

இவர் யாழ்ப்பாணம் மானிப்பாய் என்ற ஊரில் சைவ வேளாளராகப் பிறந்து கிருத்து மதம் புகுந்தார்; ஆங்கிலத்திலும் தமிழிலும் வல்லவர்; யாழ்ப்பாணம் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்ததோடு உதயதாரகைக்கும் தாளாசிரியராக இருந்து வந்தார். ஒரு நூற்றுத் தொண்ணூற்ருறு தமிழ்ப் பெரும்புலவர்கள் வரலாற்றைச் சைமன் காசிச் செட்டித்துரை என்பவர் ஆங்கிலத்தில் எழுதியிருந்தார்; அவற்ரோடு மேலும் இருநூற்றுப் பதினுன்கு புலவர்கள் வரலாறுகளைச் சேர்த்துத் தமிழில் "பாவலர் சரித்திர தீபகம்" என்ற பெயரால் எழுதி, இவர் 1886-ல் அச்சிட்டு வெளியிட்டார். இது மிகவும் சிறந்த நூலாக விளங்குகின்றது. இவர் எழுதிய பிறநூல்கள் திருச்சதகம், நன்னெறி மாலை, இல்லற நொண்டி, வெல்லையந்தாதி முதலிய செய்யுள் நூல்களும், சாதாரண இதிகாசம், வானநூல் முதலிய உரைநடை நூல்களும் ஆகும். இவர் 1896-ல் இறைவனடியை அடைந்தார்.

---

## 14. முகவூர்க் கந்தசாமிக் கவிராயர்

[கி. பி. 1823—1887; திரு. 1854—1918.]

பாண்டி வள நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சேற்றூருக்கு அண்மையில் உள்ள முகவூரில் கந்தசாமிக் கவிராயர் 1823-ல் பிறந்தார். இவருடைய தம்பியார் இராமசாமிக் கவிராயர். புகழ் பெற்ற க. மீனாட்சிசுந்தரக் கவிராயரும், திருவாவடுதுறை ஆதீன வித்துவான் பழநிக்குமாரத் தம்பிரானும் கந்தசாமிக் கவிராயருடைய மக்கள்; இவர் தம்பி மக்கள் மு. இரா. அருணாசலக் கவிராயர், இரா. சுப்பிரமணியக் கவிராயர், மு. இரா. கந்தசாமிக் கவிராயர் என்னும் புகழ்க் கவிராயர்கள்.

இவர் திருவாவடுதுறையில் மேலகரம் பண்டார சன்னிதி சுப்பிரமணிய தேசிகருடன் தாண்டவராயத் தம்பிரானிடம் கல்வி பயின்றார். அக்காலச் சேற்றூர் அரசராக இருந்த முத்துசாமித்துரைமேல் இவரும் தம்பியாரும் சேர்ந்து 'குறவஞ்சி' ஒன்று பாடி அரங்கேற்றினர். அரசர் இவர்களைப் பல்லக்கேற்றி ஊர்வலம் செய்வித்துப் பரிசு பல வழங்கினார். "இன்னவாறு பாடுக" எனக்கேட்டு வாய் மூடுமுன், கவிபல பாடும் ஆற்றல் மிக்க புலவரேறாகிய இவர் 1887-ல் சிவனார் திருவடியைச் சேர்ந்தார்.

## 15. சி. சங்கர பண்டிதர்

[ கி. பி. 1829—1871; திரு. 1860—1902 ]

யாழ்ப்பாணம் சுன்னுகத்தில், சைவ வேளாளராகிய சிவகுருநாத பிள்ளைக்கும் தெய்வானை அம்மையாருக்கும் திருமகனுகச் சங்கர பண்டிதர் 1829 விரோதியாண்டு சித்திரை மாதம் 21உ வெள்ளியன்று பிறந்தார். தமிழிலும் வடமொழியிலும் பெரும் புலமை பெற்ற இவர், சிவ பூசையினை மேற்கொண்டு, சைவ சமைய நூல்களையும் பயின்ருர். இவர் "கிருத்துவ மத கண்டனம்" என்னும் நூலை எழுதியதோடு எங்கும் சென்று சைவ சமைய உண்மைகளை விளக்கி விரிவுரையாற்றி வந்தார். இவர் சிலகாலம் புதுச்சேரியில் வாழ்ந்திருந்து 1871-ல் சிவ பதவியடைந்தார். இவர் எழுதியன சைவப் பிரகாசனம், சிரார்த்த விதி, கிருத்து மத கண்டனம், சிவபூசையந்தாதி உரை, வடமொழியிலுள்ள சிவஞான போதம், சட்சுலோகி, அகநிர்ணயம், அகபஞ்சசட்டி ஆகிய நூல்களுக்குத் தமிழுரை முதலியன. வடமொழியிலும் இவர் பல நூல்கள் ஆக்கியிருக்கின்ருர்.

---

## 16. பம்மல் விசயரங்க முதலியார்

[ கி. பி. 1830—1895; திரு. 1861—1926. ]

இவர் 1—3—1830-ல் பிறந்தார். இவர் சென்னை அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராகவும், பள்ளிக்கூடங்களின் துணைக் கண்காணிப்பாளராகவும் பணிபுரிந்தார். இராபர்ட்சன் ஆங்கிலத்தில் எழுதியுள்ள அமெரிக்க நாட்டு வரலாற்றைத் தூய தமிழில் இவர் மொழிபெயர்த்து 1852-ல் வெளியிட்டார். மூன்ரும் பாடப்புத்தகம் ஒன்று எழுதி அச்சிட்டார். 1896-ல் இவர் இயற்கை எய்தினர்.

---

## 17. மு. இராமசாமிக் கவிராயர்

இ. பி. 1830 –; திரு. 1861 –

நொடிப் பொழுதிலே கவிகள் பல பாடும் பேராற்றல் பெற்ற கவிஞரிற் சிறந்தவராகிய இரமசாமிக் கவிராயர் சேற்றூருக்கு அண்மையிலுள்ள முகவூரில், முகவூர்க் கந்தசாமிக் கவிராயருக்குத் தம்பியராக 1830-ல் பிறந்தார். இவருடைய மக்களே முப்பெரும் புலவர் என்று பெயர் பெற்ற மு. இரா. அருணசலக் கவிராயர், சே. இரா. சுப்பிரமணியக் கவிராயர், மு. இரா. கந்தசாமிக் கவிராயர்.

இவர் சேற்றூர் மன்னர் சுந்தரதாசுத் தேவருக்கு ஆசிரியர். அரசவைப் புலவர். திருவாவடுதுறை, ஊற்றுமலே, எட்டையபுரம், இராமநாதபுரம் முதலிய நகரங்களுக்குச் சென்று, நொடிப் பொழுதிற் கவிகள் பல பாடி ஆங்காங்கே புரவலர்களேப் பாராட்டி இவர் பரிசுகள் பல பெற்ருர்; பெரியகுளத்தினருகேயுள்ள இராயப்பன் பட்டியில் பெரு வள்ளலாக இருந்த இராயப்ப உடையாரைப் பாடிக் குதிரையொன்று பரிசாகப் பெற்ருர். உடையார் இவருடன் சென்றிருந்த இவருடைய நடுமகனுகிய சுப்பிரமணியக் கவிராயருக்குக் குதிரைக் குட்டி ஒன்றை வழங்கி மகிழ்ந்தார். தம் தமையனுருடன் கூடி இவர் சேற்றூர் மன்னர் முத்துச்சாமித்துரையின் மீது குறவஞ்சி பாடிப் பரிசு பல பெற்ருர். இவருடைய கடைசிக் காலத்தில், மதுரைத் தமிழ்ச் சங்கம் கண்ட பாலவனத்தம் அரசர் பாண்டித்துரைத் தேவர் இவருடைய வீட்டுக்கு வந்து இவரைக் கண்டு பாராட்டினர்.

## 18, தா. சின்னத்தம்பிக் கவிஞர்

### [கி. பி. 1830–1878; திரு. 1861–1909.]

இவர் ஈழநாட்டு உடுப்பிட்டிக் கோவிற்பற்றைச் சேர்ந்த தனக்காரக்குறிச்சியில் தாமோதரம் பிள்ளை என்ற செல்வர்க்குத் திருமகனாக 17—4—1830ல் பிறந்தார். இவர் சிறந்த கவிஞராக விளங்கியதோடு நில அளவையிலும் சோதிடத்திலும் வல்லவராகத் திகழ்ந்தார்.

நில அளவைச் சூத்திரம், சோதிடச் சுருக்கம் என்பன இவர் அக் கலைகளில் ஆக்கிய நூல்கள். உடுப்பிட்டியில் சந்திரகுளத்தில் கோவில் கொண்டிருக்கும் வீரபத்திரக் கடவுளிடம் இவர் மாளா அன்பு கொண்டு அப்பெருமான் மேல் 'வீரபத்திரர் சதகம்,' 'வீரபத்திரர் பதிகம்,' 'வீரபத்திரர் ஊஞ்சல்' என்ற செய்யுள் நூல்களைப் பாடினார். மேலும் இவர் அவ்வூரிலுள்ள புதுச் சந்நிதி முருகன், விக்னேசுவரர், வீரமாகாளியம்மன் ஆகிய தெய்வங்களின்மேல் பதிகங்கள் பாடினார். மற்றும் சிவ தோத்திரக் கீர்த்தனை என்ற புகழ்மாலையையும் மதன வல்லி விலாசம், இராம விலாசம் என்ற நாடக நூல்களையும் ஆக்கி இவர் தமிழுலகத்துக்கு உதவினார்.

இவர் தம் பெருஞ் செல்வத்தைக் கொண்டு, தம் ஊரில் பெரிய தமிழ்ப் பள்ளியொன்று அமைத்துத் தாமே ஆசிரியராகிக் கல்வி கற்பித்து வந்தார். தம் நலம் மறுத்து, உலக நலமே கருதி, இல்லற வாழ்க்கையை மேற்கொள்ளாமலிருந்த இக் கவிஞர் 1878ல் [பங்குனி ஐந்தாம் நாள்] சிவபதம் பெற்றார்.

## 19. சி. வை. தாமோதரம் பிள்ளை

**[ கி. பி. 1832 – 1901; திரு. 1863 – 1932.]**

ஈழ வளநாட்டில், சிறுப்பிட்டி என்ற ஊரில், வைரவ நாத பிள்ளை என்பவருக்குத் திருமகனுகப் பிறந்தார் 12—9—1832-ல் நமது தாமோதரம் பிள்ளை. இவர் 1857-ல் பி. ஏ., ப்பட்டம் பெற்றுக் கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியராகவும் 'தினவர்த்தமானி' என்ற தாளுக்கு ஆசிரியராகவும் இருந்து பின் கள்ளிக்கோட்டை அரசினர் கல்லூரி முதல்வராகவும் விளங்கி வந்தார்; 1871-ல் சட்டம் பயின்று பி. எல். பட்டம் பெற்றுர். இவர் கணக்கில் வல்லவர்; அதனுல் இவர் சென்னை அரசினர் வரவு செலவுக் கணக்குத் துறையின் தலைமைப் பதவியைப் பெற்றுர். பின் 1887-ல் புதுக்கோட்டை உயர்நீதி மன்றத்தில் நீதிபதியாக ஆணை பெற்றுர்.

இவர் இங்ஙனம் பல உயர்பதவிகளைப் பெற்றுப் பணியாற்றி வந்தாலும் தமிழ்த் தாய்க்குச் செய்ய வேண்டிய தமது கடமையை மறந்தாரல்லர்; ஒப்பற்ற தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை ஏடுகளிலிருந்து பெயர்த்தெழுதித் தக்கவாறு ஆராய்ந்து அச்சியற்றி வெளியிட்டார். முதலில் இவர் வெளியிட்ட நூல் குமரகுருபர அடிகள் பாடியருளிய நீதிநெறி விளக்கம்; அதற்கு இவர் உரையும் எழுதியிருக்கிறுர்.

1881-ல் வீரசோழியமும், 1883-ல் தணிகைப் புராணமும், 1885-ல் தொல்காப்பியம் பொருளதிகாரமும், 1887-ல் நல்லந்துவனுர் கலித் தொகையும், 1889-ல் இலக்கண விளக்கமும், சூளாமணியும், தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனுவரையமும், 1890-ல் தொல்காப்பியம் எழுத்

ததிகாரத்துக்கும், சொல்லதிகாரத்துக்கும் நச்சினர்க் கினியமும் சிறந்த முறையில் அச்சேறி வெளிவந்தன. இங்ஙனம் வேறு யார் தமிழ்த் தாய்ப் பணி செய்தனர்?

மேலும் இவர் சூளாமணியை உரைநடை நூலாக்கி யும் வெளியிட்டார். "சைவ மகத்துவம்" என்ற உரை நடை நூல் இவரால் எழுதப் பெற்றது. இவர் உயர் பள்ளி மாணவர்க்குப் பயன்படும்படி ஆரும்பாடப் புத்தகத்தையும் ஏழாம் பாடப் புத்தகத்தையும் எழுதி வெளியிட்டார்.

இவருக்கு நெருங்கிய நண்பர் பேராசிரியர் பூண்டி அரங்கநாத முதலியார். அவர் இவருக்குப் பொருட்டுணை செய்தார். அவர் பாடிய 'கச்சிக் கலம்பகம்' என்ற ஒப்பற்ற செய்யுள் நூலுக்குப் பொருமைக்காரர் ஒருவர் மறுப்பு ஒன்று எழுதியமை கண்டு, இவர் மறுப்பின் மேல் மறுப்பு ஒன்று ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டு, அவருடைய கொட்டத்தை அடக்கினர்.

இவர் அகநானூற்றை வெளியிடும் பொருட்டு ஆராய்ந்து கொண்டிருந்தார். அப்பணி முற்றுப் பெறுவ தற்கு முன்னல் 1—1—1901-ல் இவர் ஆண்டவன் திருவடியை அடைந்தார்.

இவர் செய்த தொண்டுகளைப் பாராட்டி ஆங்கில அரசாங்கம் இவர் இறக்குமுன்னே இவருக்கு "இராவ் பகதூர்"ப் பட்டத்தை அளித்துப் பாராட்டியது. திருவாவடு துறை ஆதீனத் தலைவராகிய மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் தமது திருமடத்திலிருந்த ஏடுகளை இவர் கேட்ட போதெல்லாம் கொடுத்துதவி ஆதரித்து வந்தார். இவரும் அவரைத் தமது வழிபடு கடவுளைப்போல வணங்கிப் பல வாழ்த்துப் பாடல்களை மனம் உருகிப் பாடியிருக்கிருர்.

தமிழென்ற சொல் 'திரவிடம்' என்ற சொல்லின் மருவிய உருவமே எனச் சிலர் சொல்லியும், எழுதியும் வந்தார்கள். அவர்கள் கூற்றுப் பெரும் பிழையானது என்பதை இராவ்பகதூர் தாமோதரம் பிள்ளை தாம் அரும் பாடுபட்டுப் பதித்த கலித்தொகை என்ற நூலின் பதிப்புரையாகப் பின்வருமாறு எழுதி யிருக்கிறார்.

## கலித்தொகைப் பதிப்புரை

"அகத்தியர் காலத்தின் முன் தொட்டுள்ள பதினாயிரம் வயதுள்ள தமிழ்ப் பதத்தையும், உச்சியினிபுரத்தில் இரண்டாயிரம் ஆண்டின் முன் பிறந்த திரவிட பதத்தையும் ஒன்றென்றால் யார்தாம் நகையார்? பாட்டன் திருமணத்தில் பேரன் சந்தன தாம்பூலம் பரிமாறினன் என்பதற்கும் இதற்கும் யாது பேதம்? தமிழென்னும் பதத்தை எடுத்தாண்ட அகத்தியர் தொல்காப்பியர் காலத்துச் சம்சுக்கிருத நூலுடையோராய நாரத, வியாச, வசிட்டராதியர் வாய்மொழியினின்று திரவிட சப்தம் வழங்கியதை முதற்காட்டியன்றோ பின்னர் இம்மதம் நாட்டப் புகுதல் வேண்டும்? சிவபெருமான் அகத்தியரைப் பொதிவிற்கு அனுப்பிய கதை காந்தம் முதலிய பழைய புராணங்களில் உளதாகவும், ஆண்டுத் திரவிட சப்தத்தைக் காணகிலமே. ஆலாசிய புராணம், பாகவதம் முதலிய பிற்றைநாள் நூல்களிலன்றோ அது முளைத்தது! 'யான் போகும் இடம் கலை வல்லோரும், முனியவரும் நிறைந்த இடமாதலால், பெருமான்! அவர்கள் மொழியை உபதேசித்து என்னை ஆண்டு அனுப்புக' என்றதன்றித் திரவிடம் என்று கேட்டதில்லையே."

## 20. தொழுவூர் வேலாயுத முதலியார்.

[கி. பி. 1832—1889; திரு. 1863—1920.]

சேலம் மாவட்டம் செவ்வாய்ப்பேட்டைக்கு அருகே தொழுவூரும், சிறுகடலும் இருக்கின்றன. சிறு கடலில் செங்கல்வராய முதலியாருக்கும், ஏலவார்குழல் அம்மையாருக்கும் 1832-ல் திருமகனாகப் பிறந்தார் வேலாயுத முதலியார். இவருடைய தந்தை இளமையிலேயே மறைந்துவிட்டபடியால் இவர் சென்னைக்கு வந்து பெங்களூர்ச் சீரங்கம்மாள் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு, அருட்பா இராமலிங்க அடிகளுக்கு முதல் மாணவராகத் தொண்டு செய்து வாழ்ந்து வந்தார். தக்க பெரியார் கூட்டுறவாலும், இராமலிங்க அடிகளார் அருளாலும் இவருக்குத் தமிழ்ப் பெரும்புலமை அமைந்தது.

இராமலிங்க அடிகள் பாடியருளிய அருட்பாவை இவர் ஆறு திரு முறைகளாகப் பகுத்து வெளியிட்டார். ஆறுமுகநாவலருடைய மாணவர் "தேவார திருவாசகங்கள் தாம் அருட் பாக்கள்; இராமலிங்க அடிகள் பாடியன மருட்பாக்கள்" என்றெழுதிய கண்டனங்களுக்கு இவர் எதிர் மறுப்பு எழுதினார்.

இராமலிங்க அடிகள் சென்னையின் நீங்கி வடலூரை அடைந்து வாழத்தொடங்கினார். அப்போது இவர் தம்மனையாளுடன் அங்கே சென்று அடிகளாருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தார். இராமலிங்க அடிகளார் ஆண்டவன் திருவடியை அடைந்த பின்பு இவருடைய திரு மனைவியாரும் இறந்து விட்டனர். அதனால் இவர் மறுபடி சென்னையை அடைந்து இரண்டாவது திருமணம் செய்துகொண்டு வாழ்வாராயினார்.

பேராசிரியர் பூண்டி அரங்கநாத முதலியாருடைய நட்பு இவருக்குக் கிடைத்தது. அதனால் இவர் சென்னை இராசதானிக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியராக அமர்ந்து பத்தாண்டுகள் சிறப்பாகப் பணியாற்றி வந்தார். 22—2—1889-ல் இவர் ஆண்டவன் திருவடியை அடைந்தார்.

இப்பெரும் புலவர் தமிழ்த்தாய்க்குப் பல புத்தணிகள் புனைந்து போற்றினர். பெரிய புராண வசனம், வேளாண் மரபியல் முதலிய பத்து உரைநடை நூல்களுக்கு இவர் ஆசிரியர். சிவபெருமான் மேலும், மூத்த பிள்ளையார்மீதும், இளைய பிள்ளையாராகிய திருமுருகனைப் பற்றியும் இவர் நாற்பத்தாறு செய்யுள் நூல்கள் பாடியிருக்கிறர். இவர் திருத்தணிகை முருகப் பெருமான்மேல் கசிந்த உள்ளத்தோடு பாடியிருக்கிற சித்திரமாலை, பதிற்றுப்பத் தந்தாதி, வெண்பா அந்தாதி, நான்மணிமாலை, மும்மணிக் கோவை, இரட்டை மணிமாலை, கலம்பகம் என்னும் நூல்கள் படித்துப் பயன்பெறும் பெருமையின.

---

## 21. தா. நெல்லையப்ப பிள்ளை.

[ கி. பி. 1832–1905; திரு. 1863–1936. ]

பல வளமும் பெற்றேங்கி, உலகத்தாயாம் காந்திமதித்தாய் திருவருட் செல்வத்துடன்திகழும் திருநெல்வேலி மாநகரத்தில், திருஞான சம்பந்தப் பெருமான் எழுந்தருளி வந்து, தமது திருவாயால் தேவாரம் பாடிப் பெருமானைப் பணிந்து போற்றினர். திருக்குற்றலத்திலிருந்து எழுந்தருளி வந்த சம்பந்த மூர்த்திகள் நெல்லைமா நகரத்தின்

மேற்குப் பகுதியில் அடியார்களுடன் எழுந்தருளி இருந்தனர். அங்ஙனம் எழுந்தருளியிருந்த இடத்தில் அவருக்கு ஒரு திருக்கோவில் கட்டப்பெற்று, அதில் அவர் திருவுருவம் எழுந்தருளச் செய்யப் பெற்று, இன்றும் பணியும் அடியார்களுக்குத் திரு அருட் பேற்றினை நல்கி வருகின்றது. அத்திருக்கோவிலை ஒட்டிச் சைவவேளாள மரபினர் வாழும் ஒரு தெரு அமைந்தது. அதற்குச் சம்பந்தமூர்த்தி கோவில் தெரு என்று பெயரிட்டு அனைவரும் வழங்கி வருவாராயினர். அது தென்வடலோடிய தெரு. அதன் மேற்கே பின்புறம் தண்பொருநையாற்றுநீர் கோடகன்கால் வழியாக ஓடிச்செல்கின்றது. அத் தெருவில் சம்பந்தர் திருக்கோவிலுக்கருகே மேற்கு வரிசையில் இருப்பது தாசில்வீடு. அது தாசில்தார்கள் வீடு என விரியும். அவ்வீட்டில் தாசில்தார் முத்துக்குமாரசாமிப்பிள்ளை, தம் அருமை மனைவியார் சங்கரவடிவம்மாளோடு வாழ்ந்து வந்தார். அவருக்கு நெல்லையப்பர் திருவருளால் ஒரு மகன் பிறக்க, அவர் நெல்லையப்பன் என்ற பெயரை அக்குழந்தைக்கு இட்டுப் பாராட்டிச் சீராட்டி வளர்த்து வருவாராயினர். நெல்லையப்ப பிள்ளை கற்றுத்தேர்ந்து சிறந்த புலவராயினுர். அவர் உடன் பிறந்த தம்பி சரவணமுத்துப்பிள்ளை என்பார்; அவரும் தா.சில் அலுவல் மேற்கொண்டு மேன்மையுற நடாத்திய பண்பினுல், அவர்கள் வாழ்ந்திருந்த அந்த வீடு தாசில் வீடு எனச் சிறப்புப் பெயர் பெற்றது. அதனுல் நம் புலவர் நெல்லையப்ப பிள்ளை தம்முடைய பெயருக்கு முன் "தா" என்ற குறியீட்டை வைத்துத் தம் பெயரைத் தா. நெல்லையப்ப பிள்ளை என்று வழங்குவாராயினுர்.

அக்காலம் கோவில்களை மேற்பார்த்து ஆளுவதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும், திருக்கோவில் ஆட்சிக்

குழு ஒன்று அரசினரால் அமைக்கப்பெற்றது. அங்ஙனம் அமைந்த நெல்லை மாவட்டக் கோவில் ஆட்சிக் குழுவில், பெரும் புலவரும், பெருஞ் செல்வருமாகிய தா. நெல்லையப்ப பிள்ளை ஒருவராயினர். இவர் திருச்செந்தூரில எழுந்தருளியிருக்கும் செந்திலாண்டவன் திருக்கோவிலுக்கு அறம் காவலருமானார். இவர் திருநெல்வேலியில் தெற்குத் தேர்த் தெருவும், மேற்குத் தேர்த் தெருவும் சந்திக்கும் தென்மேற்கு மூலையில் திருக்கோவில் கொண்டுள்ள சந்தி விநாயகர்மேல் பதிகம் ஒன்றும், கும்மி ஒன்றும் பாடினார்; செந்தில் மேய வள்ளி மணவாளர்மேல் தோத்திரப் பாடல்களும், தனிப்பதிகம் ஒன்றும், திருமலைக் குமாரசாமி மேலும், தென்காசித் தென்பழநி ஆண்டவர் மேலும் தோத்திரப் பாடல்களும் பாடியிருக்கிறார். மேலும் இவர் தம்து குடும்பத்தின் வழிபடு கடவுளாகிய தேவநல்லூர்ச் சோமசுந்தரேசர் மேலும் ஒரு பதிகம் பாடினார். இதனால் இவர் குடும்பத்தினர் நெல்லைக்கு வருமுன்பு தேவநல்லூரார் ஆவர் என்பது தெரிகின்றது.

இவர் உரைநடையாக இரண்டு நூல்கள் வெளியிட்டிருக்கின்றார். அவை, 1. கால்நடை மருத்துவம், 2. சுதர்ம சார சங்கிரகம் என்பன. கால்நடை என்னப் பெறும் ஆடு மாடுகளுக்கு அவைகளின் நோயறிந்து ஏற்ற மருந்து கொடுத்துக் குணம் பெறச்செய்யும் மருத்துவ நூலே கால்நடை மருத்துவம் என்பது.

சுதரும சாரசங்கிரகம் என்பது ஒரு சிறந்த நூல். சுதருமம் என்பது தனக்கு உரிய தருமம்; அதாவது உலகிற் பிறந்த மக்களாவார் ஒவ்வொருவரும் அறிந்து நடக்கவேண்டிய தருமநெறிகள். அவைகளின் சாரத்தைச் சங்கிரகமாக அதாவது சுருக்கமாகக் கூறுவது

இந்நூல். இது 1896-ல் அச்சிடப்பட்டு வெளி வந்தது. இதில் ஆசிரியர், "உலகப் படைப்பைப் பற்றிக் கூறி மக்களாகப் பிறந்த ஆணும் பெண்ணும் அனை வரும் கல்வி கற்றல் இன்றியமையாதது, கல்வியே மெய்ச் செல்வம், மெய்யான அழகும் புகழும் தரும் அணிகலன் என்பதும், தீயகுணங்கள் இவை, நல்ல குணங்கள் இவை என்பதும் நமது வாழ்நாள் இன்றோ நாளையோ, காலையோ மாலையோ, பகலோ இரவோ இந்த நொடியிலோ மறு நொடியிலோ இருக்கும் பொழுதோ நடக்கும் பொழுதோ உண்ணும் பொழுதோ உறங்கும் பொழுதோ வேலை செய் யும் பொழுதோ இப்பொழுதோ அப்பொழுதோ எப் பொழுதோ முடியுந்தன்மையது; ஆதலால் நினைத்த பொழுதே புண்ணியத்தைச் செய்யவேண்டும் என்பதும், அப்புண்ணியங்களுள் மிக்குயர்ந்தது பசியாற்றுதலே என் பதும், அறத்துட் சிறந்தது இல்லறமே என்பதும், திரு மணம் செய்யக்கூடாத பெண் இத்தகையள் என்பதும், திருமணம் செய்தற்கேற்ற பெண்ணின் உயர்குணங்கள் இவை என்பதும், மனைவி தன்னுடைய கணவனிடத்திலே அவனையே தெய்வமாகக் கருதி அன்பு செய்யவேண்டும் என்பதும், மக்கட் பேற்றின் சிறப்பும், குடும்பத்தில் உடன் பிறந்தோர், மாமி, மருமகள் நடந்துகொள்ள வேண்டிய ஒழுக்கமுறை இது என்பதும், தாய்தந்தையருக்கு மக்கள் செய்யவேண்டிய கடமைகள் இவை என்பதும், பிறப்பு இறப்பு என்னும் பேதைமை நீங்கப் பிறவான் இறவான் ஆகிய பெம்மான் திருவடித் துணையைப்பற்றி அவனரு ளாலே அவன் திருவடி அடைதலாகிய முத்திப்பெரும் பேற்றைப் பெறுதலே ஒவ்வொருவரும் அடையவேண்டிய பெரும்பேறு என்பதும், ஆகிய விழுப்பொருள்களை எண்ணிலா மேற்கோள்களுடன் எடுத்து மொழிகின்றார்.

முத்தி நெறியாகிய பத்தி நெறியை இவர் கடைப்பிடித்தொழுகி, 5—12—1905-ல் இறைவன் திருவடி நீழலை எய்தினர். இவருடைய பேரன் மாவட்டப் பத்திரப்பதிவுத் தலைமை தாங்கி ஓய்வு பெற்றுத் தம் புலமையினாலும், தகுதியினாலும், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத் தலைவராகப் பல்லாண்டுகள் விளங்கி, இன்று தாசில் வீட்டின் தலைவராக வாழ்ந்து திகழ்கின்றார்.

---

## 22. மேலகரம் சுப்பிரமணிய தேசிகர்

**[கி. பி. 1833 — 1888; திரு. 1864 — 1919.]**

நெல்லை மாவட்டத்தில் திருக்குற்றாலம் என்பது தேவாரம் பெற்ற புகழுடைய தலம். திரிகூட மலையிலிருந்து இறங்கி வரும் சிற்றாறு இங்கே வடஅருவியாகவும், ஐந்தருவியாகவும், பழைய குற்றால அருவியாகவும் விழுந்து எண்ணற்ற மக்களுக்கு உடல்நலம் அருளி வருகின்றது. தென்காசிப் புகைவண்டி நிலையத்திலிருந்து திருக்குற்றாலத்திற்கு வரும் வழியில், தென்காசி நகருக்கு அடுத்து இருப்பது மேலகரம் என்ற சிற்றூர். அதில் புகழ்மிக்க திருக்குற்றாலத் தல புராணத்தைப் பாடி உதவிய திரிகூடராசப்பக் கவிராயருடைய வழித்தோன்றலாகச் சுப்பிரமணியக் கவிராயர் என்பவர் புகழோடு வாழ்ந்து வந்தார். ஆண்டவன் திருவருளாலே அவருக்கு 1833 விசய ஆண்டு, தைமாதப் பிறப்பன்று, அவிட்ட நாளில் திருமகனார் ஒருவர் தோன்றினர். அவருக்குக் குற்றாலலிங்கம் என்ற பெயர் இடப்பெற்றது. இக்குழந்தை இளமையிலேயே அந்த ஊரிலிருந்த தக்க ஆசி

யரிடத்தில் தமிழும் வடமொழியும் பயின்று வந்தது. பன்னிரண்டு வயது வந்தவுடன், சுப்பிரமணியக் கவிராயர் தம்முடைய திருமகனுரை அழைத்துக் கொண்டு கல்லிடைக்குறிச்சிக்குச் சென்று, அவ்வூருக்குக கிழக்குப் பகுதியாக விளங்கும் திருத்தளிச்சேரியைச் சேர்ந்து, அங்கே திருவாவடுதுறை ஆதீனத் திருமடத்தில் இருந்த அம்பலவாணத் தம்பிரானிடம் ஒப்புவித்துக் கல்வி கற்பிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

குற்றுலலிங்கர் அம்முனிவரிடம் தமிழ் நூல்களை முறையே ஓதி வந்ததோடு அங்கிருந்த வடமொழிப் புலவர் ஒருவரிடம் வடமொழியும் பயின்று வந்தார். அவருடைய ஆசிரியர்கள் இவருடைய நுண்ணறிவையும், விடாமுயற்சியையும் கண்டு மகிழ்ந்து பாராட்டிப் பாடும் சொல்லி வருவராயினர். இரண்டாண்டுகள் இங்ஙனம் கழிந்தன. குற்றுலலிங்கருக்கு வயது பதினுன்கு ஆயிற்று. அப்போது திருவாவடுதுறை ஆதீனத்தின் குரு மூர்த்தமாக எழுந்தருளியிருந்த அம்பலவாண தேசிகர் தென்னாட்டுக்கு எழுந்தருளி மதுரை, நெல்லை முதலிய திருக்கோவில்களை வணங்கிக்கொண்டு திருத்தளிச்சேரிக்கு வந்தார்.

நம் நாட்டு மொழிகளாகிய தமிழ்மொழி, வடமொழி ஆகிய இரு கண்களுக்கும் உறைவிடமாகிச் சிவநெறியைப் பரப்பும் ஞான நிலையமாக விளங்கி வருவது திருவாவடுதுறை ஆதீனம். அதில் குருமூர்த்திகளாக எழுந்தருளியிருப்பவர்கள் சிறந்த ஒழுக்க சீலர்களாகவும் பெரும் புலவர்களாகவும் இருந்து வந்திருக்கிருர்கள். அதனுல் நம்நாட்டுப் பெருஞ்செல்வர்கள் கல்வி வளர்ச்சிக்கும் சமைய வளர்ச்சிக்குமாகத் திருமடத்துக்கு நன்கொடை

தந்து ஆதரித்து வந்திருக்கிறார்கள். அதனால் திருவாவடுதுறை ஆதீனம் பெருஞ் செல்வ நிலையமாகவும் விளங்குகின்றது. அதில் குருமூர்த்தமாக இருப்பவர் பண்டார சன்னிதி எனப்பெறுவார். அவர் தமக்குச் சின்னப்பட்டமாக ஒருவரை நியமித்துத் தம் அருளாட்சியை நடத்தி வருவார். சின்னப்பட்டம் எழுந்தருளியிருக்கும் இடம் கன்னியாகுமரிக்குப் பக்கத்திலுள்ள சுசீந்திரம் என்ற சீரூர். அங்கே தாணுமாலயன் என்ற திருநாமத்தோடு சிவலிங்கப்பெருமான் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றார். அப்பகுதி திருவாங்கூர் மன்னருடைய ஆளுகையிலும், பேராதரவிலும் இருந்து வந்தது. இப்போது அப்பகுதி தமிழ்நாட்டுடன் சேர்ந்துள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிறது. சிறிது காலத்தின் பின் சின்னப்பட்டத்தின் தலைமை இடம் சுசீந்திரத்திலிருந்து கல்லிடைக்குறிச்சியிலுள்ள திருத்தளிச்சேரிக்கு மாற்றப் பெற்றது.

அம்பலவாண தேசிகர் திருத்தளிச்சேரியில் கல்வி பயின்று கொண்டிருந்த மாணவர்களையெல்லாம் சோதித்துப் பார்த்தார்; அவர் தம்முள் நம் குற்றாலலிங்கர் சிறந்து விளங்குவதைக் கண்டார். அவருடைய பேரழகும், நன்னடத்தையும், தேசிகர்பெருமானுடைய மனத்திற் பதிந்து கவர்ந்தன. அதனால் அவர் குற்றாலலிங்கருக்கு ஞான முறைப்படி தீக்கைகளெல்லாம் செய்து வைத்தார். தமக்குப் பின் அவருக்குத் துறைசை ஆதீன முதல்வராக ஆட்சி புரியும் பெரும் பதவியைக் கொடுப்பதற்கும் விருப்பம் கொண்டார். ஒரு நல்ல நாள் பார்க்கப்பெற்றது. அதில் நல்ல வேளையில் இவரைச் சின்னப்பட்டமாக அவர் திருமுழுக்குச்செய்து வைத்தார். அதுமுதல் குற்றாலலிங்கர் என்ற பிள்ளைத் திருநாமம் இவரை விட்டு அகன்று, சுப்பிர

மணிய தேசிகர் என்ற புகழ்ப்பெயர் இவரைச் சார்ந்து விளங்குவதாயிற்று. சுப்பிரமணிய தேசிகர் தம் ஞானுசிரிய ரிடம் ஆதீன ஞான நூல்களை யெல்லாம் ஓதி ஐயம் திரிபு அற உணர்ந்து கொண்டார்.

இவருக்குத் தமிழ் நூல்களை நன்ருகப் பாடஞ் சொல்லியவர் தாண்டவராயத் தம்பிரான். இவர் அவரைத் திருவாவடுதுறையில் தங்கும்படி செய்து, மாணவர்கள் பல ருக்கும், தம்பிரான்கள் பலருக்கும் பாடஞ் சொல்லச் செய்ய வேண்டும் என்ற தம் கருத்தை அத்தம்பிரானிடம் அறிவித் தார். அவர் அப்போது மாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையைப் பற்றி விவரித்து, அவரே இப்பணிக்கு ஏற்றவர் என்று தெரிவித்தார். அதிலிருந்து சுப்பிரமணிய தேசிகருக்கு மீனுட்சி சுந்தரம் பிள்ளையைத் திருவாவடு துறைக்கு வரவழைத்து விடவேண்டுமென்ற கருத்துப் பதிந்தது. ஒரு சமயம் இவர் தமது ஞானுசிரியராகிய அம் பலவாண தேசிகரிடம் தம்முடைய கருத்தை விண்ணப் பித்து, இணங்கும்படி செய்து, மீனுட்சிசுந்தரம் பிள்ளையை ஆதீன வித்துவானுக ஆக்கினுர்.

மீனுட்சி சுந்தரம் பிள்ளை அம்பலவாண தேசிகர் மீது கலம்பகம் ஒன்று பாடி அரங்கேற்றினுர். அப்போது உட னிருந்த சுப்பிரமணிய தேசிகரோடும் ஆராய்ந்து, அம்பல வாண தேசிகர் மீனுட்சி சுந்தரம் பிள்ளைக்கு "மாவித்து வான்" என்ற பட்டத்தை வழங்கினுர். அதன்பின் மீனுட்சி சுந்தரம் பிள்ளை அம்பலவாண தேசிகர்மேல் பிள்ளைத்தமிழ் ஒன்று பாடி அரங்கேற்றினுர். அதில் சப்பாணிப் பருவத் தில், அம்பலவாண தேசிகர் சுப்பிரமணிய தேசிகரை அரு கில் இருத்தி, அவருடைய குண நலன்களைப் பாராட்டி, அடிக்கடி இவருடைய முதுகு தைவருதலைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

*" பொருவாய் தரினு மிலாதவ னேனும் போற்றி*
*வளர்த்த முனைப்*
*பொய்யில் பழக்கம் விடுத்தல னிங்குப் போந்து*
*மெனப்புகல*
*உருவாய் மையுநல் லொழுக்க விழுப்பமு மொள்ளறி*
*வுங்குண னும்*
*உண்மையு மோருபு நந்தி குலத்திற் கொருகதிர்*
*நீ யென்று*
*திருவாய் மலருபு குறுநகை கொண்டொளி திகழ்சுப்*
*பிரமணிய*
*தேவனை முதுகுதை வருமலர் புரையுஞ் செங்கையி*
*ஞன் மணிசால்*
*குருவாய் மாடக் கோகழி யூரன் கொட்டுக சப்பாணி*
*குரவர் சிகாமணி யம்பல வாணன் கொட்டுக*
*சப்பாணி."*

என்பது மீனுட்சி சுந்தரம் பிள்ளை பாட்டு. இதனுல் ஞானு சிரியரும், ஞான மாணவரும், தம்முள் தந்தையும் மகனும் போலப் பழகிய முறை வெளியாகின்றது. (தைவரும் - தடவிக்கொடுக்கும்.)

1869 சுக்கில ஆண்டு ஆடி மாதம் அம்பலவாண தேசிகர் பரிபூரணம் ஆயினுர்; சுப்பிரமணிய தேசிகர் பெரிய பண்டார சன்னிதி ஆயினுர். தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் தம்முடைய ஆசிரிய ராகிய மீனுட்சி சுந்தரம் பிள்ளையோடு துறைசை சென்று முதல் முதலாகச் சுப்பிரமணிய தேசிகரைக் கண்டபோது அவருடைய தோற்றத்தில் மிகவும் ஈடுபட்டு "என் சரித் திரம்" என்றெழுதிய தம் வரலாற்றில் பக்கம் 298, 299-ல் பின்வருமாறு எழுதுகிருர்.

"நாங்கள் மடாலயத்துள் சென்ருேம். மடத்தின் உட் புறத்தில், ஒடுக்கத்தின் வடபுறத்தே, தென்முகம் நோக்கிய

படி தெய்வத்திரு சுப்பிரமணிய தேசிகர் அமர்ந்திருந்தார். மடத்தில் பண்டார சந்நிதிகள் இருக்குமிடத்திற்கு 'ஒடுக்கம்' என்று பெயர். சுப்பிரமணிய தேசிகருடைய தோற்றத்திலே ஒரு வசீகரம் இருந்தது. நான் அதுகாறும் அத்தகைய தோற்றத்தைக் கண்டதே இல்லே. துறவிகளிடம் உள்ள தூய்மையும், தவக்கோலமும், சுப்பிரமணிய தேசிகரிடம் நன்ருக விளங்கின. கவலே என்பதையே அறியாத செல்வரது முகத்தில் உள்ள தெளிவு அவர் முகத்திற் பிரகாசித்தது. அவரது காவியுடை, உருத்திராட்ச மாலே, தலேயில் வைத்துள்ள செபமாலே ஆகிய இவைகள், அவரது சைவத்திருக் கோலத்தை விளக்கின. காதில் அணிந் திருந்த ஆறுகட்டி, சுந்தரவேடம், விரல்களில் உள்ள அங்குட்டம், பவித்திரம் என்பவைகள், தேகத்திலிருந்த் ஒளி, அந்த மேனியிலிருந்த வளப்பம் எல்லாம், அவர் துறவிகளுள் அரசராக விளங்கியதைப் புலப்படுத்தின. அவருடைய தோற்றத்தில் தவப்பயனும் செல்வப் பயனும் ஒருங்கே விளங்கின. அவர் முக மலர்ச்சியிலே, அவருடைய பார்வையிலே, அவர் அமர்ந்திருந்த நிலேயிலே, அவரது கம்பீரமான தோற்றத்திலே, ஓர் அமைதியும், கண்டாரைக் கவரும் தன்மையும், இயல்பாகவே அமைந் திருக்கும் தலேமையும், இரசிகத்துவமும் புலப்பட்டன."

மாணவர் பலர் திருவாவடுதுறையில் மாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளேயிடம் கல்வி பயின்று வந்தார்கள். அப்புலவர் பெருமான் தம்முடைய மடத்தில் இருந்து பாடஞ் சொல்வது மடத்துக்கே ஒரு சிறப்பு என்று இவர் கருதினர். இவரும் அம் மாணவர்களுக்குப் பல நூல்களேப் பாடஞ் சொல்லி ஆதரித்தார். இவர்மீது மீனுட்சி சுந்தரம் பிள்ளே நெஞ்சு விடுதூது முதலிய பிரபந்தங்கள் பாடி வணங்கினர்.

தமது ஆதீன சம்பிரதாயங்களுக்கு மாருக இவர் இரண்டிடங்களில் நடந்திருக்கிருர். மீனுட்சி சுந்தரம் பிள்ளை நோய்வாய்ப் பட்டுத் துன்புற்றிருந்த போது அவர் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று அவரை இவர் பார்த்து வந்தார். பெரிய பண்டார சந்நிதியாக இருப்பவர் தம்பிரான்களை வணங்குவது முறையன்று. இம்முறைக்கு மாருக இவர் மாதவச் சிவஞான முனிவர் சமாதியை வணங்கி வந்தார். மேலும் அவரை "ஆதீன குல தெய்வம்" என்று அடிக்கடி வாய்குளிரப் புகழ்ந்து துதிப்பார். இவர் பாபநாசத்துக்கு வந்து தமது திருமடத்தில் சிலகாலம் தங்கியிருந்த போது விக்கிரமசிங்கபுரத்திற்குச் சென்று, அங்கே மாபாடியம் வகுத்தருளிய சிவஞான முனிவர் பிறந்து விளையாடி வளர்ந்த திருமனையினை அம்முனிவர் பெருமானுக்கு ஓர் அழகான கோவிலாகக் கட்டி, அதில் அவருடைய திருவுருவத்தை நிலைபெறுத்தி, நாடோறும் இரண்டு காலம் பூசனை நடைபெறும்படி திட்டம் அமைத்தார்.

சிவஞான முனிவர் சிவஞான சித்தியாருக்குப் பொழிப்புரை எழுதியிருக்கிருர். அது நன்கு கற்ருருக்கு மட்டுமே பொருள் விளங்குவது. அதனுல் அந்நூலுக்குத் தெளிவான பொருள், அப் பொழிப்புரைக்குச் சிறிதும் மாறுபாடின்றி விளங்கும்படி, இவர் தெளிவான பதவுரை எழுதி உதவினுர். அப் பதவுரையைப் பாராட்டி, மா வித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை பாடிய பாடல்கள் சில பின்வருவன:

" *ஒருபரைநேர் தரவுலகத் துயிர்பலவும் விருத்தியுற*
*ஓம்பி மீட்டும்*
*கருமலவே ரறுத்தருளித் தாளுக்கும் பெருங்கருணைக்*
*கடவுள் ஞானப்*

*பெருவலிய னெமக்கெளியன் பேஞுதார் தமக்கரியன்*
*பெருகா னந்தம்*
*தருதிருவா வடுதுறைச்சுப் பிரமணிய தேசிகன்பொற்*
*சரணஞ் சார்வாம்.''*

*" முற்றுணர்ந்த வருணந்தி சிவனருள்செய் சித்தியெனும்*
*முடிபா நன்னூற்*
*குற்றுணர்ந்த சிவஞான மாமுனிவ னுரைத்தபொழிப்*
*புரையிம் மண்மேற்*
*கற்றுணர்ந்த சிலர்க்கன்றிப் பலர்க்குமுப காரமுருக்*
*கருத்தா ழத்தைச்*
*சற்றுணர்ந்த வெம்மஞேர் களுமிடர்தீர்ந்*
*தெளிதுணரும் தன்மை யோர்ந்து.''*

*" வளர்திருவா வடுதுறையம் பலவாண தேசிகன்கண்*
*மணியாய் ஙாளும்*
*தளர்வறவந் தருள்பொழிசுப் பிரமணிய வெங்கள்குரு*
*சாமி யென்பான்*
*விளர்தருமப் பொழிப்புரையின் விரோதமுருப்*
*பதவுரையாம் விளக்கம் தந்தான்*
*கிளர்தருமற் றவற்கியாது புரிதுமென்றும்*
*பணிதலன்றிக் கிளக்குங் காலே.''*

இவரைத் தம் ஆசிரியராகவும் தெய்வமாகவுமே மீனுட்சிசுந்தரம் பிள்ளே, முனிசீபு வேதநாயகம் பிள்ளே, தாமோதரம் பிள்ளே முதலிய புலவர் பெருமக்கள் போற்றிப் புகழ்ந்து பாடியிருக்கிருர்கள். அவற்றுள் கலித்தொகைப் பதிப்புரையில் தாமோதரம் பிள்ளே பாடி அமைத்துள்ள பாடல்கள் இவை :

*" விண்ணேடு கைலே வழித்தேசிகர்வெவ் விணக்குநெற்றிக்*
*கண்ணுன சுப்பிர மண்ய சுவாமிகள் கான் மலரை*

*நண்ணுத் தலையின் நசைதீரத் தாங்கநற் கோகழிவாய்*
*மண்ணுய்ப் பிறந்தில னேஐய கோ இந்த வையகத்தே!"*

[நசை-ஆசை; கோகழி-திருவாவடுதுறை]

"*சிரமாலை யாகவும் சின்முடியாகவும் செய்யகண்ட*
*சரமாலை யாகவும் யானடியேனுனை யேன்தருவாய்*
*பரமார் கயிலைப் பரம்பரைக் கோகழிச் சுப்ரமண்யா*
*மரமாய் நின் பாத குறடாய் வருதற் கொருவரமே!"*

1—2—1876-ல் மீனுட்சிசுந்தரம் பிள்ளை சிவபதவி அடைந்தார். அதனுல் மனமுடைந்த டாக்டர் சாமிநாதையர் சுப்பிரமணிய தேசிகரை அடைந்து விம்மி விம்மி அழுதார். அப்போது தேசிகர் அவரைக் கையமர்த்தி, "காலத்தை யாரால் வெல்ல முடியும்? அதே வருத்தத்துடன்தான் நாமும் இருந்து வருகிறோம். ஆனுல் உம்மைப்போல் வெளிப்படுத்தவில்லை. பெரிய மணியை இழந்துவிட்டோம். இனி இதைப்பற்றிச் சிந்தித்தலில் பயனில்லை. அவர்களிடம் கேளாமல் எஞ்சியுள்ள நூல்களை நம்மிடம் பாடம் கேட்கலாம். அவற்றைக் கேட்டுச் சிந்தனைசெய்துகொண்டும் புதியவர்களாக வருபவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொண்டும் சௌக்கியமாக நீர் இங்கே இருக்கலாம். அவர்களுடைய பக்கத்தில் இருந்ததுபோலவே நம்முடைய பக்கத்தில் இருந்துவரவேண்டும். இந்த ஊரை உம்முடைய சொந்த ஊராகவே பாவித்துக் கொள்ளும்; வீடு முதலியவற்றை விரைவில் அமைத்துக் கொடுப்போம்; கவலையின்றி இருக்கலாம். பிள்ளையவர்களை மாத்திரம் வருவித்துக் கொடுக்க முடியாதேயன்றி, வேறு இங்கே என்னதான் செய்விக்க இயலாது? உம்முடைய சகபாடிகளாகிய தம்பிரான்களைப் போலவே நீரும் மடத்துப் பிள்ளையல்லவா? உமக்கு என்ன குறைவு?"

என்று, எவ்வளவு தைரியத்தை உண்டாக்க வேண்டுமோ அவ்வளவையும் உண்டாக்கி, அவருக்கு அபயமளித்தார். சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் அங்ஙனமே கருவி நூல்களையும், சமைய நூல்களையும் மாணவருக்கு இனிய உணவோடு அருளிப் பாதுகாத்திருந்து, 1888 சர்வசித்து ஆண்டு, மார்கழி மாதம் இருபத்தைந்தாம் தேதி, சோதி நாளில் சிவபரிபூரணமுற்றருளினுர்.

*" ஞானசம் பந்தனென்பேன் நன்கமைவா கீசனென்பேன்*
*சான முறுசுந் தரனென்பேன் — மானமணி*
*வாசக னென்பேன் வரசுப் பிரமணிய*
*தேசிகனை நாயேன் தினம். "*

*- டாக்டர் உ. வே சாமிநாதையர்.*

---

## 23. நகரம் முத்துசாமிக் கவிராயர்

**[கி. பி. 1834–1899; தி௫. 1865–1930.]**

திருநெல்வேலி மாவட்டம் சங்கரநயினுர் கோவில் வட்டம் சங்கரநயினுர் கோவிலுக்கு மேற்கே எட்டு மைல் தொலைவில் நகரம் என்ற சிற்றூர் இருக்கிறது. அதில் 1834-ல் முத்துசாமிக் கவிராயர் பிறந்து தேவி அருள் பெற்றுத் திகழ்ந்தார். அவர் இயல் இசைத் தமிழ்ப் புலமையும், கூத்துப் புலமையும், சோதிடப் புலமையும் பெற்றிருந்தார். இவரை வீரகேரளம்புதூர் மன்னர் இருதயாலய மருதப்ப பாண்டியரும், கண்டமனூர் வள்ளல் இராமகிருட்டின சாமியப்ப அரசரும் ஆதரித்து வந்தார்கள்.

போடிநாயக்கனூர் மன்னர்மீது அன்னம் விடுதூது, ஆத்திபட்டிச் சங்கிலிவீரப்ப பாண்டிய வன்னியனூர்மீது பள், சாப்டூர்க் குறவஞ்சி, கருங்காலக்குடிக்காதல், புரவி பாளையம் வள்ளல்மீது இசைக்கும்மி ஆகிய நூல்கள் இவர் பாடியன. இவர் பாடிய தனிப்பாடல்கள் எண்ணிறந்தன. இவர் 1899-ல் மறைந்தார்.

---

## 24. இராமானுசக் கவிராயர்

**[ பிறப்பு கி. பி. 1835; திரு. 1866. ]**

இப்பெரும் புலவர் சேதுபதி மன்னர்களுக்குத் தலை நகராகிய இராமநாதபுரத்தில் 1835-ல் பிறந்தார். இவர் வைணவர்.

இவர் சென்னைக்குச் சென்று வண்ணாரப்பேட்டையின் ஒரு பகுதியாகிய சஞ்சீவிராயன் பேட்டையில் வாழ்ந்து வந்தார். அங்கே ஒரு பிள்ளையார் கோவில் இருக்கிறது. அதில் அனுமாரையும் வைத்து அக்கோவிலுக்கு இவர் சஞ்சீவிராயன் கோவில் என்றும், அக்கோவில் இருந்த தெருவிற்குச் சஞ்சீவிராயன் கோவில் தெரு என்றும் பெயர் வைத்தார். நாளடைவில் அப்பகுதி சஞ்சீவிராயன் பேட்டை என்று பெயர் வழங்குவதாயிற்று.

இவர் நன்னூலுக்குக் காண்டிகை உரை ஒன்று எழுதி வெளியிட்டார்; மேலும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை, திருக்குறள் ஆகிய நூல் களுக்கு உரை வகுத்தார். இவற்றுடன் திருவேங்கட அனுபூதி, இலக்கணச் சுருக்கம், குடாரம், ஆத்மபோதப் பிரகாசிகை முதலிய நூல்களுக்கு இவர் ஆசிரியர்.

பின்வரும் தமிழ்ப்பெரும் புலவர்கள் இவருடைய மாணவர்:- திருத்தணிகை விசாகப்பெருமாள் ஐயர், சரவணப்பெருமாள் ஐயர், தாண்டவராய முதலியார், போப்பையர், அட்டாவதானம் வீராசாமிச் செட்டியார், மளவை மகாலிங்க ஐயர்.

## 25. மாம்பழக் கவிச்சிங்க நாவலர்

[கி. பி. 1836 — 1886 ; திரு. 1867 — 1917.]

பழநித் திருப்பதியிலே முத்தைய ஆசாரியாருக்கும், அம்மணி அம்மாளுக்கும் இரண்டாவது திருமகனுக இவர் 1836-ல் பிறந்தார். இவரது மூன்ருவது வயதில் அம்மை நோய் கண்டு இவர் தம் கண்களை இழந்தார்; எனினும் அருட்கடலாகிய முருகப்பெருமான் திருவருளால் இவருக்குத் தெய்வப்புலமை நிரம்புவதாயிற்று. தென் மொழியிலும், வடமொழியிலும், இசை, சோதிடம், சமையநூற் புலமை யாவும் இவரிடம் நிரம்பிக் குதிகொண்டன. நாவன்மை மிக்க நாவலராகவும், இம்மென்னும் முன்னே இருநூறும், முந்நூறும் பாடும் கவிச் சிங்கமாகவும் இவர் விளங்கினர். இவருடைய புகழ் தமிழ்நாடெங்கும் பரவுவதாயிற்று. இராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதி மன்னரும் இவருடைய புகழை அறிந்து நேரிற் காண வேண்டுமென்னும் பேராவல் கொண்டிருந்தார். இவரும் முத்துராமலிங்க சேதுபதியைக் காணும்பொருட்டு இராமநாதபுரத்தை அடைந்து அரசரைக் காணத் தக்க சமயம் பார்த்து அவ்வூரில் தங்கியிருந்தார்.

ஒரு நாள் பேரவை ஒன்று கூடுவதாயிற்று. வட நாட்டிலிருந்து வந்த விசுவநாத பாரதியார் என்னும்

தமிழ்ப் புலவர் சேதுபதி மன்னவர்மேல் ஓர் அந்தாதி பாடி அதனை அரங்கேற்றிப் பரிசுபெறும் பொருட்டு முகவைக்கு வந்திருந்தார். அந்நூல் அரங்கேற்றம் பற்றிக் கூடிய பேரவையே அது என்று மாம்பழக் கவிராயர் அறிந்து தம்மை அறிமுகம் செய்வதற்கு அதுவே தக்க சமயம் என்று கருதித் தாமும் அப்பேரவைக்குச் சென்று உள்ளே செல்ல இடமின்மையால் வாசலில் நின்றுகொண்டிருந்தார். அப்போதுதான் அங்கே வந்து சேர்ந்த விசுவநாத பாரதியார், "இவன் யாரடா குருடன்?" என்று சத்தமிட்டு வழியில் நின்றிருந்த இவரை விலக்கிக்கொண்டு உள்ளே சென்றார். நாவலருக்குத் தக்க சமயம் அதனால் வாய்த்து விட்டது!

'பாரதியார் நூலை அரங்கேற்றத் தொடங்கினர்; அந்தாதி நூறு பாடல்களையும் படித்து முடித்தார். அப்போது தலைவாசலில் இருந்து "நிறுத்தும், நிறுத்தும்! இதனைப் பாடியவர் இவரா? பொய், பொய்!" என்ற ஒலி கேட்டது. அனைவரும் நாவலரைத் திரும்பிப் பார்த்தார்கள். அப்போது அரசர் ஆணையால் புலவர் ஒருவர் வந்து இவரை உள்ளே அழைத்துச் சென்றார். அரசர் இவரைப் பார்த்து "என்ன ஐயா கூக்குரல்?" என்று வினவினர். இவர் "அரசர் பெருமானே! இப்பொழுது இந்தப் புலவர் தங்கள்மேல் பாடியதாகப் படித்த நூறு பாடல்களும் இவர் பாடியன அல்ல. நான் சிறுபிள்ளையாகத் திண்ணைப் பள்ளியிற் படித்துக்கொண்டிருந்தபோது என் ஆசிரியர் பெருமான் இவைகளை எனக்குப் பாடமாக எழுதிப்போட்டதுடன் தக்கவாறு பொருளும் உரைத்தருளினர். இவ்வந்தாதி நூலும் பொருளும் எனக்கு மனப்பாடம். இப்பொழுது வேண்டுமானாலும் ஒன்றுவிடாமல் வரிசையாகச் சொல்லுவேன்" என மொழிந்தார். அப்பொழுது பாரதி

யாருக்கு இவரைத் தாம் இகழ்ந்து தள்ளிவிட்டு அவையி னுட் புகுந்த நிகழ்ச்சி நினைவுக்கு வந்தது. உடனே அவர் "இக்குருடன் வம்புக்காரன்; இவன் பள்ளிக்கூடத்திற் படித்தான் என்பதே முழுப் பொய்" எனப் பகர்ந்தார். இதனைக் கேட்ட அரசர், இவரைப் பார்த்து "அப்படியா னல், சொல்லும் பார்ப்போம்!" என ஆணையளித்தார். உடனே மாம்பழக் கவிராயர் அந்நூறு பாடல்களையும் வரிசையாக ஒப்புவித்ததோடு அவைகளுக்குச் சிறந்த முறையில் பொருளும் உரைத்தார். அரசர் விம்மிதமும், வியப்பும் எய்தினுர்; அவையினர் திகைத்தனர்; பாரதியார் நடுநடுங்கினுர்.

அரசர் சிந்தித்தார். "இவைகளைப் போல எத்தனை நூறு நூறு பாடல்களையும் ஒருமுறை கேட்டவுடனே பிழையொன்றும் இல்லாமல் திரும்பச் சொல்லும் பேராற்ற லுடையவர் இவர். இவர் ஏக சந்தக் கிராகி. இவர் நாம் கேட்டுப் பலமுறை காணவேண்டுமென்று விரும்பிய மாம்பழக் கவியாகத்தான் இருத்தல் வேண்டும்" என்று முடிவு செய்துகொண்டு திடீரென்று தம்முடைய சிங்கம் சுமந்த பேரிருக்கையிலிருந்து இறங்கி, இவரிடம் வந்து இவரை அழைத்துச் சென்று தம் அருகே இருக்கச் செய்து, "தாங்கள் மாம்பழக் கவிராயர்தாமே!" என்று வினுவினுர். இவர், "ஆம், அரசர் பெரும!" என்று மறுமொழி பகர்ந் தார். பாரதியார் ஓடிவந்து கீழே விழுந்து கும்பிட்டு, நாவலருடைய கால்களைப் பிடித்துக்கொண்டு, "நாவலர் பெரும! தங்களை இன்னுரென்று அறியாத அடியேனை மன்னித்தருள வேண்டும்" என்று பணிவுடன் வேண்டிக் கொண்டார். அப்போது நாவலர் பெருமான் பாரதியாரை இரண்டு கைகளினுலும் தூக்கி எடுத்து "அஞ்சற்க, பாரதியாரே! அஞ்சற்க" என்று அவரைக் கையமர்த்தி,

அரசரைப் பார்த்து, "தங்களைப் பார்க்க வேண்டுமென்று பேராவலுடன் இருந்த எனக்கு என்னை வெளிப்படுத்திக் கொள்ளத்தக்க வாயிலாயிற்று இந்நிகழ்ச்சி; மன்னிக்க வேண்டும்; இப்பாடல்களெல்லாம் பாரதியாரவர்கள் பாடியனவே; ஐயமில்லை" என மொழிந்தார். அவையினர் அனைவரும் வியப்புக் கடலுள் முழுகிக் கரையேருமல் நின்றனர். முத்து இராமலிங்க சேதுபதி மாம்பழக் கவியை மார்புறத் தழுவிப் "புலவர் பெரும! தங்களை நேரிற் கண்டு தங்களுடைய பெருமையை அறிந்து பாராட்டி மகிழும் நல்ல காலத்தை இன்று ஆண்டவன் அருளினுன்!" என்று புகழ்ந்து பாராட்டி இவருக்குத் தக்க பரிசுகள் நல்கி இன்புற்றுர். பாரதியார் தம்முடைய அரங்கேற்றத்தைத் தொடங்கி நடத்துவாராயினுர்; ஒவ்வொரு பாடலுக்கும் பொருள் விரித்துரைத்தார். சேதுபதி மன்னரும் அவருக்கு உடன் பிறந்தாராகிய பொன்னுச்சாமித் தேவரும் பாரதியாரைப் பாராட்டி அவருக்கு வரிசைகள் பல வழங்கினுர்கள்.

அன்று முதல் மாம்பழக் கவிராயர் சேதுபதி அரசருடைய அவைப் புலவராக இருந்து தம்முடைய புலமையை விளக்கி வந்தார். அரசர் இவரைப் பாராட்டிக் "கவிச் சிங்கம்" என்ற பட்டத்தை இவருக்குச் சூட்டினுர். "இன்னவாறு பாடுக, இங்ஙனம் சிலேடைக் கவி அமைக்க" என்று கூறுமுன் ஒரு நொடியும் தாமதியாது மாம்பழக் கவிச் சிங்க நாவலரிடமிருந்து விடைப் பாடல் வெளிவந்து நிற்கும். இங்ஙனமாக இவர் பாடிய பாடல்கள் எண்ணற்றன.

இவருக்கு இருபத்தேழாம் வயதில் திருமணம் நடைபெற்றது. இவர் இருபத்தோராண்டுகள் தம் மனைவியாரோடு இல்லறம் சிறப்புற நடத்தி வந்தார். இவர் திருவரு

4.

ளால் தமது முடிவு காலம் இது என அறிந்து உற்ருர், உறவினர், மாணவர் இவரைச் சூழ்ந்து இவர் ஆணைப்படி "அரகர! அரகர!" என முழங்கி நிற்க,

*"என்னபிழை யான்செய் திருந்தாலும் எண்ணுமல்*
*அன்னபிழை யெல்லாம் அகற்றியின்னே–நின்னுடைய*
*பாதநிழல் நல்கியெனைப் பாலித்துக் கொள்சமயம்*
*நீத!குக னே!நம்பி னேன்"*

என்று பாடிக்கொண்டு 1844 தாருண ஆண்டு மாசி மாதம் வளர்பிறை ஒன்பதாம் நாள் ஆண்டவன் திருவடியை அடைந்து இன்புற்ருர். இனி, இவர் பாடிய நூல்களை ஆராய்வோம்.

கவிச்சிங்கம் நோய்வாய்ப்பட்டிருந்த போது அதனை நீக்கியருளப் பழநி ஆண்டவர் மேல் 1. "பழநி வெண்பா வந்தாதி," 2. "பழநாபுரிமாலை," 3. "பழநிக் கோவில் விண்ணப்பம்" முதலிய நூல்களைப் பாடித் தொழுதார். 'பழநி வெண்பாவந்தாதி' நூறு பாடல்களையுடையது. இவர் பெருமானை நோக்கி,

*"விடத்தாலோ தொல்லை வினையாலோ வீண்சங்*
*கடத்தாலோ மாதர் கலவி — நடத்தாலோ*
*ஏதினு லோவிளைந்த இந்நோயாற் றேன்பழநி*
*ஆதிபர தீர்த்துரனுண் டாக்கு."* (57)

*"ஏற்றுநடை யாள ரெனினும் பிணிப்பட்டால்*
*ஆற்றுவது சால அரிதன்ரே — போற்றுவதும்*
*ஓராய்நான் என்னசெய்வேன்? ஓகோ பழநியப்பா*
*தாராயோ தேகசுகத் தை."* (59)

*"தையலா ரும்பிறருந் தாமொவ்வோர் தன்மைஎன்ன*
*மையலா ரும்பிணிக்குள் வாடுவனே — மொய்யலர்சூழ்*
*நந்தவனத் தென்பழநி நாயகா நீயெனையாள்*
*இந்தவனத் தந்தவிர்த்தே ஈண்டு."* (60)

என்றெல்லாம் பாடி வாடுகிருர். பழநாபுரி மாலையும் நூறு பாடல்களையுடையது. அதில் இவர்,

*"சூலைகிரந்தி மகோதரம் குன்மம் சுரம்குளிர்கா*
*மாலை பவுந்திரம் குட்டமுதற்பிணி மற்றவுநின்*
*காலை நினைத்தவர் பாற்சார்வ வோ?என் கசடொழிப்ப*
*ஆலை மருங்குய ரும்பழ நாபுரி யாண்டவனே!"* (74)

"சோபத்தை யும்பவத் துன்பத்தையும் கெட்ட துட்டமனத்
*தாபத்தை யும்பகைக் காலப்பிசகையும் சண்டநமன்*
கோபத்தை யும்பிணிக் கோரத் தையும்என் குறையையும்எவ்
*வாபத்தை யும்தவிர்ப் பாய்பழ நாபுரி ஆண்டவனே!"* 90

என்று பாடித் தம் நோய்த் துன்பத்தைத் துடைத்தருள வேண்டுகிருர்.

பழநிக் கோவில் விண்ணப்பம் என்னும் நூல் கலி விருத்தம், அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், கொச்சகக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை, கலி நிலைத் துறை, வஞ்சித்துறை, எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் ஆகிய பல பாவினங்களால் அமைந்த நூற்றிருபது பாடல்களையுடையது. அதில் இவர் கலிநிலைத் துறையாக,

*"இந்த மானுட வுடல்கிடைத் துளதரி திடையில்*
*வந்த தீவினை யன்றிநோ யுங்கொள வசமோ*
*சொந்தன் நீயுன தடிமைநான் அருள்செய்பூஞ் சோலைப்*
*பந்தர் சூழ்தரு பழநிவாழ் சரவண பவனே!"*

*"கருவ மேமுதல் இழிந்ததீக் குணமெலாங் கலந்தோர்*
*உருவ மாகிய எனக்குனை யலதுதிக் குளதோ?*
*வெருவ நீயெனை விட்டிடேல் விரைந்துநோய் விலக்கப்*
*பருவ மீதருள் பழநிவாழ சரவண பவனே!"* 6

என்று நெஞ்சுருகிக் கதறுகின்றார்.

மேலே கண்ட பாடல்களின் பொருள் வெளிப்படை. நோயாலோ, மிடியாலோ, வேறு காரணத்தாலோ துன்புறுகிற கவிஞர்கள் துன்பத்தை அகற்றும்படி ஆண்டவனை நோக்கிப் பாடுகின்ற பாடல்கள் பலருக்கும் பொருள் தெளிவாக விளங்குவனவாகவே இருக்கும். இவர் பாடிய பிற முதன்மையான நூல்கள் 'பழநி நான்மணிமாலை' [40 பாடல்கள்] 'குமரனந்தாதி' [105 பாடல்கள்], 'சிவகிரி யமக அந்தாதி'. இந் நூல்கள் பொருள் செறிந்தனவாய்க் கற்றாருக்கே விளங்குவனவாய்ப் புலவருக்குப் பெருவிருந்தாய்த் திகழ்கின்றன. குமரனந்தாதிக்குப் பொருள் சொல்ல வேண்டுமென்று மாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் புலவரொருவர் பணிந்து கேட்டுக் கொண்டார். அவ்வந்தாதியைப் படித்திராவிட்டாலும் மாவித்துவான் அன்புடன் அவருக்குப் பாடல்களின் பொருள்களை விளங்க உரைத்தார். அப்போது அந்நூலின் நடையை மிகவும் பாராட்டி மீனாட்சிசுந்தரம் பிள்ளை "மாம்பழக் கவிராயர் நல்ல தமிழ்க்கவிஞர்; கவிராயருடைய செய்யுளை முதன் முறை கேட்டது இங்கே தான்." என்று புகழ்ந்து கூறினார்.

பழநி ஊர் முத்தமிழ்க் கவிச் சக்கரவர்த்தியாகிய மு. மாம்பழக் கவிச்சிங்க நாவலர் இயற்றியருளிய பிரபந்தத் திரட்டு என்ற நூல் இரண்டு பாகங்களாக ஒருசேரத் தொகுக்கப்பெற்று 1908 ல் மதுரை விவேகபானு

அச்சுக்கூடத்தில் அச்சேறி விளங்குகிறது. முதற் பகுதியில் மேலே கண்ட நூல்களும் வேறு பதிகங்களும் இருநூற்றைம்பது பாடல்களுடைய சிங்கார ரச மஞ்சரியும் அடங்கியுள்ளன. இரண்டாம் பாகத்தில் நூற்றிரண்டு பாடல்களையுடைய சந்திர விலாசமும், முந்நூற்றுமூன்று பாடல்கள் கொண்ட தனிச் செய்யுட்கோவையும் அடங்குவன. சேலம் மாவட்டம் வேளுக்குறிச்சி அரசர் வேலப்பக் கவுண்டர்மீது இயற்றப் பெற்றது சந்திர விலாசம். இந் நூல் சிலேடை அணியிற் சிறந்தோங்கியது. தனிச் செய்யுட் கோவையில் இவராற் பாடப்பெற்ற பெரியோர்கள் இராமநாதபுரம் பொன்னுச்சாமித் தேவர், முத்து இராமலிங்க சேதுபதி, வேளுக்குறிச்சி வேலப்பக் கவுண்டர், சேலம் மாவட்டம் திருச்செங்கோட்டுத் தாசில்தார் மானு வேல்துரை, கோம்பை அரசர் திருமலே சக்கப்பாச்சிதுரை, மருங்காபுரி மன்னர் சீரங்ககிருட்டின முத்துவீரப்பூச்சைய துரை, கடவூர் மன்னர் முத்தைய துரை, கன்னிவாடி அரசர் குமரமலேயாண்டியப்பையதுரை, பாகற்பட்டி வள்ளல் அரங்கசாமிப் பிள்ளே, போடிநாயக்கனூர்க் காமராச பாண்டியதுரை, சிவகங்கை அரசியார் முதலியோர் ஆவர்.

இவர் பாடியிருக்கிற சித்திரக்கவிகளும் எண்ணற்றன. புதுமையான விசித்திர இரட்டை நாக பந்தம் ஒன்று வேலப்ப பூபதிமேல் அவர் பாடு எனக் கேட்டவுடனே இவர் பாடி அவரை மகிழ்வித்தார்.

சொக்க நகரில் ஆபத்துக்காத்த பிள்ளே என்பவர் ஒருவர் இருந்தார். அவரும் மாம்பழக் கவியும் பேசுவது போலவே இருக்கும். ஆனல் அது கவியாக அமைந்திருக்கும். ஒருநாள் அவர் இவரைப் புகழ்ந்து பேசிய பேச்சு இது :

"கம்பனும், ஒட்டக்கூத்தனும், புகழேந்தியும், ஔவையும், காளமேகமும், படிக்காசுத் தம்பிரானும், பரஞ்சோதி முனிவனும், சிற்றம்பலமும், வெண்பாப்புலியும், வாலசிம்மமும் மற்ற வித்துவான்களும், பழநி மாம்பழக்கவிச் சிங்கத்துக்கு இணையா? உலகத்தாரே."

இப்பேச்சு விருத்தமாவதைப் பாருங்கள்!

விருத்தம்

*"கம்பனுமொட்டக்கூத்த னும்புகழேந்தியுமவையும் காள மேக*
*மும்படிக்கா சுத்தம்பி ரானும்ப ரஞ்சோதி முனிவ னுஞ்சிற்*
*றம்பலமும் வெண்பாப்பு லியும்வால சிம்மமுமற்ற வித்துவான்க*
*ளும்பழநி மாம்பழக்க விச்சிங்கத் துக்கிணையா வுலகத்தாரே."*

ஆபத்துக்காத்த பிள்ளை மாம்பழக் கவியிடம் சொல்லிய மற்ருெரு பேச்சு இது: "முன்பு போசன் சமுகத்திலிருந்த காளிதாசன் போலிலை யெந்த வித்துவானும் என்பார்கள். நல்ல புத்திமான் மாம்பழக் கவிச்சிங்கத்துக் கொப்பில்லை யென்பேன் நிச்சயமிது."

இப்பேச்சு வெண்பாவாவதைப் பாருங்கள்!

வெண்பா

*"முன்புபோ சன்ச முகத்திருந்த காளிதா*
*சன்போ லிலையெந்த வித்துவானு — மென்பார்கள்*
*நல்லபுத்தி மான்மாம் பழக்கவிச்சிங் கத்துக்கொப்*
*பில்லையென்பேன் நிச்சயமி து."*

# 26. பொன்னுச்சாமித் தேவர்

[இ. பி. 1837 — 1870; திரு. 1868 — 1901.]

இராமநாதபுரத்திற்குத் தென்கிழக்கே பதினறு மைலில் உள்ள புதுமடத்தில் சிவஞானத் தேவருக்கும், முத்துவீராயி நாச்சியாருக்கும் திருமகனுகப் பொன்னுச்சாமித்தேவர் 1837-ல் பிறந்தார். இவருக்குத் தம்பியாக 1841-ல் பிறந்த துரைராசா என்பவரே, பிற்காலத்தில் முத்துராமலிங்க சேதுபதியாக 1847-ல் முடிசூட்டப் பெற்ருர். உடன்பிறந்தார் இருவரும் பெரும்புலமை பெற்றுத் தமிழ்ப்பெரும் புலவர்களை ஆதரித்து வருவாராயினர். இவர்கள் ஒருசமயம் பேசிக்கொண்டிருந்த போது தமையனர்

> "ஊக்கமிலார் கைமீதுறைகழித்த வாளேந்திப்
> போர்க்கெழுதல் நானன்ருே போர்வேந்தே."

என்று ஒரு வெண்பாவின் முற்பகுதியைப் பாடத் தம்பியாகிய சேதுபதி மன்னர் உடனே

> — நீக்கமறப்
> *புக்கபுகழ் நீயிருக்கப் புல்லியேனும்தமிழை*
> *மிக்குரைத்தல் குற்ற மன்ருே விள்."*

என அவ்வெண்பாவின் பிற்பகுதியை முடித்து மறுமொழி கூறினர்.

மாம்பழக் கவிச்சிங்கம் இவர்களுடைய அரசவைப் புலவராக இருந்தமை அவர் வரலாற்றிற் கண்டோம். பொன்னுச்சாமித் தேவர் ஆறுமுக நாவலரைக் கொண்டு திருக்குறள் பரிமேலழகர் உரை, திருக்கோவையார் உரை,இலக்கணக்கொத்து முதலிய நூல்களை அச்சிடச் செய்து பெரும் பொருள் உதவி ஆதரித்துத் தமிழை வளர்த்தார்.

ஒரு சமயம் பொன்னுச்சாமித்தேவர் சென்னைக்குப் போகும் வழியில் திருச்சிராப்பள்ளியில் பெரும் புலவர் தியாகராசச் செட்டியாரைக் கண்டு அளவளாவி இருந்தார். அப்போது அவர்களுக்குள் பாண்டிநாடோ, சோழநாடோ, எது சிறந்தது?" என்ற ஆய்வு நடந்தது. தேவர், 'பாண்டி நாடே சிறந்த'தென்று! பல ஏதுக்கள் காட்டிப் பேசினுர். செட்டியாரோ 'சோழநாடே சிறந்தது' என்ருர். இருவரும் பேசிக்கொண்டே உலாவப் புறப்பட்டுக் காவிரி ஆற்றின் மேலுள்ள பாலத்தின் நடுப்பகுதியை அடைந்து இரு புறமும் உள்ள கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு மெய்ம்மறந்து நின்றனர். அப்போது தேவர் தம்மை யறியாமலே,

*"தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே*
*மண்ணுவதும் சோழ மண்டலமே.*

என்ற பாடற் பகுதியை இன்னிசையோடு பாடினுர். உடனே செட்டியார் இவரை இடைமறித்து, "மன்னர் பெரும! தாங்களே இப்போது சோழவள நாட்டின் சிறப் பைப் புகழ்ந்து பாடினீர்கள்! அதனுல் என்கட்சியே வென்றது" என்ருர். நுண்ணறிவுக் கடலாகிய புலவர் பொன்னுச்சாமித் தேவர், "இல்லை, இல்லை. என்கட்சிதான் வென்றது, நான் எடுத்துச் சொல்லிய பாடலில் ஏகாரம் எதிர்மறைப் பொருளது" என்ருர். உடனே செட்டியார் தேவரைப் புகழ்ந்து பாராட்டினுர்.

ஒரு சமயம் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் மதுரைக்கு வந்திருந்தார். அப்போது பொன்னுச்சாமித் தேவர் தேசிகரைத் தம்முடைய மாளிகையில் எழுந்தருளச் செய்து மிகவும் சிறப்பாக அடியார் பூசனை நடத்தி நகர் வலம் முதலிய பெருமைகள் செய்வித்ததோடு துதியாகச்

சில பாடல்களையும் இயற்றி விண்ணப்பித்தார். அதனை அறிந்த மாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இவர் மேல் நான்கு பாடல்கள் பாடி இவருக்கு அனுப்பினார். அவற்றுள் மூன்றும், நான்கும் பின் வருவன:-

*"சொன்னயமும் பொருணயமு மணிநயமுங் கற்பனை*
*யாச் சொல்லாநின்ற*
*நன்னயமுந் தொடைநயமும் வனப்புநய மும்பிறிது*
*நாட்டா நிற்கும்*
*எந்நயமுஞ் சிற்சிலவே பிறர்க்கமையு நினக்கமைந்த*
*எல்லாமென்னிற்*
*பன்னயமு முணர்பொன்னுச் சாமிமகி பாநினது*
*பாட்டெற்றுமே!"*

*"செறிபொழிலா வடுதுறைச் சுப்பிரமணிய தேசிகனும்*
*சிவனை நாளும்*
*பொறிவளர்வண் டுவாதசாந் தத்தலத்து வரவழைத்*
*துப் பூசை செய்தாய்;*
*நறியமலர்த் தொடைத்தடந்தோட் பொன்னுச்சாமிச்*
*சுகுண நரேந்திர! நின்னை*
*அறிவின்மிகப் பெரியனென யாவருஞ்சொல் வாரதனுக்*
*கைய மின்றே."*

இவருடைய தம்பி முத்து இராமலிங்க சேதுபதி சரசசல்லாபமாலை, முருகர் அநுபூதி, நீதிபோத வெண்பா, பிரபாகரமாலை முதலிய நூல்களுக்கு ஆசிரியர். பொன்னுச்சாமித்தேவர் தமது முப்பத்து மூன்றுவது வயதில் ஆண்டவன் திருவடியை அடைந்தார்.

## 27. மதுரைச் சபாபதி முதலியார்

[ கி. பி. 1837—1898; திரு. 1868—1929. ]

சைவ வேளாளராகிய சபாபதி முதலியார் திருக்குளந்தை நகரில் 1837-ல் பிறந்தார். இவர் தமிழில் பெரும் புலமை பெற்றதோடு வடமொழியிலும், ஆங்கிலத்திலும் தக்க புலமை பெற்ருர். இருபத்திரண்டு ஆண்டுகள் அரசினர் உயர் பள்ளியில் தமிழாசிரியராக விளங்கியதோடு ஓய்வுபெற்ற பின்னரும் இவர் தம்மை வந்தடைந்த மாணவர்களுக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்பித்து வந்தார். திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத் தமிழ், மதுரை மாலை, திருப்பரங்குன்றத்தந்தாதி ஆகிய நூல்களைச் சபாபதி முதலியார் பாடினுர். இவருடைய மாணவருள் தலைசிறந்தவர் பரிதிமாற் கலைஞர் என்ற வி. கோ. சூரியநாராயண சாத்திரியார். அவர் மதுரை மாலையைப் பற்றிப் பாடியபோது இவர் தம் ஆசிரியர் என்பதையும் எடுத்து மொழிகின்ருர். அவ்வெண்பா வருமாறு :

*" மாமதுரை மாலை மடக்கோ டியமகமும்*
*காமர் சிலேடையும் காட்டிமுதற் — பாமருவத்*
*தண்டமிழா சான்எம் சபாபதிப்பேர் வள்ளல்சுவைக்*
*கண்டமிழ்தாத் தந்தான் கனிந்து."*

## 28. பெரும்புலவர் கந்தசாமி முதலியார்

[ கி. பி. 1838—1890; திரு. 1869—1921. ]

பெரும்புலவர் கந்தசாமி முதலியார் கருவூரில் உலகநாத முதலியாருக்கும், பார்வதி அம்மையாருக்கும் திருமகனாக 1838-ல் தோன்றினார். தமிழ்ப் பெரும் புலமையும் வழக்குரை புலமையும் பெற்ற இவர் கோயமுத்தூரில் வழக்கறிஞராகப் பணியாற்றி வந்தார். கோயமுத்தூர் மாவட்டக் கோவில் ஆட்சிக் கழகத்தில் இவர் உறுப்பினராகித் திருப்பேரூர்க் கோவிலுக்குப் பெரும் பணிகள் பல புரிந்தார். திருப்பேரூர்ப் புராணம், அவிநாசிப் புராணம், திருமுருகன் பூண்டிப் புராணம், திருக்கருவூர்ப் புராணம், பவானி என்னும் திருநணுப் புராணம் ஆகிய தல புராணங்கள் இவரால் அச்சேறி வெளிவந்தன. கொடுமுடிப் புராணத்தில் சில பகுதிகளை இவர் பாடினார்; அதனை இவருடைய மாணக்கர் வேங்கட ரமணதாசர் பாடி முடித்தார். கிருத்துவம் பரவவிடாமல் இவர் தம்மால் இயன்ற தடைகளைச் செய்தார். "சைவப் பிரசங்க சாலை" என்னும் நிலையம் 1866-ல் இவரால் அமைக்கப்பெற்றது.

திருப்பேரூர்க் கிள்ளை விடுதூது, திருப்பேரூர் மும்மணிக் கோவை, திருப்பேரூர்ப் போற்றிக் கலிவெண்பா, திருப்பேரூர் மாலை, மரகதவல்லி அம்மன் மாலை, திருப்பேரூர்ப் பச்சைநாயகி அம்மையார் ஊசல் முதலிய சிறந்த நூல்களுக்கு இவர் ஆசிரியர். இவர் 1890-ல் சிவபதவி அடைந்தார். பெரியபுராணப் பேருரையை வகுத்துதவிய சிவக்கவிமணி கோ. க. சுப்பிரமணிய முதலியார் இவருடைய திருமகனார்.

## 29. தண்டபாணி அடிகள்

[ கி. பி. 1839—1898; திரு. 1870—1929. ]

திருநெல்வேலி மாநகரத்தில் செந்தில்விநாயகம் பிள்ளைக்கும், பேச்சிமுத்து அம்மையாருக்கும் திருமகனாக 1839 விகாரி ஆண்டு, கார்த்திகை மாதம் பதினாறும் தேதி அத்த நாளில் தண்டபாணி அடிகள் பிறந்தார். இவருக்குச் சங்கரலிங்கம் என்ற பெயர் இடப்பெற்றது. இவர்தம் தந்தையார் இவருடைய ஆறும் வயதிற் சிவபதவி அடைந்தார்.

இவருடைய தந்தையாரின் நண்பர், சீதாராம நாயகர் இவருக்கு வேண்டிய உதவிகள் செய்துவந்தார். அவர் ஒரு மந்திரவாதி. அவர் இவருக்கு முருகன் ஆறெழுத்து மந்திரத்தை ஓதினார். இவருக்குக் கவிபாடும் ஆற்றல் இயல்பாகவே தோன்றியது. முருகப் பெருமான்மேல் பாடல்கள் பாடி முருக வழிபாட்டில் இவர் ஊன்றி நின்ற படியால் இவரைப் பலரும் "முருக தாசர்" என அழைப்பா ராயினர். அப்போது இவருக்கு வயது பதின்மூன்று. "ஊன் உண்ணும் பொருட்டு ஆடு, மாடு, கோழிகளைப் பலியிட்டுத் தின்பவர்களும், வேள்வி செய்து உயிர்ப்பலி யிட்டுப் புலால் உண்பவர்களும் இரக்கமில்லாத பாவிகள். எல்லா உயிர்களையும் கோயிலாகக் கொண்டு ஆண்டவன் எழுந்தருளியிருக்கின்றான்; ஆதலின் அவைகளுக்கு இடையூறு செய்வதை அவன் பொறுக்கமாட்டான்" என்ற கொள்கையை இவர் பரப்பி வந்தார்.

முருகப் பெருமானை நேரிற் கண்டு அருள்பெற வேண்டுமென்ற பேரவா இவருக்கு இருந்தது. இவர் என்ன பாடி முயன்றும் முருகன் வாராமை கண்டு உள்ளம் கலங்கித் திருமலைக்குச் சென்று முருகப் பெருமானிடம்

தம்முடைய வேண்டுதலைத் தெரிவித்துக் கொண்டார். அங்கும் இவருக்கு முருகன் காட்சியருளவில்லை. அதனால் இவர் ஒருநாள் அம்மலை மீதிருந்து கீழே உருண்டு விட்டார். ஆனால் அதில் இவர் சில சிறு காயங்களோடு உயிர் தப்பினார்.

இவர் துறவற வாழ்க்கையை மேற்கொண்டார். அருணகிரி நாதருடைய திருப்புகழைப் போல இவர் பல சந்தப் பாடல்களைப் பாடியபடியால் *"திருப்புகழ்ச் சாமிகள்"* என்ற பெயரும், கையில் எப்போதும் தடியொன்று வைத்திருந்தபடியால் "தண்டபாணி அடிகள்" என்ற பெயரும், (தடி–தண்டம், பாணி–கை.) வண்ணப் பாட்டுக்கள் எண்ணற்றன பாடிய படியால் "வண்ணச் சரபம்" என்ற பெயரும் இவருக்கு அமைந்தன.

இவர் நெல்லையிலிருந்து புறப்பட்டுச் சென்னைக்குச் சென்று அங்கே கந்த கோட்டத்தில் கோவில் கொண்டுள்ள திரு முருகனை வழிபட்டுப் 'பிள்ளைத் தமிழ்' ஒன்று பாடினார். இவர் நாடோறும் செய்யும் வேல் வழிபாட்டிற்குப் பொருள் மிகுதியும் செலவாயிற்று. அதனால் கடன் பட்ட தண்டபாணி அடிகள் மனம் மிக உடைந்தார்.

இவர் சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்குச் சென்று அண்ணாமலையப்பனையும் உண்ணாமுலையம்மையையும் பாடிக்கொண்டு சில நாள் அங்கே தங்கியிருந்தார். பின் இவர் அண்ணாமலையிலிருந்து புறப்பட்டுத் தென்னாட்டிலுள்ள கழுகுமலையைச் சேர்ந்தார். அங்கே கழுகாசல மூர்த்திமேல் பல பாடல்கள் பாடினார். அங்கும் இவருக்கு அருள் கிடைக்கவில்லை. அதனால் மனமுடைந்த அடிகள் கழுகுமலைப் பிரான்மேல் பாடிய பாடல்களையெல்

லாம் கிழித்தெறிந்துவிட்டார். பின் இவர் திருச்செந்தூரை அடைந்தார். அங்கே செந்திலாண்டவர் இவருடைய கனவிலே தோன்றித் தம் மீது பதினறு நூல்கள் பாட வேண்டும் என்று கட்டளையிட்டுப் பதினெராவது நூல் பாடியவுடன் தாம் இவர் முன் தோன்றுவதாகச் சொல்லி மறைந்தார். இவர் நெல்லைமாநகரை அடைந்து செந்தில் நாயகர் மேல் மிக விரைவாக நூல்களை ஆக்கிக் கொண்டிருந்தார். ஆனல் பதினெராவதாகிய 'கந்தமாலை' என்னும் நூல் பாடி முடித்தும் இவருக்குப் பெருமான் காட்சி கிடைக்கவில்லை. அதனுல் வெறுப்புற்ற அடிகள் அத்தனை நூல்களையும் கிழித்து ஆற்றிற் போட்டார்.

சில நாட்கள் சென்றன. தாம் நூல்களைக் கிழித்தெறிந்தது தவறு என்பதை இவர் உணர்ந்தார். உடன் திருச்செந்தூருக்குச் சென்று மறுபடி அப்பதினொரு நூல்களையும் பாடி, அதன்மேல் ஐந்து நூல்களையும் ஆக்கினுர். அப்போதும் முருகப் பெருமான் திருவுருவக் காட்சியை இவருக்குப் பாலித்திலர். அதனுல் இவர் மேலும் மனமுடைந்து "பெருமானே! அடியேனை இப்படிச் சோதிக்கலாமா? உம்முடைய திருவருளைச் சிறியேன் எங்ஙனம் உணர்வேன்?" என்று மனம் கசிந்துருகி வேண்டினுர்.

இவர் கடுங் கோபமுடையவர். இவர் தம் கருத்துக்கு மாறுபடுகிறவர்களைக் கண்டித்துப் பாடல்களைப் பாடுவார். தம்மை ஆதரிப்பவர்களைப் புகழ்ந்தும், ஆதரியாதவர்களை இகழ்ந்தும் பலப் பல தனிப்பாடல்கள் பாடியிருக்கிறுர், இவர் தமக்கு உதவி செய்த அட்டாவதானம் சபாபதி முதலியாரைப் பற்றி

"சந்தமலி அட்டாவ தானச் சபாபதிக்கெங்
கெந்தச் சபாபதியும் ஈடில்லை கந்தனருள்
பெற்றேன் உணர்வால் பெரியோரைப் பேணு நலம்
உற்றேன் முழுப்புலமை யோன்."

என்று புகழ்ந்தார். ஊற்றுக்குழி என்னும் ஊரில் இவருக்கு ஒரு கணக்கப்பிள்ளை உதவி புரிந்தார். ஆனால் அவ்வூர்ப் பெருஞ் செல்வன் இவரை மதிக்கவில்லை. அப்போது இவர்,

"ஊற்றுக் குழியில் ஒரு கணக்கப் பிள்ளை செய்த
ஆற்றல் அளவும் அரண்மனையார் செய்யவில்லை
ஏற்றமிகு பழநிக்கு ஏகென் றிரவிற் சொலித்
தேற்றியது வேலனருள் செய்யும்விதம் தேர்ந்திலனே."

என்று புகழ்ந்தும் இகழ்ந்தும் பாடினார். இவர் முருகப் பெருமானைக்கூடக் குறைபேசிப் பாடியிருக்கிறார்.

*"சென்னைநகர்க் கந்தாநீ செட்டிகளைச் சேர்ந்தாலும்*
*உன்னை உதாரியென்றே உன்னினேன்—என்னையிவ்வா*
*றேமாறச் செய்தனையே இன்னுமென்ன செய்வாயென்*
*பாமாலைச் சொற்கசப் பா?"*

இவர் தில்லையம்பலம் கண்டு கும்பிட்டு, சென்னையிற் சென்று சிலநாள் தங்கித் திருஆமாத்தூரை அடைந்தார். அவ்வூர்வாழ்வார் பலர் இவரிடம் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டனர். இவருடைய வாக்கு மிகவும் பலித்தது. இவர் ஆறெழுத்து மந்திரத்தை இடைவிடாது ஓதி உருவேற்றி வந்தார். அதனால் வெம்மை மிகுந்து இவர் உடலில் வெப்பு நோய் தோன்றிற்று. அதனால் மிக வருந்தியிருந்த அடிகள் அவ்வூரில் தாம் அமைத்துக் கொண்ட திருமடத்தில் எழுந்தருளியிருந்து இடைவிடாது முருகப்பெருமானை எண்ணி எண்ணி உள்ளம் கசிந்துருகி 1898 விளம்பி ஆண்டு ஆனிமாதம் இருபத்துமூன்றும் தேதி திருவோண நாளில் அப்பெருமான் திருவடிப்பேறு

பெற்றுப் பெருவாழ்வடைந்தார். அவ்வூர்த் தொண்டர்கள் இவருக்கு ஒரு திருக்கோவில் கட்டிப் பூசனை புரிந்து வருகின்றனர்.

இவர் பாடிய நூல்கள்:– "திருச்செந்தூர் முருகன் மேல் 'வெண்பா வந்தாதி, சிலேடை வெண்பா, திரிபந்தாதி, யமகவந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, செந்தில் விநாயக சதகம், உலா, நவரசமஞ்சரி, அகப்பொருட் கோவை, தசாங்க வகுப்பு, சந்தமாலிகைத் திருப்புகழ், கௌமார விசயம், குஞ்சரிமாலை, வள்ளிநாயகி பிள்ளைத் தமிழ், வாள் அலங்காரம், வண்ணப்பதிகம்,' என்பன பதினாறு; புதுவை முருகன் மீது 'அலங்கார பஞ்சகம், பிள்ளைத்தமிழ், பதிற்றுப்பத்தந்தாதி' என்பன மூன்று; பழநி முருகப்பெருமானாகிய ஆண்டவன்மேல் 'பழநி வெண்பாமாலை, பழநி வெண்பாவந்தாதி, பழநி அலங்காரம், பழநி யமகவந்தாதி, பழநித்திரிபு மஞ்சரி, பழநிக் குருபரமாலை, பழநிப் பதிற்றுப்பத்தந்தாதி, பழநிப் பிள்ளைக் கவி, பழநிக் கலம்பகம், பழநி ஒருபா ஒருபஃது, பழநி வைரமணிமாலை, பழநி நவரசம், பழநிச் சித்திமாலை, பழநி நடுவொலியலந்தாதி, பழநி கலவி மகிழ்தல், வண்ணம், பழநி வகுப்புகள், பழநி முருகானந்தலகிரி, பழநித் தெய்வத்துணைப்பதிகம்.' என்பன பதினெட்டு; முற்கூறிய புதுவைக் கலம்பகத்தோடு நெல்லைக் கலம்பகம், சென்னைக் கலம்பகம், மயிலாசக் கலம்பகம் என்பன கலம்பகம் மூன்று; அருணகிரிநாதர் புராணம்" என்பன.

இவர் எழுதிய அறுவகை இலக்கணம் என்ற நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி, புலமை என ஆறுவகையாகப் பகுக்கப்பெற்று எழுநூற்று எண்பத்தாறு சூத்திரங்களையுடையது. அதன் ஈற்றில் ஏழாம்

இலக்கணம் என்றொரு தலைப்பு இட்டுக்கொண்டு 1. புணரியல், 2. சொன்னிலை இயல்பு, 3. பெயர்ச்சொல் இயல்பு, 4. விபத்தி இயல்பு, 5. ஒற்றுமை இயல்பு, 6. வினைச்சொல் இயல்பு, 7. இடைச்சொல் இயல்பு என ஏழுபகுதிகளாகப் பிரித்துக்கொண்டு பல சூத்திரங்களை அமைத்து அவற்றை விளக்குகின்றார்.

இவர் பாடிய திருஆமாத்தூர்ப் புராணம் என்பது இவர் கடைசியாக வாழ்ந்திருந்த திருஆமாத்தூரைப் பற்றியது; திருநாட்டுப் படலம், திருநகரப் படலம் முதலிய புராணத்திற்குரிய இலக்கணங்கள் அமைய முப்பத்திரண்டு படலங்களில் ஓராயிரத்துப் பத்துப்பாடல்கள் பாடி அமைத்திருக்கிறார். இத்தலத்தில் பார்வதி, பிள்ளையார், முருகன், நான்முகன், திருமால் முதலிய பல தேவர்களும், முனிவர்களும் சிவபெருமானைப் பூசித்துப் பேறுபெற்ற வரலாறுகள் காணப்பெறுகின்றன; மேலும் இந்நகரத்திற்குத் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய சைவ சமயாசிரியர்கள் எழுந்தருளி வந்திருந்து தேவாரம் பாடி வழிபட்ட வரலாறுகளும் இனிய செய்யுட்களாற் பாடப்பெற்றுள்ளன.

இவர் பாடிய புலவர் புராணம் எழுபத்திரண்டு சருக்கங்களாக இரண்டாயிரத்துத் தொளாயிரத்துத்தொண்ணூற்றொன்பது பாடல்களோடு திகழ்கின்றது. இதில் எழுபது புலவர்களுடைய வரலாறுகள் அமைந்துள்ளன. இப்புராணம் இரண்டு பாகங்களாக உள்ளது. அதில் இரண்டாம் பாகத்தில் சைவப்புலவர்கள் முப்பத்திருவருடைய வரலாறுகள் காணப் பெறுகின்றன; முதலாவதாகச் சைவ சமயாசிரியர்கள் நால்வருடைய வரலாறுகள் அமைக்கப்பெறுகின்றன. முதற்கண் திருநாவுக்கரசர்

வரலாற்றை ஆராய்வோம். திருநாவுக்கரசருக்கு அப்பர், வாகீசர் என்ற பெயர்கள் காணப் பெறுகின்றன. திருஞானசம்பந்தர் இவரை அப்பர் என அழைத்தமையால் இவருக்கு அப்பர் என்ற பெயர் வாய்ந்தது. [அப்பா— அப்பர்; வாக்கு+ஈசர் =வாகீசர்; அதுவே நாவுக்கு அரசர்.] பண்டைக்காலத்தில் வாகீசர் என்ற முனிவர் ஒருவர் இருந்த தாகவும் அவரே ஒரு சாபத்தால் அப்பர் அடிகளாகப் பிறந்தாரென்றும் சிலர் கூறுகின்றனர். இது எங்ஙனம் பொருந்தும் என்பதை ஆராய்வோம்,

"கயிலைமலை யினைப்பெயர்த்த கடுங்கோபக் காரரக்கன்
உயிருயுநல் வரமெய்த உபாயமுரைத் தமைநாடி
மயிலனையா ளிடப்பாகன் வாகீச முனிவனுக்கன்
றயிலவுரைத் துளசாபவனுக்கிரக முதிர் நாளில்."

முருகதாசர்

இதில் அவ்வரலாற்றை முருகதாசர் ஏற்றுக்கொண் டமை விளங்குகின்றது, பூத்தேர்மேல் வருகின்றுன் இராவணேசுவரன். கைலாச மலையை அடுத்து வருகின்றது அத்தேர். ஆனுல் அது அம்மலைமேலே பறந்து செல்ல மாட்டாமல் தடைப்பட்டு நின்று விடுகின்றது. அதனைக் கண்ட இராவணன் தேரோட்டியைப் பார்த்து, "என்ன தடை? விடு, விடு" என்று கட்டளை யிடுகின்றுன். தேரோட்டி என்ன முயன்றும் முடியாது தலைவனை நோக்கி "இங்கே இம்மலைமேலே சிவபெருமான் பார்வதி தேவியோடு எழுந்தருளி யிருக்கின்ருர்" என்று மிக்க பணிவுடன் தெரி விக்கின்ருன். உடனே இராவணன் கீழே குதித்துத் தனது இருபது கைகளாலேயும் அம்மலையைத் தூக்குகின்ருன். மலை குலுங்குகிறது. பார்வதி தேவி சிவபெருமானைத் தழுவிக் கொள்கிருள். பெருமான் தம் கால் கட்டை விரலை மெதுவாக ஊன்றுகிருர். அதனுல் பத்துத் தலைக

ளோடும் அம்மலையின் கீழ் அகப்பட்டு இராவணேசுவரன் அலறுகிருன். அப்போது வாகீசர் என்ற முனிவர் அங்கே வந்து இராவணன் படும் பாட்டைக் கண்டு மனம் இரங்குகின்ருர். அவர் அவனைப் பார்த்து, "இராவணு! பெருந் தவறு செய்துவிட்டாய்; சிவபெருமான் மனம் இரங்கினுல் அல்லாமல் இனி நீ இந்தப் பேராபத்திலிருந்து தப்பவே முடியாது. ஆதலின் நீ சிவபெருமானைப்பாடு; அவருக்குச் சாம வேதத்தில் மிகவும் பற்றல்லவா? ஆதலின் அதனைப் பாடிப் பெருமான் திருவருளைப் பெறுவாயாக" என்று நல்லுரை பகர்ந்தார். அதனைக் கேட்ட இராவணேசுவரன் தன் தலையொன்றையும், கையொன்றையும் அறுத்து வீணையாக்கிக் கொண்டு இன்னிசையோடு பாடினுன். பெருமான் அதனைக் கேட்டு மனமிரங்கி அவன் முன் தோன்றி முக்கோடி வாழ்நாளும் வாள் ஒன்றும் அருளி அவனை விடுவித்து அங்கே நின்று கொண்டிருந்த வாகீச முனிவரைப் பார்த்து, "நீர் இவனுக்கு என்னை வணங்கி அருள் பெறும் வழியைக் காட்டினீர்; ஆதலால் மண்மிசைப் பிறப்பீராக" என்று சபித்தனர். துன்பம் கண்டு மனமிரங்கி நல்வழிகாட்டி இராவணனை உய்வித்த வாகீசருக்குச் சிவபெருமான், அருட்கடல், இங்ஙனம் கொடுஞ்சாபம் கொடுத்தார் என்பது அவருடைய பெருங் கருணைத் திறனுக்கு இழுக்காகுமல்லவா?

சேக்கிழார் பெருமான் திருநாவுக்கரசு நாயனுர் தம் தமக்கையாராகிய திலகவதியாரிடம் அடைக்கலம் புக, சூலை நோய் தாங்க மாட்டாமல், புறப்பட்டார் எனக் கூறும் போது 'ஈசர் அருள் கூடுததால்' என்று கூறுகின்ருர். முருகதாச அடிகளோ அவருக்குத் திருவதிகை வீரட்டானப் பெருமான் கனவிலே தோன்றி,

*"அத்தினத்தன் னவன்கனவில் அதிகைநகர்ச்*
*சிவபெருமான்*
*சத்தியுடன் அவற்குரிய தந்தையுந்தா யருமாகிப்*
*பத்திமலி திலகவதி பகர்நெறிசெல் குவையாகிற்*
*சித்திமுத்தி யடைவை இதுதிண்ணமெனச்*
*செப்பினனே"*[F]

என்று விரித்துக் கூறுகிருர்.

"திருஞானசம்பந்த மூர்த்தி நாயஞர் சமணர்களை வாதில் வென்றபோது மன்னவன் மந்திரியாரை நோக்கி, 'சைவர்கள் இருந்த மடத்தில் தீ வைத்த கொடியவர்களாகிய சமணர்களைக் கழுவில் ஏற்றும்' என்று கட்டளையிட்டான். "குற்றம் செய்தவர்களை வேந்தன் ஒறுப்பது கடமை. அச்செயல் களையெடுப்பது போன்றதாம். ஆதலால் சம்பந்தர் வேந்தனைத் தடுக்காமல் இருந்துவிட்டார். சமணர் எண்ணுயிரம் பேரும் கழுவில் ஏறிஞர்கள்" என்று சேக்கிழார் பெருமான் கூறுகின்ருர். திருஞானசம்பந்தர் இங்ஙனம் வாளா இருந்ததுகூடத் தவறுதான் என்று கூறுவாரை நோக்கி இவர் புலவர் புராணத்தில், "கழுவேற வேண்டாம் எனச் சம்பந்தர் தடுத்தும் கேட்காமல் தங்கள் சூழுரையே பெரிதென்று நினைத்துக் கழுவேறி மடிந்தார்கள்." என்று பாடுகின்ருர். அது வருமாறு:—

*அவர்எண்ணுயிரம் பேர்களுங் கழுவாய்*
*ஆவிவிட்டன ராமஅதை விரித்து*
*விவரமாச் சொல்வார் சிலர்அதுவீணே*
*வென்றிதோய்தமிழ் விரகனும் தனது*
*பவளவாய் கொடுஅன்னவர் முன்நீர்எம்மைப்*
*பழித்திடாதுநும் பதத்தில் வாழ்மின்எனு*
*உவகையோடு உரைத்ததும் அதற்கவர்தாம்*
*ஒப்பிடாமையும் உலகம் ஓதிடுமே."*

“மடத்தில் தீயிட்டது தவறு; தோற்ருல் கழுமரம் ஏறுவோம் என்று வலியச் சபதம் கூறியது மற்ருெரு குற்றம். அதனுல் தீங்கடைந்தனர்.” என்று சிலர் கூறுவர். “திருஞானசம்பந்தர் நாதனை எண்ணி ஒரு பதிகம் பாடினுல் இவர்கள் அனைவரும் திருந்தி நல்வாழ்வு பெற்றிருப்பார்களே.” என்று வேறு சிலர் கூறுவர். ஆனுல் நம் கவிஞர் முருகதாசர் “இது ஆண்டவன் செயல்! அதனை அறிவார் யார்?” என்று சில நீதிகளை எடுத்துக் காட்டிக் கடைசியாகப் பின்வருமாறு பாடுகின்ருர்:-

“இந்தநீதிகள் சிலசொலும் ஆற்ருல்
என்னை ஞானசம் பந்தமூர்த்தியின்பால்
அந்தரங்க நண்பில்லவன் என்றே
அறைகுவார் இளஞ்சைவர்கள் அயில்வேல்
கந்தனேயெனச் சொற்றுளன் முன்னுள்
கழறிடுங்கவு மாரரும் பலரே
சொந்தநூல்பகர் சேக்கிழார் முதலாம்
தொண்டர் தாமும் அத்துணிவடைந்திலரே.”

இதனை நோக்கும்போது இவர் சேக்கிழார் முதலிய பெரியார் கூற்றுக்குப் புறம்பாகக் கூறுவர் என்பது வெளிப்படை. “முன்னுள் முருகப் பெருமானே ஞான சம்பந்தராகப் பிறந்தார்” என்று இவர் கூறினதோடு அமையாமல் இங்கே உலகம்போற்றும் உரோமச முனிவன் என்பவன் கைலையைச் சேர்ந்து சமணர்களை ஒழித்தல் வேண்டுமென்று வேண்டிக்கொள்ளப் பெருமான் நீயே சென்று ஞானசம்பந்தனுகப் பிறப்பாயாக என்று கட்டளையிட்டான்.” என்று புதுவது புனைகின்ருர். “பிறவான் இறவான் ஆகிய பெம்மான் முருகன். அவன் மண்ணின் மேல்வந்து பிறந்தான் என்று கூறுவது கழுவாய் இல்லாத

அறக்கொடும் பாவச் செயல்'' என்று கூறுவதே அறிஞர் கண்ட முடிவு.

''திருப்பெருமண நல்லூர் என்ற ஆச்சாபுரத்தில் திருஞானசம்பந்தர் தம்முன் தோன்றிய சோதியிலே திருமணம் காணவந்த அனைவரையும் புகுமாறு செய்து தம்முடைய மனைவியாரைக் கைப்பற்றிக் கொண்டு அந்தச் சோதியை வலம் வந்து அதனுள்ளே புகுந்தார்'' என்று சேக்கிழார் பெருமான் அருளுகின்றார். இவரோ கேள்விக்கதை என ஒரு புதுக்கதையைப் புகுத்துகின்றார். அதாவது ''வீட்டுக்கு விலக்கமான ஒரு பெண் அக்கூட்டத்தில் இருந்தவள் சம்பந்தரைப் பணிந்து தன் நிலை சொன்னாள். சம்பந்தர் 'கவலைப்படாதே; பெரு நெருப்பிற்கு ஈரமில்லை. நீயும் உள்ளே போ, என்று ஆணை தந்தார். அவளும் அச்சோதியிற் புகுந்து பேறு பெற்றாள்'' என்பது. இது உண்மையில் நடந்திருக்குமே ஆனாலும் இதனைச் சொல்லுமிடம் இதுதானா? மேலும், ''இச் சம்பந்தர் சிலநாட்களாவது உலகில் வாழ்ந்து சிற்றின்பம் நுகராது இப்படிப் போய்விட்டாரே!'' என்று சிலர் குறை கூறினார்கள் எனத் தண்டபாணியார் கூறுகிறார். அது எவ்வளவு இழுக்குடையது என்று அறிஞர் சிந்திப்பாராக. புலவர் பாட்டுப் பின்வருவது.

*''ஆங்குறு பலரும்உட்போய் அதிற்கலந் ததுவேஆனார்*
*ஓங்குபூண் அணிந்தமங்கை ஒருத்திவே*
*றொதுங்கித் தூய்மை*
*தாங்கிலேன் என்றிரங்கிச் சரண்பணிந் ததனைச்*
*சொன்னாள்*
*ஏங்குறேல் பெருநெருப்பிற் கீரமின் றேகென்றானே.''*

*"உலகினைப்பொருளாக் கொண்டோர் ஒள்ளிழை*
*யவடன்னோடு*
*சிலதினம் இன்பமார்ந்து சென்றில னென்னச்*
*சொற்றார்."*

பெரும் புலமைக்கு இவை அழகல்லாத பேச்சுக்கள்!

---

## 30. ஆழ்வாரப்ப பிள்ளை

**[கி. பி. 1839 — 1919; திரு. 1870 — 1950.]**

திருநெல்வேலிப் பேட்டையை அடுத்து மேற்கேயுள்ள கீழைக்கல்லூரில் முருகாவுடையா பிள்ளைக்குத் திருமகனாக ஆழ்வாரப்பபிள்ளை 26—5—1839ல் பிறந்தார். தமிழிற் பெரும் புலமை பெற்ற இவர் ஆங்கிலமும் கற்றுத் தேர்ந்தார்; திருச்செந்தூர் அஞ்சல் நிலையத்தில் எழுத்தராகவும் சீவைகுண்டம் வட்டம் (தாலுகா) அலுவலகத்தின் தலைமை எழுத்தராகவும் பணிபுரிந்தார்.

வள்ளியூர்த் தலபுராணமும், முருகப்பெருமான் மேல் இசைப்பாடலும், கந்தர் அந்தாதியும், அம்பாசமுத்திரம் மரகதவல்லி அம்மைமீது மரகத மாலையும், குலசேகரன் பட்டினம் கச்சிகொண்ட பாண்டீசர், அம்மை அறம் வளர்த்தநாயகிமீது ஊஞ்சலும் நலுங்கும் ஆகிய இவை இந்த முருகனடியாராற் பாடப் பெற்ற புகழ் நூல்கள். மகளிர் இலக்கணம், கிரகாச்சிரம தருமம் என்ற நூல்களும் இவர் இயற்றியன.

நெல்லையம்பதியிலிருந்து புறப்பட்டு ஊர் ஊராகத் திருக்கோவில்களில் வழிபாடு செய்துகொண்டு இவர் காசி வரை சென்று விசுவநாதர் திருவருளும் பெற்றுத் திரும்பினுர். இவர் வழிநெடுகப் பாடிய பாடல்கள் 'காசி யாத்திரைக் கவிகள்' என்று பெயர் பெறுவன. முருகப் பெருமானுடைய திருப்புகழைப் பாடி ஆடிப் புகழத்தக்க பசனை மடங்களைப் பலஊர்களிற் கட்டிக் கடைசியாகத் துறவறம் பூண்டு இப்பெரியார் முருகப்பெருமான் திருவடி நீழலில் அமர்ந்து இன்புற்ருர். இவர் எண்பது வயது வரை வாழ்ந்திருந்தார் என்பர்.

---

## 31. சாமி விருதை சிவஞான யோகிகள்

[கி. பி. 1840—1939; திரு. 1871—1970.]

கோயமுத்தூர் மாவட்டத்தில் அவிநாசி என ஒரு சிறந்த பதி இருக்கிறது. அங்கே முதலை விழுங்கிய பிள்ளையைப் பல ஆண்டுகள் கழிந்த பிறகு சுந்தரமூர்த்தி நாயனுர் அம்முதலை வாழ்ந்த குளத்தின் கரையிலே சென்று நின்று

*"உரைப்பா ருரையுகந் துள்கவல் லார்தங்க ளுச்சியாய்*
*அரைக்கா டரவா ஆதியு மந்தமு மாயினுய்*
*புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே*
*கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு*
*காலனையே."*

என்று சிவபெருமானை நோக்கிப் பாடி முதலையின் வாயிலிருந்து குழந்தையை அத்தனை கால வளர்ச்சியோடு வர வழைத்தார். இவ்வூர் அவிநாசி என்று வழங்கினுலும்

அதனுடைய இயற்பெயர் திருப்புக்கொளியூர். அங்கு கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் பெருமான் பெயர் அவிநாசி அப்பர், அம்மை பெருங்கருணை நாட்டத்து அம்மை.

இத் திருநகரில் இராமசாமிப்பிள்ளை என்பவருக்கு 1840 ல் சிவஞான யோகிகள் திருமகனுகப் பிறந்தார். ஐந்தாண்டு நிறைவதற்குள் இவர் தம் பெற்றோரை இழந்தார்; இவருடைய தாய்மாமனுர் உதவியால் தமிழும் ஆங்கிலமும் கற்றுத் தமிழ்ப் பெரும் புலவராயினுர்.

இவர் தம்முடைய மாமனுருள் ஒருவர் வாழ்ந்திருந்த பல்லடம் என்ற ஊரில் சில மாதங்கள் தங்கியிருந்தார். அங்கு அருளானந்த அடிகள் என்ற பெரியாரின் திருவருள் இவருக்குக் கிடைத்தது. அப்பெரியார் மறைந்த பின்பு இவர் அவிநாசியை அடைந்து பெருமான் திருமுன்பு நின்றுகொண்டு

*"முதலைவா யிற்பிள்ளை முற்றிப் பருவ*
*முதிர வளித்தமுக் கண்ணுர்—பதியே*
*தவமிக்க சுந்தரர்க்குத் தண்கருணை தந்த*
*அவிநாசி யீசா வருள்."*

என்று பாடி வேறு ஓர் அகவற்பாவும் பாடினுர்.

நீலகிரி மலைமேலிருக்கும் வெலிங்தன் நகரில் இவர் பணக்கொடுக்கல் வாங்கற் கடையொன்றில் அலுவலராகச் சிலகாலம் இருந்தார். அதன் பின் இவர் உடுமலைப் பேட்டையின் அருகில் உள்ள மடத்துக் குளத்தில் சைவ ஆசிரியர் ஒருவரிடம் சிவபூசை சிவதீக்கையுடன் பெற்றுர். அங்கிருந்து பழநிப்பதியை அடைந்து அவ்வூரில் பெரும் புகழுடன் இருந்த மாம்பழக் கவிச்சிங்க நாவலரைப்

பணிந்து ஆசிரியராகப் பெற்று அவரிடம் இவர் பல கலை களையும் பயின்று பெரும்புலமை அடைந்தார்.

அதன் பின்னர் இவர் விருதுப்பட்டிக்கு வந்துசேர்ந் தார். மிகச்சிறிய பட்டியாக இருந்த அச்சிற்றூரே இப் போது விருதுநகர் என்ற பெயரோடு பெருநகராட்சியாக வும் விளங்குகின்றது. அவ்வூரில் நடனமாடிச் சிவபெரு மான்மேல் புகழ்மாலை பாடுவதிற் புகழ்பெற்றிருந்த சக்கர பாணி அடிகளாரோடு சிலநாள் இவர் தங்கியிருந்து சித்த வைத்தியசாலை ஒன்று வைத்து நடத்தி வந்தார்; அவ்வூர்ப் பெரிய சிவன் கோவிலில் திருப்பணிகள் பல செய்ததோடு ஒரு சிறு நந்தாவனமும் அமைத்தார். இப்பணிகளுக்குப் பணம் பெறும் பொருட்டுச் செட்டிநாடு சென்று இவர் பல வணிகரிடம் பொருளுதவி பெற்றுர். இவர் விருதுநகரில் பலகாலம் தங்கியிருந்தபடியால் விருதுப்பட்டிச் சாமியார் என்ற சிறப்புப் பெயரை அடைந்தார். விருதை என்பது விருதுப்பட்டி என்ற பெயரின் மரூஉ ஆதலின் இவர் விருதை சிவஞான யோகிகள் என்று அழைக்கப் பெறு கிருர். விருதை அடிகளார் அந்நகரின் நீங்கி எட்டைய புரத்தை அடைந்து சில ஆண்டுகள் தங்கியிருந்தார். அங்கே குருநாத சாத்திரியார் என்ற வடநூற் பெரும் புலவர் ஒருவர் இருந்தார். அவரை அழைத்துவந்து அவருக்கு வேண்டுவனவெல்லாம் உதவி அவரிடம் இவர் வடமொழிப் பெருங்கடலை நிலைகண்டுணர்ந்தார். பதஞ் சலி முனிவர் இயற்றியருளிய யோக சூத்திரங்களையும், வியாச முனிவர் இயற்றிய பிரம சூத்திரத்தையும், அவை களுக்குப் பேருரைகளாக விளங்கும் நீலகண்ட சிவாசாரி யாருடைய பாடியத்தையும், சங்கராச்சாரியார் வகுத் துள்ள பாடியத்தையும், இராமாநுசாச்சாரியார் ஆக்கியுள்ள பாடியத்தையும், மாத்துவாச்சாரியாருடைய பாடியத்தையும்

இவர் தெளிவாகக் கற்றுணர்ந்தார். பின்பு இவர் பிரம சூத்திரத்தைத் தமிழில் சூத்திரங்களாக ஆக்கி அவைகளுக்கு நீலகண்டர், சங்கரர், இராமாநுசர், மாத்துவர் அமைத்த பேருரைப் பொருளமையுமாறும் சைவசித்தாந்தப் பொருள் அமையுமாறும் உரையும் வகுத்தார். இப்பெரும் பணிக்குச் சேற்றூர் அரசர் சுந்தரதாசத் தேவரும், சிங்கம் பட்டி மன்னர் சுப்பிரமணிய தீர்த்தபதியும் பொருளுதவி செய்து ஆதரித்தனர். இப்பெருநூலை ஆக்கியபடியால் இவர் "தமிழ்ப்பிரம சூத்திர ஆசிரியர்" என்ற புகழ்ப் பெயர் பெற்ருர். இவர் எட்டையபுரத்தில் வாழ்ந்திருந்த காலத்தில்தான் அவ்வூர்ப் பெருங்கவிஞர் சுப்பிரமணிய ஐயருக்குப் பாரதி என்ற பட்டத்தை இவர் வழங்கிப் போற்றினர்.

இவர் பாடிய அருட்பாடல்கள் "கடவுள் மாலை" என்ற தலைப்புடன் 1938-ல் அச்சேறி வெளிவந்துள்ளன. இவர் 1910-ல் கோவிற்பட்டிக்கு வந்து தம் வாழ்நாள் முழுமையும் அங்கேயே வாழ்ந்திருந்தார். இவருக்குச் சைவசித்தாந்த நூல்களைப் பாடஞ்சொல்லிய பேராசிரியர் சைவ சித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர் என்ற பெரியார். சைவசித்தாந்த முறையிலும் தம்முடைய தமிழ்ப் பிரமசூத்திரங்களுக்கு இவர் சிறப்புரை வகுத்தனர். அந்த நூலை இவர் அச்சியற்றிக் கொண்டிருந்த போது இவருக்கு இறைவன் தம்முடைய திருவடிப்பேற்றை அருளி வாழ்வித்துவிட்டான்; ஆதலால் அந்த நூல் வெளிவராது போயிற்று. இது தமிழுலகம் செய்த தவக் குறையே என்று அறிஞர் கருதுகின்றனர்.

இவர் கோவிற்பட்டியில் இருந்த காலத்தில் இயற்றிய பொதுப்பணிகள் பலப்பல. அவ்வூரில் "பத்திவிளை

கழகம்", "திருவிடர் கழகம்" என்ற சங்கங்களை அமைத்துப் பல ஆண்டுவிழாக்களைத் தக்க பெரியார் தலைமையில் சிறப்பாக நடத்தி வந்தார். இவர் அங்கே சித்த வைத்தியசாலை ஒன்று தொடங்கித் தீர்க்கமுடியாத பெரு நோய்கள் பலவற்றுக்கும் சித்த மருந்துகள் கொடுத்துத் தீர்த்துப் பெரும்புகழுடன் பேருதவி செய்து வந்தார். இவருடைய பெருமுயற்சியினாலேயே அன்றைய அரசாங்கம் நாட்டு மருத்துவங்களை ஆராய்ந்து கருத்து அறிவிக்க ஊசுமான் தலைமையில் ஒரு குழுவினை அமைத்துப் பின் அக்குழுவினர் கூறிய முடிவுப்படி சென்னையில் நாட்டு மருத்துவக் கல்லூரியை நிறுவியது. அக்கல்லூரியில் சித்த வைத்தியம், ஆயுள் வேதம், யூனானி ஆகிய மருத்துவக்கல்வி போதிக்கப்பெற்று வந்தது. "தமிழ் நாடு சித்த வைத்திய சங்கம்" என்பது 21—4—1920-ல் இவரால் நிலைபெறுத்தப் பெற்றது. அச்சங்கத்தின் சார்பாகப் பல சித்த வைத்திய மாநாடுகளும், கண்காட்சிகளும், நெல்லை, மதுரை, சென்னை ஆகிய பெருநகரங்களில் நடைபெற்றன. முதலாவது மாநாட்டுக் கண்காட்சி அறிக்கையில் பின்வரும் பகுதி தமிழ் நாட்டினர் அறிவுக்கு விருந்தும், மருந்தும் ஆகுமாதலால் அப்பகுதியைக் கீழே தருகின்றோம்:

"தமிழ் வைத்தியம் என்பதற்குத் தமிழ் மருத்துவம், தமிழ் ஆயுள்வேத வைத்தியம், தமிழ்ச் சித்த வைத்தியம் என்ற மறு பெயர்களுமுள. இவ்வைத்தியம் நாகரிகத்திலும் அறிவு நூல்களிலும் முதற் சங்க காலமாகிய பன்னீராயிரம் ஆண்டாகச் சிறப்புப் பெற்றிருக்கிற இத்தமிழ் நாட்டில் தொன்று தொட்டு நடைபெற்று வருகின்றது. திருமூலதேவர், 'அவிழுமன முமாதியறிவுந்—தமிழ் மண்டலமைந்துந் தத்துவமாமே' என்று தமிழ் நாட்டில்

அறிவு நூல்களின் தொன்மையைச் சிறப்பித்தருளினர். தமிழ் மருத்துவ நூல்கள் சிவனர், அம்மையார், பிள்ளையார், முருகவேள், நந்தி, சனகர், சனதனர், சனந்தனர், சனற்குமாரர், திருமூலர், பதஞ்சலி, அகத்தியர், புலத்தியர், புசுண்டர், காலாங்கி, போகர், கொங்கணர், கருவூரார், தந்வந்திரி, சட்டைமுனி, தேரையர், யூகிமுனி முதலியவர் இயற்றிய முதனூல், வழிநூல், சார்பு நூல்கள் ஆகப் பல இலக்கக் கணக்கில் இருக்கின்றன. திருமூல நாயனர் நோய்விலக்கு முறைகளை, 1. மூலிகை வகை, 2. உப்பு வகை, 3. தீநீர் வகை, 4. உபரச வகை, 5. உடற்பொருள் வகை, 6. பாடாணவகை, 7. உலோகவகை, 8. சத்துவகை, 9. இரசகுளிகை வகை, 10. யோக வகை யெனப் பத்து வகைகளாக வகுத்திருக்கின்ருர். அவ்வனைத்தையும் தமிழ்ச் சித்த நூல்கள் கூறுகின்றன. அவற்றில் மூலிகைவகை மருந்துகளையே பிரதானமாய்க் கொண்டுள்ளது சமசுக்கிருத ஆயுள்வேத வைத்தியம். மேற்கூறிய பத்து வகைகளில் ஒன்றுக்கொன்றதிக வலியுடையனவாதலால் முற்பட்ட மருந்துகளில் தீராத நோய்களைப் பிற்பட்ட மருந்துகளே தீர்க்கும் வலியுடையனவாம். ஆதலால் தமிழ் வைத்தியஞ் சிறந்ததென்பது சொல்லாமலே அமையும். தேரையர் முதலியவர் வைத்தியசாலையின் இலக்கணங் கூறுவதாலும் திருவள்ளுவர்,

> *"உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வான் என்று*
> *அப்பானாற் கூற்றே மருந்து."*

என்று மருந்துண்பான், மருத்துவன், மருந்து, உழைச் செல்வான் என்று வைத்திய சாலையிற் பிணியாளனோடிருந்து மருந்தருத்தி வைத்தியஞ் செய்யும் இயற்றுநன் [Nurse] இலக்கணங் கூறுவதாலும், தமிழர் முப்பத்தி

ரண்டு அறங்களில்—ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு என்ற தருமங்கள்போல நோய்க்கு மருந்து என்றும் கூறியிருப்பதாலும் முற்காலத்தில் தமிழ் மருத்துவசாலையும் பெரிய தருமமாக நடந்து வந்ததாய்த் தெரியவருகிறது. இக்காலத்தில் தமிழ் நாட்டில் தமிழ்த்தாய் தந்தையர்க்குப் பிறந்து தமிழ்மொழி பேசுந் தமிழர் பலர்க்குத் தமிழ் மொழியிலும் தமிழ் நூல்களிலும் அபிமானங் குறைந்திருத்தல் போல உலகிற் சிறந்த முறைகளையுடையதும் தீராத நோயென்று பிற வைத்தியர்களால் கைவிடப்படும் நோய்களைத் தீர்ப்பதும், அவமிருத்துக்கள் வாராமல் தடுப்பதும், ஆயுளை விருத்தி செய்வதும், காயசித்தியைத் தருவதுமான மருத்துவ நூலிலும் அபிமானங் குறைந்திருக்கின்றது. தமிழ் வைத்திய நூல்களைச் சீர்ப்படுத்தி அச்சிட்டு வெளிப்படுத்தவும், அவற்றைக் கற்பிக்கும் பாடசாலைகளை வைக்கவும், தமிழ் வைத்தியப் பெருமைகளைப் பிரசங்கிக்கவும் தமிழ் மருந்துகளுக்குக் கண்காட்சிகள் வைத்து அதில் வரும் மருந்துகளையும், அவற்றைக் கொண்டு வருகிறவர்கள் பெயரையும் அச்சிட்டுப் புத்தகங்களாக வெளிப்படுத்தி வைத்தியர்க்கும் பொதுமக்களுக்கும் நன்மையுண்டாகச் செய்யவும் வைத்தியர்களின் நூலுணர்ச்சி வைத்தியத் தேர்ச்சிகளை அவர்களின் வரையுரை பிரசங்கங்களால் தெரிந்து அவர்களுக்குப் பட்டம் பொற்பூத் தந்து பெருமைப்படுத்தவும், தமிழ் வைத்திய சங்கம் என்ற பெயரால் ஒருகழகம் 21—4—1920 ம்தேதி கோவிற்பட்டியில் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அது சென்னை இராசதானிக்குப் பொதுவாயிருக்க வேண்டுமென்றும் மேற்படி சங்க அலுவலகம் கோவிற்பட்டியில் வைப்பதென்றும் ஆண்டுதோறும் மாநாடு கண்காட்சிகள் சென்னை இராசதானியில் ஒவ்வொரு பெரு நகரத்திலும் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.''

சிவஞான யோகிகள் எழுதிய நூல்கள்:- 1. தேவோ பாசஞ தீபம், 2. தமிழ் மொழியும் சிவநெறியும், 3. தமிழும் மருத்துவமும், 4. கோவிற்புரிப்புராணம், 5. கடவுள்மாலை முதலிய பல. இவற்றுள் பல ஏதுக்கள் காட்டிக் "கடவுள் வழிபாடு இன்றியமையாதது" என்பதை விளக்கும் தீபமாவது தேவோபாசாஞ தீபம் என்பது. "சிவநெறி என்பது சிவவழிபாட்டு முறை, அது தமிழ் நாட்டில் தோன்றியது" என்பதை எடுத்துக் காட்டுவது தமிழ் மொழியும் சிவநெறியும் என்ற நூல். "உலகத்தில் முதன்முதலாக மக்கள் தோன்றிய இடம் தமிழகம். அதில் தோன்றிய மருத்துவம் தமிழ் மருத்துவம்; ஆதலின் உலக மொழிகளுக்கும் மருத்துவங்களுக்கும் தாயாக விளங் குவன தமிழும் தமிழ் மருத்துவமும்" என்ற உண்மையைத் தமிழும் தமிழ் மருத்துவமும் என்ற நூல் நிலை நாட்டு கின்றது. கோவிற்பட்டித் தலபுராணமே கோவிற்புரிப் புராணம். இது பதினெட்டுப் படலங்களை யுடையது. இதில் பூவனநாதர், செண்பகத் தம்மை அருள்விளையாடல் களை விளக்குவன முதற் பதினேழு படலங்கள். பதி னெட்டாவது படலம் "திருஞானம் உரைத்தது." அதில் சிவஞானபோத உண்மைகள் மிகத்தெளிவாக, விஞவிடை முறையில் விளக்கப்பெற்றுள்ளன. இப்பகுதி சிவஞான போதவிஞவிடை" என்ற தனிநூலாகவும் வெளிவந் துள்ளது. இனி, கடவுள் மாலையை ஆராயும் முன் இவர் அச்சிட்டுள்ள "தமிழக ஒழுகு என்ற மக்கட் சட்டம்" என்ற நூலை ஆராய்வோம்.

"தமிழக ஒழுகு" என்பது அகவற்பாவான் அமைந்த பெரு நூல். இதில் மூவாயிரத்து எண்ணூறு அடிகள் உள. இதில் தமிழ்நாட்டு அரசுமுறை, திருமணமுறை, குடிகள் ஒழுகலாறு, இல்லறநிலை, தமிழ் நாட்டுக் கல்விநிலை, மறு

மணமுறை முதலியனவெல்லாம் தெளிவான நடையில் விளக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் உடன்கட்டை ஏறுதலைப் பற்றிய பகுதியை மட்டும் கீழே தருகின்றோம்.

"இந்நாட்டின்
காரிகை மார்உடன் கட்டை ஏறுதல்
நடைத் தவறு எழாவழி நடாத்தப்பட்டதோ?
தாய்மண் டோதரி தவன்இறந் தமைகாண
அவன்மீ துடல்விழ அவளுயிர் நீங்கிற்றே!
வழுதி இறந்தமை வல்லவி கண்டதும்
'ஆ'என அவளுயிர் அகன்றதே அம்ம!
இரண்டுடல் ஓருயிர் எனஉரை அறவோர்
கணவன் விழவுடன் கட்டை ஏறுதல்
உயிர்நீங் கிடல்தமிழ் உலகத் துண்டே:
அஃதிரு வரினுள அன்பா லியைவது.
வடவரில் அடிக்கடி வன்போர் எழுந்தொறும்
தோற்றவன் மனைச்சிறை தூக்கலுண் டாகலின்
மன்வெல் லப்படின் மனைதீக் குளிப்பளே.
மாயன் பிருந்தைபால் மயல்கொண்டு வந்ததை
அறிந்துடன் தீக்குளித் தனளது மறமோ
தலையளி நீடலும் தனிக் கற்புக் காத்தலும்
காரண மாவுடன் கட்டை ஏறிடுதல்
அறமோ மறமோ அறிவுளீர் கூறுமின்."

இனி, கடவுள் மாலையை ஆராய்வோம். இந்நூல் விருதுப்பட்டி, எட்டையபுரம், கோவிற்பட்டி, பசுவந்தனை, கழுகுமலை, திருக்குடந்தை, தேவதானம், சென்னை, திருவாவடுதுறை முதலிய பல பதிகளில் இவர் சென்று பாடிய அருமைப் பாடல்களின் திரட்டு. இம்மாலையில் வெண்பா, அகவல் முதலிய பாக்களும், விருத்தம் கலித்துறை முதலிய பாவினங்களும், கீர்த்தனை என்னும் இசைப் பாக்களும் நிரம்பிய எழுநூற்று நாற்பது மலர்கள் அணி செய்கின்றன. இவற்றுள் பெரியன செப்பறை வெண்பாவந்தாதி,

எட்டீசுவர மாலை, திருச்செந்திற் சிலேடை வெண்பா, நெல்லையந்தாதி, மேன்மாந்தைப் பெத்தாச்சியம்மன் மாலை என்பன. இவருடைய இசைப்பாடல் 'கீதாமிர்த மஞ்சரி' என்பதும் இதனுள் அடங்கும். அவை எளிய நடையின. பின் வருவது ஒரு எடுத்துக்காட்டு.

**பல்லவி**

*ஏனின்ன மோடுகின்றாயே*
*மனமேநீ*

**அநுபல்லவி**

*தேனிலினியகிருபை செய்தடியவர்க்கருள்*
*மானமிகு மாதேவன்மலர்ப்பதம்நினையாமல் (ஏனின்ன)*

**சரணங்கள்**

*உலகவாழ்வு பொய்யென்றோர்ந்தாயே — அதில்*
*உள்ளபொருள்கள் கெடல் தேர்ந்தாயே*
*பலமன்னர் மண்ணாகித் தீர்ந்தாரே — யமன்*
*பலகோடி மாதரை — யீர்ந்தானே*
*நிலமிசைப் பற்பல நிதியினரிறந்தனர்*
*நிபுணரென்றெண்ணிய — வீரர்களொழிந்தனர்*
*அலகில்கலைகள்தெரி — வல்லவருலைந்தனர்*
*அற்பசுகமிவைகள் — நிற்காவெனவுணர்ந்தும்*
*(ஏனின்ன)*

இப்பெரியார் தமது தொண்ணூற்றென்பதாவது வயதில் சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தார்.

*"நானுனையே பற்றியருள் நண்ணஎனில் உள்ளப்பேய்*
*தானலையில் வீழ்துரும்பாய்ச் சஞ்சலிக்கும் — ஈனஉடல்*
*தேயமிக நோய்களுறும் செப்பறையாய்! இஃதொழியத்*
*தூயசிவ யோகெனக்குச் சொல்."*

*"சொல்லளவே ஞானச் சுகம்வருமோ மெய்ஞ்ஞானத்*
*தெல்லையடைந் தானந்த மேயருந்தி — எல்லிரவும்*
*அற்றசிவ யோகத்தன் ஆனால் சுகமடைவன்*
*தற்பரனே! செப்பறைநா தா!"*

## 32. சாது இரத்தின சற்குரு.

### [கி. பி. 1841—1901; திரு. 1872—1932.]

சென்னையம்பதியில் சிவசங்கரன் செட்டியாருக்கும் முனி அம்மையாருக்கும் திருமகனாக இவர் 1841ல் பிறந்தார். இவர் தமிழ் மட்டும் பயின்று திருவொற்றியூர்க் கிருட்டிணானந்த அடிகளிடமும் ஈசூர்ச் சச்சிதானந்த அடிகளிடத்திலும் பல ஆண்டுகள் வேதாந்த நூல்களைப் பயின்றார். கோடக நல்லூர்ச் சுந்தர முனிவரிடத்திலும் இவர் பணிந்து பழகி ஞானநூல்களைக் கேட்டார்.

நம் இந்திய நாட்டு ஆளுனராக இருந்த இரிப்பன் பிரபு பல நன்மைகளை நம் நாட்டுக்குச் செய்தார். அவர் பெயராலேயே இன்று சென்னைமா நகராட்சி மாளிகை "இரிப்பன் மாளிகை" என்று பெயர் பெற்று ஓங்குவதாயிற்று. இவர் அவர் பெயரால் இரிப்பன் அச்சுக்கூடம் என்ற அச்சுப் பணியகத்தைத் தொடங்கிப் பல பெருந் தமிழ் நூல்களை அச்சிட்டு உதவினார். அக் காலத்தில் வேதாந்திகளுக்கும் சித்தாந்திகளுக்கும் நேரிட்ட கண்டனப் போரில் இவர் வேதாந்திகளின் சார்பில் "பதிபசு பாசவாதம்," "திருமந்திர விசாரணை," "திருவள்ளுவர் முதற்குறள்" என்னும் பல நூல்களை எழுதி வெளியிட்டார். இவருடைய மாணவர் திருவிசைநல்லூர்ச் சின்னையநாயகர் என்பவர் இவரைப் புகழ்ந்து "இரத்தின சற்குரு தோத்திர மஞ்சரி" என்னும் நூலை ஆக்கினார். இவருடைய மற்றொரு சிறந்த மாணவர் சென்னை வியாசர்பாடிக் கரபாத்திர சிவப் பிரகாச அடிகளார் என்ற பெரியார்." "ஆரியசனப் பிரியன்" என்ற தாளுக்கு ஆசிரியராக இருந்த நம் சாது இரத்தின சற்குரு 8—1—1901ல் மறைந்தார்.

## 33. வ. வைத்தியலிங்கம் பிள்ளை

[கி. பி. 1842—1900; திரு. 1873—1931.]

யாழ்ப்பாணம் வல்வட்டித் துறையில் சங்கரக்குரிசில் என்பவருக்குத் திருமகனாராக இவர் 1842ல் பிறந்தார். தமிழிலும் வடமொழியிலும் கவி இயற்றும் வல்லமை பெற்ற இவர் தருக்கமும், வானநூற் கலையும் நன்கு கற்று, சிவஞானபோதம் முதலிய சமைய நூல்களிலும் மெய் ஆராய்ச்சியிலும் வல்லுநரானார்.

"சைவாபிமானி" என்னும் தாளுக்கு ஆசிரியராக இருந்த இவர் பின்வரும் நூல்களுக்கும் ஆசிரியர்: "கல்வளை அந்தாதிஉரை," "கந்தரலங்கார உரை," "சாதி நிர்ணய புராணம்," "நாற்கவிராசநம்பி அகப் பொருள் உரையின் திருந்திய பதிப்பு" முதலியன.

அக்காலத்தில் திகழ்ந்த பெரியார் சி. வை. தாமோ தரம் பிள்ளை எழுதிய "சைவ மகத்துவம்" என்னும் நூலுக்கு அருளப்ப முதலியார் என்பவர் "சைவ மகத்துவ திக்காரம்" என்னும் மறுப்பை எழுத, இவர் "சைவமகத்துவ திக்காரநிக்கிரகம்" என்னும் சிறந்த மறுப்பு நூலை எழுதினார். அதனால் இவர் புகழ் ஓங்கிற்று. சென்னையி லிருந்த பெரும் புலவர் பலர் ஒன்றுகூடி இவருக்கு "இயற்றமிழ்ப் போதகாசிரியர்" என்னும் பட்டத்தை வழங்கிப் போற்றினர். இப்பெரியார் 1900ல் மறைந்தார்.

## 34. பூண்டி அரங்கநாத முதலியார்

**[கி. பி. 1844 — 1893; திரு 1875 — 1924.]**

சென்னைமா நகரத்திலிருந்து நேர் மேற்கே அரக்கோணம் போகும் புகைவண்டி வழியின் இடையே சென்னையிலிருந்து இருபத்தாறுவது மைலில் இருப்பது திருவள்ளூர். அதனருகே இருப்பது பூண்டி என்னும் சிற்றூர். அங்கே சுப்பராய முதலியார் என்னும் பெரியாருக்கு அருமை மகனாராகப் பிறந்தார் அரங்கநாத முதலியார். இவர் முதல் வகுப்பு முதல் கல்லூரி முடிவு வகுப்பு முடிய ஒவ்வொரு வகுப்பிலும் முதல்வராகவே தேறினர். பள்ளி இறுதித் தேர்விலும், கல்லூரித் தேர்வுகளிலும் பல்லாயிரம் மாணவர்களுக்கு முதல்வராக இவர் தேறியமை மாணவருக்குத் தக்க வழி காட்டியாகுமல்லவா? இவர் கணக்கு நூற் பேராசிரியராகச் சென்னை அரசினர் கல்லூரியிற் புகழுடன் பணியாற்றினர். அக்கல்லூரியில் இருந்த ஆங்கிலம், வரலாறு, தத்துவம், தமிழ் முதலிய பாடங்களைக் கற்பித்து வந்த பெரும் பேராசிரியர்களுக்கு அவ்வப் பாடங்களில் இவர் எவ்வகையிலும் இளைத்தவரல்லர். அவ்வக் கலை ஆசிரியர் கல்லூரிக்கு வர நேராத போதெல்லாம் இவர் அவ்வவ் வகுப்புக்களுக்குச் சென்று அவ்வப் பேராசிரியர் விட்ட இடத்திலிருந்து பாடத்தைத் தொடங்கி மாணவரும் பேராசிரியரும் வியக்கும் வண்ணம் கற்பித்துத் தமது பேராற்றலையும், பெரும் புலமையையும் புலப்படுத்தி வந்தார். பேரவைகளில், கடல் மடை திறந்தது போல எடுத்துக் கொண்ட பொருள் இனிது விளங்கும்படி சொற்பொழிவாற்றும் பெருந்திறமை இவரிடம் மிளிர்ந்தது.

தமிழ்ப் புலவர்களிடத்திலே இவர் அளவுகடந்த அன்பும் மதிப்பும் உடையவர். ஒரு சமயம் சென்னையிலிருந்த

பெரும் புலவர்களைத் தம் மாளிகைக்கு வரவழைத்து ஏழு நாட்கள் அவர்களோடு அளவளாவித் தமிழாராய்ந்து இன்புற்றார். இவர் "எல்லாம் இயற்கையாக நிகழ்வன. கடவுள் ஒருவர் உலக நிகழ்ச்சிகளை அமைக்க வேண்டுவதில்லை" என்ற கொள்கை உடையவராக இருந்தார். ஆனால் தொழுவூர் வேலாயுத முதலியார் என்பவர் இவருடைய இக் கொள்கையைத் தக்க ஏதுக்கள் கொண்டு மாற்றிக் "கடவுள் ஒருவர் உளர். அவரன்றி ஓர் அணுவும் அசையாது" என்று இவர் உள்ளவாறு உணர்ந்துகொள்ளும்படி செய்தார். இவர் அன்று முதல் அன்புடனும் பெரு மதிப்புடனும் அவரைத் தம் கைகளைச் சிரமேற் குவித்து வணங்கி அவரையே தம் ஆசிரியராகப் பெற்றுப் பெருந் தமிழ்ப் புலமை அடைந்தார். இவருக்குத் தமிழ்நூல்களைக் கற்பித்த மற்றொரு பெரும் புலவர் திருமணம் சுப்பராய முதலியார்.

தம்முடைய பெரும் புலமை விளங்கத் தமிழ் உள்ளளவும் தம் புகழுடம்பு நிற்க இவர் ஒரு கலம்பகம் பாடினார். அது காஞ்சிமா நகரில் ஒரு மாவின் கீழ் எழுந்தருளியிருக்கின்ற ஏகம்ப நாதரைப் பற்றியது. பெரும் புலவருக்கேயன்றிக் கலம்பகம் பாடுவது எளிதன்று. கலப்பு+அகம்= கலம்பகம். பலவகைப்பட்ட துறைகளும் கலந்து வருவதற்கு இடமாக இருப்பது கலம்பகம். பலவகைத் துறைகளைப் போலவே இந்நூலில் பலவகைப் பாக்களும் பாவினங்களும் கலந்து வருவன.

காஞ்சி ஏகாம்பர நாதரைப் பற்றிய இக்கலம்பகம் 'கச்சிக் கலம்பகம்' எனப் பெயர் பெறும். காஞ்சி என்பதுவே மருவிக் கச்சியாயிற்று. காஞ்சி மரங்கள் நிரம்பிய இடத்தில் தோன்றிய நகரம் இது. இப் பெருநூல்

சென்னையில் தமிழ்ப் பெரும் புலவர்கள் பலர் கூடிய பேரவையில் அரங்கேற்றப்பெற்றது. திருவாரூர்ச் சின்ன சாமிப் பிள்ளை, தண்டலம் பாலசுந்தர முதலியார், மயிலாப்பூர் முருகேச முதலியார், டாக்டர் உ. வே. சாமி நாதையர், திருமணம் சுப்பராய முதலியார், சிதம்பரம் ஈசான மடம் இராமலிங்க அடிகள் ஆகிய பெரியார்கள் தலைமை தாங்கி இக்கலம்பகத்தை அரங்கேற்றி வைத்தார்கள். இக்கலம்பகம் வரன்முறை தவருமல் அந்தாதித் தொடையில் நூறு பாடல்களையுடையது. இனி இந்நூலின் அருமைகளிற் சிலவற்றைக் காண்பாம்.

*"தங்கச் சிலேயேடும் தந்தஎழுத் தாணியும்கொள்*
*துங்கக் கரிமுகத்துத் தூயவன்என் —சங்கைஒழித்து*
*ஏடெழுத்(து) ஆணி எடுத்தறியேன் இந்நூலைப்*
*பாடஅளிப் பான்நற் பதம்."*

இது பிள்ளையாருக்கு இவர் அணிந்ததங்கக் காப்பு. தங்கச் சிலை என்பது தங்கமலை ஆகிய மாமேரு. தந்தம் என்பது பிள்ளையாருடைய கொம்பு. தமது தந்தத்தின் அந்தத்தை எழுத்தாணியாகக் கொண்டு மேருமலையாகிய ஏட்டின் மேல் மாபாரதத்தை வேதவியாசர் சொல்லச் சொல்லப் பிள்ளையார் எழுதியருளிய வரலாறு இங்கே குறிக்கப் பெறுகிறது. இவர் தம்மை ஏடும் எழுத்தாணியும் அறியாதவன் என்று அவ்வளவு தாழ்மையாகக் கூறிக்கொள்கிருர். அதனுடைய கருத்து தாம் படிப்பறியாதவர் என்பது. ஆனால் "ஏடும் எழுத்தாணியும் இல்லாத பள்ளிக் கூடத்தில் இவர் படித்தார், தாளும் எழுது கருவியுங் கொண்டு" என்ற கருத்தும் இதில் தொனிக்கிறது.

நூலின் முதற்பாடலில் இவர் திருமாலையும், சம்பந்தரையும் பற்றிப் பாடுவன மனம் கவர்வன. இவருடைய

ஒப்பற்ற சிவபத்தியை எடுத்துக் காட்டுவன பின்வருவன மூன்று தாழிசைகள்.

> *"கொம்பனையாள் கல்லுருவிட் டின்னுருவங் கொண்டதினும்*
> *சம்பந்தன் என்பைப்பெண் ணாக்கியது சால்புடைத்தே."*
>
> *"அண்டரிள மடவாரை அணைந்தவபி ராமமென்றே*
> *பண்டிருடி மனைவியர்கள் பாடழிந்த வனப்பினுக்கே."*
> *"பற்குனற்கு மாயன்சு பத்திரையைத் தந்தவகை*
> *சற்குணற்குப் பரவைதரு தண்ணளிக்கு நேராமோ."*

கொம்பனையாள் – அகலிகை. கோதம முனிவரின் மனைவி இவள். அவருருவைத் தாங்கி வந்து அவளைக் கூடினன் இந்திரன். அவன் இந்திரன் என்று தெரிந்த பின்னரும் அவனைத்தழுவி அவள் இன்புற்றாள். அகலிகையைக்கல்லுருவாகச் சபித்தான் கோதமன். அதன்படி கல்லாகக் கிடந்த அவள்மேல் இராமபிரான் கால்பட்டவுடன் அவள் பழைய பெண்ணுருவம் அடைந்தாள். பூம்பாவை என்ற பெண்ணின் எலும்பைத் திருமயிலைக் கபாலீசுவரரைப் பாடிப் பெண்ணுருவாக்கினார் சம்பந்தர். இராமன் கால் பட்டதினால்தான் கற்புநிலை கெட்ட அகலிகை பெண்ணானாள். ஆனால் சம்பந்தர் உடல் உறுப்பு ஒன்றும் படாமலே பூம்பாவையைப் பாட்டுப் பாடிப் பெண் உருவாக்கினார். அண்டர் – இடையர். அபிராமம் – அழகு. இடைப் பெண்கள் கண்ணபிரானை அடிக்கடி கண்டு அவர் பேரழகில் ஈடுபட்டு அவரைக் கூடினார்கள். ஆனால் சிவபெருமான் கங்காள நாதராகி ஓர் உடையுமில்லாமற் சென்றபோது தாருகா வனத்து முனிவருடைய மனைவிமார்கள் அவரைக் கண்டு அவர் அழகில் ஈடுபட்டுத் தம் நிலையழிந்தார்கள். இவ்விருவர் அழகினுள் எவர் அழகு சிறந்தது என்று கவிஞர் வினவுகின்றார். பற்குனன் –அருச்சுனன். சற்குணன் –

நல்ல குணமுடையவனுகிய சுந்தரமூர்த்தி நாயனுர். துரி யோதனுதியருள் ஒருவருக்கு மணம் பேசியிருந்த தன் தங்கை சுபத்திரையைக் கண்ணன் சூழ்ச்சிகள் செய்து அருச்சுனனுக்கு மனைவியாகத் தந்தான். இது சூழ்ச்சியின் விளைவு. ஆனுல் சிவபெருமான் கணிகையர் குலத்திற் பிறந்த பரவையாரைச் சுந்தரருக்கு மனைவியாகத் தந்தரு ளினுர்; தம் குலப் பெண்ணை மணப்பதைத் தடுத்துச் சுந்தர ருக்கு இக் கணிகைப் பெண்ணை மணப் பெண்ணுக அருளி யது பெருங் கருணையே என்று இவர் போற்றுகின்ருர். மேலும், இப் பரவையாருடைய ஊடலைத் தீர்ப்பதற்கு இரண்டு முறை தூதராகிச் சென்று சுந்தரருக்குத் திருவருள் பாலித்தார் சிவபெருமான்.

இங்ஙனமாகச் சிவபெருமானுடைய திருவருளிலும், திருப்புகழிலும் ஈடுபட்ட நம் கலம்பகக் கவிஞர் பெருமான் தம்முடைய சமையக் கருத்தை ஊசல் என்ற தலைப்பில் தாம் பாடிய எண்சீர் ஆசிரியர் விருத்தத்திற் புலப்படுத்து கின்ருர்.

"தேவார முதலியவைந் துறுப்பும் வாழச்
*சிறந்தமறை ஆகமங்கள் செழித்து வாழத்*
*தாவாத சித்தாந்த சைவம் வாழச்*
*சந்தவரைச் செந்தமிழ்நூல் தழைத்துவாழ*
*நாவாரும் புகழ்க்கச்சி நகரிற் காம*
*நயனி யொடு முறையிறைசீர் நன்குபாடிப்*
*பூவாரு மலர்விழியீர்! ஆடீர் ஊசல்*
*புத்தமுத நிகர்மொழியீர்! ஆடீர்ஊசல்."*

தேவாரம் முதலிய ஐந்துறுப்புகளாவன: 1. தேவாரம், 2. திருவாசகம், 3. திருவிசைப்பா, 4. திருப்பல்லாண்டு, 5. திருத் தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம் என்பன. ஆடுவீர் என்பது ஆடீர் என மருவி நின்றது.

காமநயனி – காமாட்சி. "தேவார திருவாசகங்களும் வேத சிவாகமங்களும், சித்தாந்த சைவமும் தழைத்தோங்கும் படி கச்சியில் எழுந்தருளியிருக்கின்ற காமாட்சி ஏகாம்பர நாதருடைய சிறப்பை நன்ருகப் பாடிப் பெண்களே! ஊசல் ஆடுவீர்களாக" என்று பாடுகின்ருர் புலவர் அரங்கநாத முதலியார். இதனுல் இவருடைய சைவப்பற்றும், தமிழ்த் தாய்ப் பற்றும், சிவபெருமானுடைய திருவடிக்கு இவர் கொண்டிருந்த பேரன்பும் மலைமேலிட்ட விளக்குப் போல் விளங்குகின்றமை காண்க.

செவியறிவுறூஉ மருட்பா

*"கம்பத் திருந்துதவுங் கண்மணியைச் சிந்தித்து*
*நம்பத் திருந்துவீர் நானிலத்தீர் — வெம்பும்*
*பிணியு மூப்பும் பீடழி பழியுந்*
*தணியா வறுமைத் தாழ்வுந் தீரும்*
*திருவருள் நமக்குச் சிவணத்*
*தருவன் அன்ஞேன் சற்குரு வாயே."*

*[கச்சிக் கலம்பகம்]*

## 35. சபாபதி நாவலர்

### [கி. பி. 1844 — 1903; திரு. 1875 — 1934.]

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வட கோவையில் சைவ வேளாளராகிய சுயம்புநாத பிள்ளைக்கும், தெய்வயானை அம்மைக்கும் மகனுராக 1844-ல் சபாபதி நாவலர் பிறந்தார். தமிழிலும், வடமொழியிலும் பெரும் புலமை பெற்ற இவர் ஆங்கிலமும் கற்று வல்லவரானுர். இவருடைய புலமையை அறிந்த ஆறுமுகநாவலர் தம் சிதம்பரம் சைவப்

பிரகாச வித்தியாசாலையில் இவரைத் தமிழ்த் தலைமைப் பேராசிரியராக அமர்த்தினுர். சில நாள் அங்கே பணிபுரிந்த சபாபதியார் திருவாவடுதுறைக்குச் சென்று திருமடத்தில் இருபத்தாருவது தலைமையாசிரியராக எழுந்தருளியிருந்த மேலகரம் சுப்பிரமணிய தேசிகரிடம் அடைக்கலம் புகுந்தார். அவர் இவரைத் தம் மாணவராக ஏற்றுக் கொண்டு சமைய விசேட நிர்வாணம் என்ற மூவகைத் தீக்கையும், சித்தாந்த ஞான மொழியும் அருளினுர். இங்ஙனமாகச் சில ஆண்டுகள் இவர் துறைசைத் திரு மடத்தில் தங்கியிருந்து ஞான தேசிகரிடம் மெய்கண்ட சாத்திரம், பண்டார சாத்திரங்களின் நுண்பொருள்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்தார். அக்காலத்தில் ஞான தேசிகர் நாடோறும் இவரைச் சொற்பொழிவாற்றுமாறு செய்து பெரிதும் திருஉள்ளம் மகிழ்ந்து இவர்தமக்கு "நாவலர்" என்ற பட்டத்தைச் சூட்டி அருளினுர். இவருடைய சொற்பொழிவுகள் கேட்பார் உள்ளத்தைக் கவர்வன. இவரிடம் பாற்கர சேதுபதி மன்னர் பெருமதிப்புக் கொண்டு இராமநாதபுரத்திற்கு அழைத்துச் சென்று தம்மோடு சிலகாலம் தங்கும்படி செய்து ஆதரித்துப் பாராட்டினுர். சபாபதி நாவலர் சேதுபதியாருடைய பொருட்கொடை பெற்றுச் சென்னைக்குச் சென்று அங்கே அச்சுக் கூடம் ஒன்றை அமைத்து 'ஞானமிர்தம்' என்னும் மாதத் தாளினைத் தொடங்கி வெளியிட்டு வந்தார். இவருடைய மாணவர்களில் சிறந்தவர்கள் மாகறல் கார்த்திகேய முதலியார், மயிலைச் சிங்காரவேல் முதலியார் முதலியோர் பலர். இவர் 1903-ல் சிதம்பரத்தில் சிவபதவி அடைந்தார்.

இவர் இயற்றிய நூல்கள் பல; "இயேசு மத நிராகரணம்" என்னும் கண்டன நூலை நூற்றுஅறுபத்தெட்டுச் செய்யுட்களாகப் பாடி வெளியிட்டார். அப்பயதீட்சதர்

என்ற பெரியார் வடமொழியில் ஆக்கிய சிவகர்ணாமிர்தம், பாரத தாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம் என்னும் நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து உதவினர். திருச்சிற்றம்பல யமகஅந்தாதி, திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, மாவையந்தாதி என்பன இவர் பாடியன.

சிவகர்ணாமிர்தம் என்பது பூர்வபக்கம், சித்தாந்தம் என இரண்டு பகுதிகளையுடையதாய்ச் சிவபெருமானுடைய முழு முதன்மையைக் கூறுவது. பாரத தாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம் என்பன பாரதத்தாலும், இராமாயணத்தாலும் நுதலப்படும் பரம்பொருள் சிவபெருமானே என்பதை அறிவுறுத்துவன. பெரிய புராணத்தையும், இராமாயணத்தையும், தணிகைப் புராணத்தையும் இகழ்ந்து "சிந்தாமணி" என்னும் சிறு நூல் வெளிவந்தது; அதனை மறுத்து மேலே கண்ட நூல்களின் மெய்ப்பெருமையை 'வைதிகக் காவிய தூடண மறுப்பு' என ஒரு சிறந்த நூலில் இவர் வெளியிட்டார்; அரதத்தாசாரியார் வடமொழியில் அருளிய சதுர்வேத தாற்பரிய சங்கிரகம் என்ற சிறந்த நூலைத் தமிழில் மொழி பெயர்த்து நான்கு வேதங்களாலும் புகழ்ந்தோதப்பெறும் பரம்பொருள் பரமசிவனே என்று சாதித்தார். இன்னும் இவர் எழுதிய நூல்கள் பல. அவைதம்முட் சிறந்தன திராவிடப் பிரகாசிகையும், சிதம்பர சபாநாத புராணமும் என்பன. அவைகளை ஆராய்வோம்.

"திராவிடப் பிரகாசிகை" என்பது "தமிழ் விளக்கு" என்று பொருள்படும். திராவிடம் என்பது தமிழ்நாடு. உலகத்துள் முதன்முதல் மக்கள் இனம் தோன்றிய முதலிடம் ஆதலின் அது திரு இடம் என்று பெயர் பெற்றது.

திரு இடம் திராவிடம் என மருவி வடசொல் போல வழங்குவதாயிற்று. அத்திரு இடத்தில் முதன்முதல் தோன்றிய தமிழ் மொழியும் திராவிடம் என அழைக்கப் பெறுகிறது. தெய்வத் தீந்தமிழ் மொழியின் தெய்வப் பழமை மரபியல், இலக்கண மரபியல், இலக்கிய மர பியல், சாத்திர மரபியல், ஒழிபியல் என இந்நூல் ஐந்து கூறுடையது.

மொழி மரபியல் தமிழின் தெய்வமாட்சி, தென் மொழி முடிவு, தமிழ்ப்பொது எல்லை, செந்தமிழ் நிலம், செந்தமிழ்ச்சொல், செந்தமிழ் வழக்கு என்னும் பிரிவுகளால் அமைந்தது, அகத்தியம், தலைச்சங்கம், இடைச்சங்கம், தொல்காப்பியம், அத்தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகியவற்றின் அமைவு கள், அகத்தியனுருடைய மாணாக்கரான தொல்காப்பிய முனிவர் முதலிய பன்னிருவராலும் இயற்றப்பட்டதொரு புறப்பொருள் இலக்கண நூலாகிய பன்னிரு படலம், கடைச் சங்கத்தின் தோற்றமும், அதில் தோன்றிய களவியல் நூலும், பின்னர்த் தோன்றிய வெண்பா மாலை, அகப் பொருள் விளக்கம், யாப்பருங்கலம், யாப்பருங் கலக் காரிகை, வெண்பாப் பாட்டியல், தண்டியலங்காரம், நேமிநாதம், வீர சோழியம், நன்னூல், பிரயோக விவேகம், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூருவழி ஆகிய இலக்கண நூல் களும், அவை பற்றிய குறிப்புக்களும் இலக்கண மரபிய லில் அடங்கும். பின் இலக்கிய மரபியல் தொடங்கப் பெறுகிறது. சைவத் திருமுறைகளாகிய தேவார திருவாச கங்கள், சங்க இலக்கியம், காவிய இலக்கியம், புராண இலக்கியம், இதிகாச இலக்கியம், பலவகைப் பிரபந்த

இலக்கியம் எனத் தமிழ் இலக்கியம் பலதிறப்படும் எனத் தொடங்கிக் கொண்டு இந்நூலாசிரியர் சபாபதி நாவலர்.

"பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை என்று இத்தொடக்கத்துத் தலைச் சங்க இலக்கியங்களும், கலி, குருகு, வெண்தாழி, வியாழ மாலை அகவல் என்னும் இத்தொடக்கத்து இடைச்சங்க இல்க்கியங்களும் இறந்தன ஆதலான் அவற்றின் வரலாறு அறிந்து கூறுமாறு இல்லை. கடைச்சங்க இலக்கியங்கள்: நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல், கூத்து, வரி, பேரிசை, சிற்றிசை என்று இத்தொடக்கத்தன. இவற்றுட் சில இறந்தன, பல நிலவுகின்றன. இவையும் இன்னோரன்னவுமான கடைச் சங்க இலக்கிய வரலாறு திருமுறை இலக்கியங்களின் பின்னர்த் தந்துகூறுதும்" என்று கூறிக் கொண்டு சைவத்திருமுறைகள் பன்னிரண்டையும் விரிவாக விளக்குகின்றார். பின் நாலாயிரப் பிரபந்தத்தின் விவரம் கூறி உலகப் பொது மறையாக விளங்கும் திருக்குறளை எடுத்துக் கொண்டு விவரித்து முதற் றிருக்குறளுக்கு விருத்தியுரை வகுத்துப் பின்னர் பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, ஐம்பெருங் காப்பியங்கள், இராமாயண பாரத மாகிய இதிகாசங்கள் முதலியவற்றை விவரித்து உரைக்கின்றார். கடைசியாக இவர் சாத்திர மரபியலை எடுத்துக் கொண்டு வேதாந்த சாத்திரங்களிவையென்றும் வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்த சாத்திரங்கள் இவையென்றும் விளக்குகின்றார். பின் ஈற்றிலுள்ள ஒழிபியலைத் தொடங்கித் தமிழ் இலக்கண இலக்கிய சாத்திரப் புலமைகளை நிரப்புமாறும் அப் புலமைகளானே இகபர வீடு பேறுகளைச் சாதித்து எய்துமாறும் தொடங்கிக் கல்விச்

சிறப்பு, கற்பிக்கும் நல்லாசிரியர் இயல்பு, கற்கும் நன் மாணுக்கர் இயல்பு, கற்கும் முறை, கற்கும் நூன்முறை, கல்வியறிவின் பயன் என்றிவைகளை விரித்துரைத்து இங்ஙனமாதலின், "நிலையாமை நாடி நெஞ்சில் துறந்து மெய்யுணர்ந்து அவா அறுத்துச் செம்பொருள் ஞானச் செல்வராய் வாழ்தலே ஒரு நன்மகனுக்குக் கல்வியறிவின் முக்கிய பயன் என்பது கடைப்பிடியாயிற்று" என்று தம் நூலை முடிக்கின்ருர்.

திராவிடப் பிரகாசிகை 1899ல் அச்சியற்றப்பெற்றது. இஃது ஓர் அறிவுக் களஞ்சியம். தமிழ் மாணவருக்கு அதன் வரலாறு கூறும் பெருவிருந்து இதுவே. தமிழ் வரலாறு கூறிய முதற் பெருநூல் இதுவே. இனி இப்பெரியார் பாடிய சிதம்பர சபாநாத புராணத்தை ஆராய்வோம்.

சிதம்பரத்தில் திருக்கோவில் கொண்டு சிற்சபையிலே ஆனந்தக் கூத்தாடும் நாதருடைய வரலாற்றைக் கூறும் புராணமே இது. இந்நூல் கடவுள் வாழ்த்துடன் பதி ஞன்கு படலங்களையும், எண்ணூற்றுத் தொண்ணூற் ருெரு பாடல்களையும் உடையது. இவற்றுள் திருநாட்டுப் படலம், திருநகரப் படலம், தீர்த்த விசேடப் படலம் ஆகிய இம்மூன்று படலங்களுமே இப்புராணத்தின் பாதிப் பகுதியை [முறையே 173+139+110=422] உள்ளடக்கி யுள்ளன. சிதம்பர சபாநாதர் பதஞ்சலி முனிவருக்கும், வியாக்கிரபாத முனிவருக்கும் தமது திருநடனத் தைக் காட்டியருளிய வரலாறு தான் இதில் கூறப் பெறுவது. பதஞ்சலியாரே திருமாலுக்குப் பாயலாக விளங்குகிற அனந்தன். இவர் வடமொழியில் யோக சூத்திரமும், வியாகரண மாபாடியமும், வைத்திய நூலொன்றும் இயற்றியிருக்கிருர். வியாக்கிரம் என்பது

புலி. புலியின் பாதம் தமக்கு வேண்டுமென்று தவம் கிடந்து பெருமானிடம் வரம்பெற்ற முனிவரே வியாக்கிர பாதர். கால் நகங்கள் பூ எடுப்பதற்கு மரங்களில் ஏறத் துணை புரியும்படிக்கும், நகக்கண்கள் இருட்டிலும் மலர் களைக் காணும்படிக்கும் இவர் வரம் பெற்றார். ஏனெனில் விடிந்தபின் ஈக்கள் மொய்த்துப் பூக்களை எச்சிற்படுத்தி விடுமாதலால் விடியுமுன் மரங்களில் ஏறிப் பூக்களைச் சிவ பூசைக்குப் பறித்தல் வேண்டுமென்பது இவர் கருத்து.

இப் புராண வரலாற்றுக்குத் தோற்றுவாயாக இருப் பது தாருகா வனத்து முனிவர்களுடைய வரலாறு. அது பிச்சாடனப் படலம், தேவதாரு வனப் படலம் என்ற இரண்டு படலங்களால் விரித்துப் பாடப் பெற்றுள்ளது. தேவதாரு வனம் என்பதும் தாருகா வனம் என்பதும் ஒன்றே. அவ்வனத்தில் முனிவர் பலர் வாழ்ந்திருந்தனர். அவர்கள் வேதங்களில் சொல்லப் பட்டுள்ள கரும வேள்விகளைச் செய்து அவைகளினால் தாம் நினைத்த காரி யங்கள் முடிவது கண்டு தமக்குத் தாம் நினைத்தன முடிப் பதற்குக் கடவுள் ஒருவர் வேண்டுவதில்லை என்ற முடிவுக்கு வந்து இறுமாந்திருந்தனர். அவருடைய மனைவியரும் அவர்களுக்குத் தொண்டு செய்தலே கற்புடைமை என்ற முடிவுடன் அகந்தையடைந்தார்கள். அவர்களை நல்வழிப் படுத்த வேண்டும் என்று சிவபெருமான் எண்ணிப் பிச்சை எடுப்பவராக உருவங் கொண்டு தேவதாரு வனத்திடை வந்தார். அவரருகே தன்னைக் கண்ட ஆடவர் அனைவரும் காமுறும் பேரழகுடன் அவருடைய சத்தியாகிய நாரா யணி, மோகினி உருக்கொடு வந்தாள். பிச்சை யெடுக்க வந்த பேரழகினரைக் கண்ட முனிமனைவியர் அனைவரும் காமுற்று நிலையழிந்து நின்றார்கள். அதனை அறிந்த முனிவர்கள் சினங்கொண்டு அந்நிலை செய்தவனைக் காண

வந்து ஒரு மரத்தடியிலே அவன் நின்று கொண்டிருப்பதைக் கண்டு அவனை நெருங்கினார்கள்; அப்போது அவனருகே நின்று கொண்டிருந்த மோகினியைக் கண்டார்கள்; கண்டவுடன் காமுற்று மயங்கினார்கள். அப்போது கவி "காமத்தைப் போலப் பழி தருவது வேறொன்று உண்டோ" என்ற நீதியை நிலைக்களமாகக் கொண்ட ஒரு பாடலைப் பாடுகின்றார்.

"கற்றநூல் மறந்தார் ஓம்பும்
　　தவஒழுக் கங்கள் விட்டார்
மற்றிவள் எனக்கெ னக்கே
　　உரியளாம் எனமா றாடிச்
சிற்றிடைக் குறுகண் செய்யும்
　　பெருமுலைத் தெரிவை மாட்டுப்
பற்றுவைத் தவசரானார்
　　காமத்தே பழிவே றுண்டே,"

அப்போது மோகினியோடு சிவபெருமான் மறைந்து நின்றார். அதுகண்ட முனிவர்கள் தம் வசம் அடைந்து சிவபெருமானை அழிக்க மாரண ஓமம் வளர்த்தார்கள். அவ் ஓமகுண்டத்திலிருந்து வந்த யானையைச் சிவனார் உரித்து அதன் தோலைப் போர்த்துக் கொண்டார்; புலியின் தோலை உடுத்திக்கொண்டார்; பாம்புகளை அணிகளாக அணிந்து கொண்டார்; மானை வலது கையிலும், தீயை இடது கையிலும் தாங்கிக்கொண்டார்; கடைசியாகத் தோன்றிய பூதத்தின் மேல் நின்றார். இங்ஙனமாக அவர்கள் செய்த வேள்வி சிவனார் தம் வலியினாலே சிதைந்து வீண் செயலாய் மடிந்தது கண்டு அம்முனிவர்கள் தவத்தில் தாம் கொண்டிருந்த மோகத்தை விட்டு ஞானவழியில் தலைப்பட்டார்கள். அப்போது யாவும் கடந்து நின்ற சிவபெருமானை வணங்கி வாயார வாழ்த்தினார்கள். சிவ

பெருமான் அப்பூதத்தின்மேல் நின்று எட்டுக் கைகளை யும் வீசித் தனிப்பெருங் கூத்தாடினர். முனிவர்களும், முனி மனைவியரும் அத்திருக்கூத்தைக் கண்டு நல்வாழ்வு பெற்றனர்கள். சிவனுர் ஏவலால் மோகினியாகிய நாரா யணி திருப்பாற்கடலை யடைந்து கங்கை சூடிய பெரு மான் தாருகா வனத்திடைக் காட்டியருளிய கூத்திலே ஈடுபட்டு மெய்ம்மறந்து வீற்றிருந்தான். அதுகண்டு திருமகள் அதிசயித்தாள். பாயலாக விளங்கும் அனந்தன் "எம்பெருமானே! யாவரும் உன்னை எண்ணிப் பேரானந்தம் அடைவார்களே! நீர் எதனை எண்ணி இங்ஙனம் மெய்ம் மறந்து இருக்கின்றீர்?" என்று பணிவுடன் வினவினன். அதற்குத் திருத்துழாய் மாலைப் பண்ணவன் "தேவதாரு வனத்திலே சிவபெருமான் செய்தருளிய பெருங்கூத்துக் கண்டேன். அந்நேரந்தொட்டு என் கருத்து அத்திருக் கூத்திலேயே தங்கி நிற்கின்றது;" என மறுமொழி பகர்ந்தான். அதனைக்கேட்ட அனந்தன் தானும் அப் பெருங் கூத்தினைக் காணும் பேராசை கொண்டான்.

இங்ஙனமாகப் புராண வரலாறு தொடங்குகிறது. அனந்தன் சிவபெருமானைக் கண்டு திருக்கூத்துப் புரியத் தவம்புரிந்தான். சிவபெருமான் அவன் முன் தோன்றி "நீ உன் ஆயிரம் தலைகளையும் மறைத்து ஐந்து தலை களோடு நிலத்தின் வழியாகத் தில்லையை அடைந்து பதஞ்சலி என்ற பெயரைத் தாங்கி அங்கே தவம் செய் திருக்கும் வியாக்கிரபாத முனிவரைக் காண்பாயாக. நீவிர் இருவிருக்கும் திருநடனக் காட்சி அருள்வோம்" என்று திருவாய் மலர்ந்தருளினர். அங்ஙனமே முனிவர் இரு வருக்கும் திருநடனம் காணும்பேறு கைகூடுகின்றது.

இந்தத் தல புராணம் இவருடைய மாணவர் விழுப்புரம் இராமசாமிப் பிள்ளையால் 1884 பார்த்திப ஆண்டு வைகாசி மாதம் சென்னை இரிப்பன் அச்சகத்திற் பதிபிக்கப் பெற்றது. அப்போது இவருக்கு வயது நாற்பது. இதற்குப் பதினைந்து ஆண்டுகள் கழித்து வெளிவந்தது திராவிடப் பிரகாசிகை என்ற ஒப்புயர்வற்ற நூல்.

சபாபதி நாவலர் தமக்கு ஞான தீக்கையருளிய மேலகரம் பண்டார சன்னிதி எனப் புகழ்ப்பெயர் படைத்த சுப்பிரமணிய தேசிகரிடத்தில் ஞான நூல்களையெல்லாம் கற்றுத் தெளிந்தாராதலின் அவரைத் தம் ஞானுசிரியராக வழிபட்டு வந்தார். இவர் திருவாவடுதுறை ஆதீன குல தெய்வமாகிய சிவஞான முனிவர் அருளிய இலக்கண இலக்கியங்களையும், சிவஞான போதத்திற்கு அம்முனிவர் பெருமான் அருளிய பேருரையாகிய சிவஞான மாபாடியத்தையும் கற்று வல்லவரான படியால் அம் மாதவச் சிவஞான முனிவரையும் தம் பேராசிரியராகவே வழிபட்டு வந்தார். அதனுல் இவர் தாம் பாடிய சிதம்பர சபாநாத புராணத்தில் கடவுள் வாழ்த்தோடு அவருக்கும் ஒரு வாழ்த்துக் கூறுகின்றுர். அது கூறுவோம்.

*"குறியமுனி அருளியமெய் வரத்தினுல் அவதரித்துக்*
*கோதில் ஞானத்*
*துறைசைநமச் சிவாயகுரு அருட்கடலும் வட*
*மொழிதென் மொழிப் பேர்த்தூய*
*நிறைகடலும் உண்டுபுனி தாத்துவித சித்தாந்தம்*
*நிலவப் பூமேல்*
*மறைமொழிமெய்ச் சிவஞான பாடியஞ்செந் தமிழ்*
*வகுத்த யோகி வாழி."*

வடமொழியில் ஆதிகவி என்று பெருமையையுடையவர் வால்மீகி முனிவர். அவர் தாம் இயற்றிய இராமா

யணத்தில் தொனி விருத்தியால் சிவபெருமானது பரத்து வத்தை வெளியிட்டனர். அக்கருத்துக்களை அப்பய தீக்கி தர் என்ற பெரியார் "இராமாயண தாற்பரிய சங்கிரகம்" என்று இருபத்தைந்து சுலோகங்களாக வடமொழியில் எழுதியிருப்பதோடு அதற்குத் தக்க உரையும் வகுத்தருளி ஞர். அந்த அரிய நூலும் பொருளும் தமிழ் மட்டும் கற் ருரும் அறிதற் பொருட்டு அதனைச் சபாபதி நாவலர் மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கின்ருர். அதில் நான் காவது பாட்டு வருமாறு:-

"இரகுநாதன் இலவணா வதைப்பொருட்டு தன்கை
யிருந்தஅரி உருவான சரத்தினைச்சத் துருக்கன்
கரமீயும் போழ்திலதன் பிரபாவம் கூறிச்
சிவனருளும் சூலமவன் கைக்கொள்ளா வேலை
வரமேவும் இச்சரசங் கிரோதனத்தைச் செய்து
வதைத்திஅசு ரனைச்சீமான் நீலகண்டன் செய்கை
பரர்ஏவர் கடப்பவரென்று உரைத்தனன்உன்
னிடத்துப்
பகர்ந்தஇந்த விசேடணமற் ருேரிடத்தும் பாரேம்."

இராமன் இலவணனைக் கொல்லும் பொருட்டுத் தன் கையி லிருந்த நாராயணப் படையைத் தன் தம்பி சத்துருக்கன் கையில் கொடுத்தனுப்பினுன். அப்போது "சத்துருக்கா! இலவணனிடத்தில் சிவபெருமான் கொடுத்த சூலப்படை இருக்கிறது. அதை அவன் எடாத சமயம் பார்த்து அந்த அசுரனைக் கொல்வாயாக. சீமானுகிய சிவபெருமானுடைய செயலை எவரால் கடக்க முடியும்! (சிவபெருமானே!) உம் மைப் பற்றிச் சொல்லப்பட்ட இச்சிறப்பு மற்ருெருவரிடத் தும் காண்கிலேன்."

இங்ஙனமாகச் சிவபரத்துவம் சாதிக்கப்படும் ஒவ் வோரிடத்தையும் சுட்டிக் காட்டி இராமாயணம் சிவ

பெருமானுடைய முதன்மையை நிலைநாட்டும் நூல் என்று அப்பய தீக்கிதர் வடமொழியில் வெளியிட்ட உண்மைகளை இவர் தமிழருக்குப் பாவாலும் அதன் உரையாலும் வெளியிட்டுதவினர்.

சிவஞான போதத்துக்குப் பேருரை வகுத்துத் திராவிட மாபாடியக்காரரெனப் புகழப் பெறும் சிவஞான முனிவர் "சித்தாந்த மரபு கண்டன கண்டனம்", "எடுத்து என்னும் சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம்", "சிவசமவாத உரை மறுப்பு" என்னும் மூன்று நூல்களை ஆக்கியிருக்கிறார். இவை மூன்றும் கண்டன நூல்கள். சித்தாந்த மரபு என்பது மரபு அட்டவணை எனவும் வழங்கப் பெறும். இதனை எழுதினர் திருவாவடு துறை மடத்தைச் சேர்ந்த ஒருவர். அந்த மரபு அட்டவணைக்குக் கண்டனம் எழுதினர் தருமபுரத்து மடத்தைச் சேர்ந்த ஒருவர். இவ்விருவர் பெயரும் புலனாகவில்லை. இந்த மரபு கண்டனத்திற்குக் கண்டனம் எழுதின ஆசிரியர் சிவஞான முனிவர். இந்நூலே சித்தாந்த மரபு கண்டன கண்டனம்.

சிவஞான சித்தியாருக்கு ஞானப் பிரகாச முனிவர் என்பவர் ஒரு புது உரை எழுதினர். அதில் அவர் "என்னை இப் பவத்தில்" என்று தொடங்கும் திருவிருத்தத்தில் 'எடுத்து' என்னும் சொல் முதல் அடியில் வருகிறது. அதற்கு அவர் மாறுபடக் கொண்ட பொருளைக் கண்டித்துத் தாம் கூறிய பொருளே பொருளெனச் சிவஞான முனிவர் ஒரு கண்டனம் எழுதி நிலைநாட்டினர். அதுதான் எடுத்து என்னும் சொல்லுக்கிட்ட வைரக்குப்பாயம். வைரம் சிதைக்க முடியாதது. குப்பாயம் – சட்டை.

சிவசமவாதம் என்பது சிவபெருமானோடு சமத்துவம் கற்பிப்பது. இது உருவ சிவசமவாதம் என்றும், அருவ

சிவசமவாதம் என்றும் இரு வகைப்படும். அவை தம்முள் அருவ சிவசமவாத மதத்தை நாட்டினவர் அகோர சிவாச்சாரியார். அவரைப் பின்பற்றியவர் ஞானப்பிரகாசமுனிவர். இம்முனிவர் சிவஞான சித்தியாருக்கு எழுதிய உரையைச் சிவசமவாத பரமாக எழுதினர். அதற்குச் சிவஞான முனிவர் எழுதிய கண்டனமே சிவசமவாதவுரை மறுப்பு என்பது.

இம்மூன்று நூல்களையும் பல படிகளைக் கொண்டு ஆய்ந்து வெளியிட வேண்டும் என்பது அக்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனத் தலைவராயிருந்த அம்பலவாண தேசிகர் கட்டளை. அதனைச் சிரமேற் கொண்டு ஆய்ந்து எழுபத்தேழு [24+8+45] பக்கங்களில் சபாபதி நாவலர் வெளியிட்டார்.

## 36. கணபதிப் பிள்ளை

[இ. பி. 1845—1895; திரு; 1876—1926.]

யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த புலோலி என்னும் ஊரில் சைவ வேளாள குலத்தில் வல்லிகுலநாத பிள்ளை என்பவருக்கு 1845-ல் கணபதிப் பிள்ளை பிறந்தார். தென்மொழி வடமொழிப் புலமையோடு ஆங்கிலமும் கற்று இவர் தமிழ் நாட்டுக்கு வந்து காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக இருந்தார். சில ஆண்டுகளின் பின் இவர் திருவனந்த புரத்திலுள்ள அரசர் கல்லூரியில் தமிழ்ப் புலமையும், வடமொழிப் புலமையும் நடாத்தி வந்தார். இவர் எழுதிய நூல்களிற் பல வடநூல்களின் மொழி பெயர்ப்பே. அவை வில்கணியம், இரகுவமிசச் சுருக்கம், மாணிக்கவாசகர் புராணம், மார்க்கண்டேயர் புராணம், இந்திர சேனை நாடகம் முதலியன.

## 37. திருச்சி அமிர்தம் பிள்ளை,

[கி. பி. 1845—1899; திரு. 1876—1930]

திருசிரபுரம் சிந்தாமணியில் அழகியநாத பிள்ளை என்பவருக்கு மகனாராக 1845-ல் அமிர்தம் பிள்ளை பிறந்தார். அந்நாளில் உறையூரிலே 'முத்து வீரியம்' என்ற இலக்கண நூலை இயற்றிப் புகழ் படைத்திருந்த முத்து வீர உபாத்தியாயரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்று இவரியற்றிய நூல்கள் யாப்பிலக்கண வினாவிடை, பெண்மைநெறி விளக்கம் என்னும் சிறு நூல்கள்.

இவரை இரத்தினம் பிள்ளை என்ற வள்ளல் ஆதரித்து வந்தார். அவருடைய பெரும் புகழைப் பாடித் 'தமிழ்விடு தூது' என்ற நூலை இவர் இயற்றினார். அந் நூலுக்கு முகவுரை எழுதியவர் மறைமலையடிகள் என்ற பெரியார்.

---

## 38. சோமசுந்தர நாயகர்.

[கி. பி. 1846—1901; திரு. 1877—1932.]

சென்னை மாநகரத்தைச் சேர்ந்த சூளை என்ற பகுதியில் 16—8—1846-ல் இராமலிங்க நாயகருக்கும் அம்மணி அம்மையாருக்கும் பெரும் புகழ்த் திருமகனாகச் சோம சுந்தர நாயகர் பிறந்தார். இவருடைய பெற்றோர் இவருக்கு இட்ட பிள்ளைத் திருப்பெயர் அரங்கசாமி என்பது. அரங்கசாமி தம் உறவினராகிய அச்சுதானந்தரிடம் தமிழும் வடமொழியும் பயின்றார். இவர் பள்ளிக் கூடத்திற் சேர்ந்து படித்து ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் வல்லவரானார். இவருடைய ஆசிரியர் அச்சுதானந்தர் இவருக்கிருந்த அரங்கசாமி என்னும் பெயரை

மாற்றிச் சோமசுந்தரம் என்னும் பெயரை அமைத்தார். அது முதல் இவர் சோமசுந்தரர் என்னும் புகழ்ப் பெயர் கொண்டு விளங்குவாராயினர்.

இவர் கல்வி பயின்ற ஆசிரியர் அச்சுதானந்தர் சங்கராச்சாரியாருடைய வேதாந்த மதத்தைத் தழுவியவர். அதனால் முதலில் இவரும் தொடக்கத்தில் வேதாந்தியாகவே இருந்து வந்தார். இது இவர் இயற்றிய "வேதபாகிய சமாச கண்டனம்" என்ற நூலின் குரு வணக்கமாகப் பாடிய பின்வரும் பாடலால் வெளியாகின்றது.

*" சிற்பரகுரு எமது*
*அற்புத சங்கரர்*
*பொற்பதமலர் தொழுது*
*உற்பவம் மாற்றுதும்."*

வேத பாகிய சமாச கண்டனம் என்ற நூல் வேத சமாசம், பிரம்ம சமாசம் எனப் பெயர் பூண்ட புதுச் சங்கத்தார் உருவ வழிபாடு கூடாது என்று எழுதிய ஒரு சிறு நூலை மறுத்து உருவ வழிபாட்டின் உண்மையினையும், அது உலகமக்கள் அனைவருக்கும் இன்றியமையாதது என்பதையும் விளக்கி எழுதிய நூலாம். ஆசிரியர் அச்சுதானந்தர் பாடிய பாமாலைகளை இவர் திரட்டி "தியானனுபூதி" என்னும் நூலாக அச்சியற்றினர். இவர் அந்நூலின் ஈற்றில் தம் ஆசிரியருடைய வரலாற்றை எண்பத்தைந்து பாடல்களாக அமைத்துச் சேர்த்திருக்கின்றனர். அப்போது இவருக்கு வயது இருபத்திரண்டு.

இவர் முதன் முதலாக இயற்றி வெளியிட்ட வேத பாகிய சமாச கண்டனம் என்னும் நூலில் இருக்கு, யசுர், சாமம் என்ற வேதங்கள் அதர்வசிகை சுவேதாசுவதரம் என்னும் உபநிடதங்கள், சைவத்திரு முறைகள், நாலா

யிரத் திவ்வியப் பிரபந்தம், சிவஞான போதம் முதலிய சமைய சாத்திரங்கள், திருக்குறள், பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாடல் முதலிய சிறந்த நூல்களிலிருந்து எடுத்துக் காட்டுக்கள் காட்டித் தம் கொள்கையை நிலை நாட்டுகின்றார்.

நாயகருக்கு வேதாந்தக் கொள்கையில் பல ஐயங்கள் தோன்றின. அப்போது சிவஞானபோதம் முதலிய சைவ சித்தாந்த நூல்களை அச்சிடும் பொருட்டு மதுரைநாயகம் பிள்ளை என்பார் சென்னைக்கு வந்திருந்தார். அவரிடம் இவர் சென்று பணிந்து தம் ஐயப்பாடுகளை நீக்கி உண்மையை விளக்கியருள வேண்டிக் கொண்டார். அவர் இவருக்குத் தக்கவாறு விடைகூறித் தாம் அச்சிட்டு முடித்திருந்த சிவஞான போதம் முதலிய சித்தாந்த நூல்களை ஆராய்ந்து தெளியுமாறு கட்டளையிட்டார். இவர் ஞானக்கண் திறந்தது. அவைகளை இவர் ஆராய்ந்து 'சைவ சித்தாந்தமே ஒப்பற்ற சமையம்' என்பதை உணர்ந்தார். அவ்வுண்மைகளைக் கேட்டறிந்த இவர் ஆசிரியர் அச்சுதானந்தரும் சித்தாந்தத்தை மேற்கொண்டு சிவ தீக்கை பெற்று ஆசிரிய ஒழுக்கம் அடைந்து, 'ஏகாம்பர சிவயோகியார்' என்ற தீக்கைப் பெயருடன் விளங்குவாராயினர். சோமசுந்தர நாயகரும் சிவாகம முறைப்படி சமையம், விசேடம், நிர்வாணம் என்னும் மூவகைத் தீக்கைகளையும் பெற்று உயர்ந்தார்.

நாயகர், சிவஞானத்தம்மையார் என்ற பெண் மணியாரைத் திருமணம் செய்து இல்லறம் நடத்தினர். அவர்களுக்கு மூன்று பெண்களும் ஒருமகனும் பிறந்தனர். இவர் சிலநாட்கள் ஒரு தோற்கிடங்கிற் கணக்கு வேலை பார்த்து வந்தார்; பின் சென்னை நகராட்சியில் எழுத்தாள

ராகச் சில ஆண்டுகள் வேலைபார்த்தார். அக்காலத்தில் வைணவர்களும், வேதாந்திகளும் சைவ சித்தாந்தத்தை இகழ்ந்து சில போலி உரைகளை வெளியிட்டு ஆரவாரம் செய்து வந்தார்கள். அதனைக் கண்டு கண்டு மனம் புழுங்கி வருந்திய நாயகருக்கு அவைகளைக் கண்டித்து நூல்கள் எழுதியும், தமிழ் நாடெங்கும் சென்று சைவ சமையப் பேருரைகள் ஆற்றியும் மெய்ம்மையை நிலை நாட்ட வேண்டுமென்ற பேரவா எழுந்து நாளுக்கு நாள் முறுகி வளர்ந்தது. அதனால் அவர் 1881-ல் தாம் முப்பத் தைந்து வயதினராக இருந்த பொழுது தம்முடைய எழுத் தாளர் பணியை விட்டு விலகித் தம் முழுநேரத்தையும் சமையத் தொண்டுக்கே ஆக்கினார். இவர் நாடெங்கும் சென்று சொற்பொழிவுகள் பல ஆற்றிச் சைவ சமையத் தைப் பரப்பி வருவாராயினார். இவர் எழுதிய நூல்களில் பெரும்பாலன கண்டன நூல்களாகவே இருந்தன. அதனால் வேதாந்த, வைணவ சமயத் தலைவர்கள் இவரைக் கண்டு அஞ்சுவாராயினர். வேதாகமங்கள் சைவ சித்தாந்த நூல்கள் ஆகியவற்றிலிருந்து தம் கொள்கைக்கு மேற் கோள்கள் காட்டுவதோடு வேதாந்த நூல்களிலிருந்து வேதாந்திகளையும் வைணவ சித்தாந்த நூல்களிலிருந்து வைணவப் புலவர்களையும் மேற்கோள் காட்டி இவர் தலை யெடுக்காது அடக்கி வந்தார் என்பர். திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் இவருக்குப் "பரசமைய கோளரி" என் னும் பட்டத்தைச் சூட்டினார். இராமநாதபுரம் சேதுபதி அரசர் இவருக்கு, "வைதிக சைவ சித்தாந்த சண்ட மாருதம்" என்ற பெரும் பட்டத்தை வழங்கினார். தனித் தமிழ்ப்பெரும் புலவராகிய மறைமலையடிகள் இவருக்கு மாணுக்கர். அவர் இவருடைய வரலாற்றைச் செப்பமாக எழுதியிருக்கின்றார். பரசமைய கோளரியாகிய நாயகர்

22—2—1901 வெள்ளியன்று சிவபெருமான் பொன்னடி மலர்களேயடைந்து இன்புற்ருர்.

சென்னேயில் அக்காலத்திலிருந்த வைணவர் சிலர் சிவபெருமானே இகழ்ந்து வந்தார்கள். அதனுல் மனம் வருந்திய பொன்னப்பபிள்ளே என்பார் "மூடமதி கண்டனம்" என்று அவர்களுக்கு மறுப்பாக ஒரு நூல் எழுதி வெளியிட்டனர். அதனேப் பார்த்த ஒரு வைணவர் "நன்மதி விளக்கம்" என்ற எதிர்மறுப்பு நூலே வெளியிட்டார். அதனேக் கண்டித்துச் சோமசுந்தர நாயகர் "சிவாதிக்க இரத்திஞவளி" என்ற விரிவான கண்டன் நூலே எழுதிஞர். அந்நூலில் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதும், சைவாசிரியர்களால் வைணவர்கள் தோல்வியுற்ருர்கள் என்பதும், வேள்விகளுக்குத் தலேவன் சிவபெருமானே என்பதும் ஆகிய பல பொருள்கள் தக்க ஏதுக்களால் இவரால் நிலேநாட்டப் பெற்றுள்ளன.

இவர் எழுதிய நூல்கள் 1. சிவாதிக்க ரத்திஞவளி முதற்பாகம் [1872], 2. அதன் இரண்டாம் பாகம் [1881], 3. ஆபாசஞான நிரோதம் [1880], 4. குதர்க்க வாத வியஞ் சினி [1880], 5. சமரசஞான தீபம் [1880], 6. சைவ சூளாமணி [1883], 7. அர்ச்சா தீபம் [1885], 8. ஞான பேதத்துணிவு [1887], 9. ஞான பேதத் தெளிவு [1887], 10. ஞான பேத விளக்கம் [1887], 11. ஞானபேத விளக்க ஞாய ரட்சாமணி [1887], 12. இராம தத்துவ தீபிகையினது ஆபாச விளக்கம் [1888], 13. ஞான சதுட்டையத் தர்ப் பணம் [1891], 14. பிரம்ம தத்துவ நிருபணம் [1891], 15. பிரம்மானுபூதி [1893], 16. சித்தாந்த சேகரம் [1892], 17. சித்தாந்த உந்தியார் [1892], 18. சிவபாரம்யப் பிரதர்சிநி [1893], 19. ஞான சம்பந்த பரத்துவ

நிரூபணம் [1898], 20. கீதார்த்த தீபிகாபாச நிரசனம் [1897], 21. ஆஞ்சனேய ராமவைபவபங்கம் [1900], 23. மெய்கண்டசிவ தூசண நிக்கிரகம் [1900] முதலியன பலப் பல. சன்மார்க்க போத வெண்பா, சிவகிரிப்பதிற்றுப் பத்தந்தாதி, சிவதத்துவ சிந்தாமணி முதலிய நூல்கள் இவர் பாடியன.

சோமசுந்தர நாயகரைப் பற்றிய வரலாற்றில் அவர் மாணவர் மறைமலையடிகள் பின் வருமாறு எழுதுகின்றார்:- "இவ்வாறு நாயகரவர்கள் பண்டைத் தனிச் செந்தமிழ் நூல்களைத் தமதிளமைப் பருவத்திலேயே பயின்று புலமைநிரம்புதற்கு இடம் வாயாமையால், தமிழுக்குந் தமிழ் நாட்டார்க்கும் நேர்ந்த இழப்புச் சிறிதன்று. நாயகரவர்களின் அரிய பெரிய ஆராய்ச்சியுரைகள் தனிச் செந்தமிழ் உரை நடையில் எழுதப்பட்டிருக்குமாயின், அவை தமிழுக்குப் பெரியதோர் அறிவுக் களஞ்சியமாய் இருந்திருக்கும்; ஆனால் அவை வடசொற் கலப்பு மிகுதியும் உடைய உரை நடையில் அமைந்ததே தமிழ் மொழிக்கு ஒரு பேர் இழப்பாயிற்று.

"யாம் சென்னைக்குப் போந்து 1898 ஆம் ஆண்டு மூன்றுந்திங்கள் ஒன்பதாம் நாளிற் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியராய் அமர்ந்த காலந் தொட்டு, நாயகரவர்கட்கு அணுக்கராய் ஒழுகி வருகையில், வடசொல் மிகக் கலந்த அவர்களது உரைநடையைப்போல் யாமும் எழுதுவது நல்லதாமா? என்பதை அவர்கள் பால் வினவ, அவர்கள் 'வடசொற் கலவா உனது உரை நடையே இனியதாயும் எவர்க்கும் எளிதிற் பொருள் விளங்கத் தக்கதாயும் இருத்தலால், உனது நடைப் படியே எழுது; எனது உரை நடையைப் பின்

பற்ருதே!' என்று ஆணை தந்தார்கள். அவர்களின் அக் கருத்தை யறிந்த பின் முன்னமே தொல்லாசிரியர்தந் தீந் தமிழ் உரை நடையிற் பழகி அதன் சுவை கண்ட எமதுளத்திற்கு, அவர்கள் இட்ட கட்டளை மிகவும் பொருத்த முடையதாகவே காணப்பட்டது. அதுமுதல் தீந்தமிழுரை நடை எழுதுவதில் எமது உள்ளம் உறைத்து நிற்கலாயிற்று. இது கொண்டு, நாயகரவர்கள் தாம் வடசொற் கலந்த உரைநடை எழுதுவதிற் பழகிவிட்டாலும், அந்நடையில் தமக்கு விருப்பமில்லாமல், வடசொற் கலவாச் செந்தமிழ் உரைநடையிலேயே விருப்பம் மீதூர்ந்தமை அறியப்படும். அவர்கள் தம்மைப் போலவே வடசொன் மிகக்கலந்த நடை யெழுதுதலை எமக்குச் சிறிது அழுத்திச் சொல்லியிருந்தால், யாமும் அங்ஙனமே எழுதித் தமிழுரை வனப்பைச் சிதைத்திருப்போம். ஆனால் அங்ஙனம் ஆகாமல் இறைவன் திருவருளே அவர்களிடை நின்று தடுத்துத் தமிழ் நலனை ஓம்பியது!'' இனி இவர் எழுதிய நூல்கள் சிலவற்றை ஆராய்வோம்.

நாயகர் எழுதிய நூல்கள் பெரும்பாலன பிறமதக் கண்டனங்களே. பிறர் சைவ சமையத்தை இகழ்ந்து கூறுவது கண்டு இவர் மனம் பொருமலே அவர்களைக் கடுமையாகக் கண்டித்தார். "சித்தாந்த ரத்நகரம்'' என்பது சித்தாந்தக் கருத்துக்களைக் கொண்டுள்ள அரதனக் கடல் என்று பொருள்படும். இது ஒரு பத்திரிகை. இத்தலைப்பிலேயே இவர் தம் கண்டன நூல்களை யெல்லாம் வெளியிட்டார்.

"ஆசாரியப் பிரபாவம்'' என்பது திருஞான சம்பந்தப் பரமாசாரியருடைய பெருமைகளை எடுத்து நிலைநாட்டுவது. "அர்ச்சா தீபம்'' என்பது உருவ வழிபாட்டு விளக்கம்.

இதில் இவர் "பிரமம் அருவம் மட்டும் என்பது தவறு. அது இன்ன தன்மையது என்று கூறுவது இயலாது. அதற்கு அருவமும் உருவமும் கூறுவன வேதங்கள். மனத்துக்கு எட்டாத அதை அடைவதற்கு உருவ வழிபாடே வழியாவது. பிரமாதி தேவரும் உருவ வழிபாட்டினுலே தான் செல்வமும் உயர்வும் அடைந்தனர்" என்ற உண்மைகளைப் பல சான்றுகளால் நிலைநாட்டுகின்றுர்.

ஆளுடைய பிள்ளையார் வெண்பா அந்தாதியில் பின் வரும் பாடல்கள் அருமையானவை:-

*"பந்தர் சிவிகை பரனுர் கொடுத்திடவன்*
*றந்தமுடன் பெற்ற அழகனே — சுந்தரஞ்சேர்*
*பால்வடியும் நின்முகநான் பார்த்திருக்கச் சம்பந்தா*
*கால்படிய வந்தருளிக் கா."*

*"இக்குமொழிப் பேதையர்பால் எய்தி அவரின்பம்*
*பக்குவமென் றுன்னிப் பகருவேன் — அக்கரவம்*
*சூடும் பிரானருளில் தோய்வனே சம்பந்தா*
*கூடவே எற்குனருள் கூர்."*

இவர் நூல்கள் யாவும் யாவரும் பார்த்தறிந்து நலம் பெறும் கருத்தாழம் மிக உடையன.

---

## 39. வ. த. சுப்பிரமணிய பிள்ளை

### [கி. பி. 1846 – 1909; திரு. 1877 – 1940]

11—12—1846-ல் சுப்பிரமணிய பிள்ளை செங்கற்பட்டில் தணிகாசலம் பிள்ளைக்கும் இலக்குமி அம்மையாருக்கும் மகனுராகப் பிறந்தார். இவர் வள்ளியம்மை என்ற மங்கையைத் திருமணம் செய்து கொண்டார். மாவட்ட

நீதிமன்ற எழுத்தாளராக இருந்த இவர் நீதிபதியாகவும் ஆகிக் கும்பகோணம், திருத்துறைப்பூண்டி, மதுரை, மானு மதுரை ஆகிய இடங்களிற் பணியாற்றினர்.

இவர் பிரமோத்தர காண்டத்தை உரைநடையாக எழுதி 1879-ல் வெளியிட்டார். திருத்துறைப்பூண்டித் தல புராணம், மானுமதுரைத் தலபுராணம், திருநீடூர்த் தலபுரா ணம் என்பவைகளை உரைநடையாக்கி வெளியிட்டதோடு அருணகிரிநாதர் திருப்புகழை மூன்று பகுதிகளாக அச் சியற்றினர். இவர் வெளியிட்ட நூல்களில் மிகவும் பயன் தருவது "சிவத்தல மஞ்சரி" என்ற நூலே. அதில் இவர் தாம் நேரில் சென்று பார்த்து வணங்கிய நூற்றெழுபது தலங்களைப் பற்றிய விவரங்களை எழுதி அச்சிட்டு வெளி யிட்டார். இந்நூலைப்பற்றி இவர் மகன் வ. சு. சண்முகம் பிள்ளை பின்வருமாறு கூறுகிறுர்:-

*"எங்கெங்கே எம்பெருமான் சிவபெருமான்*
*அமர்ந்துள்ளான் என்று நேடி*
*அங்கங்கே அன்புந்தச் சென்றடைந்தே*
*அவன் தாளை அண்மிப் போற்றி*
*இங்கெங்கோன் தலவிளக்கம் காண்பிரென*
*இவ்வுலகுக் கீந்த எந்தை*
*துங்கஞ்சேர் சுப்பிரமண் யப்பெயரோன்*
*புகழ்க் குறியாத் துலங்கும் இந்நூல்."*

## 40. ம. க. வேற் பிள்ளை

[கி. பி. 1846 – 1935; திரு. 1877 – 1966.]

இலங்கையைச் சேர்ந்த மட்டுவில் என்னும் ஊரில் கணபதிப் பிள்ளைக்குத் திருமகனாக 1846-ல் வேற் பிள்ளை பிறந்தார். இவர் சபாபதி நாவலருடன் ஆறுமுக நாவலரிடமும், பொன்னம்பலப் பிள்ளையிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு பயின்று பெரும் புலவரானார். சிதம்பரம் நாவலர் கல்லூரியில் ஆசிரியராகவும் கல்லூரித் தலைவராகவும் இவர் பணியாற்றினார். இவர் திருவாதவூரர் புராணம், புலியூர் அந்தாதி, அபிராமி அந்தாதி, கெவுளி நூல் முதலிய நூல்களுக்கு உரை எழுதினார். இவருடைய உரை வல்லமையைக் கண்டு, புலவர் பலர் பொன்னம்பலப் பிள்ளை தலைமையிற் கூடி இவருக்கு "உரையாசிரியர்" என்னும் பட்டத்தை வழங்கினார்கள். இவர் பேச்சுத் திறமை மிகப்படைத்தவர். வேதாரணிய புராணம், சிவகாமியம்மை சதகம் என்ற நூல்கள் இவரால் பிழையற ஆராய்ந்து அச்சிடப் பெற்றன. 'ஈழமண்டல சதகம்' என்ற அரிய நூலை இவர் பாடினார். இவர் மிக முதிர்ந்த பருவத்தினராக இருந்து 1935-ல் சிவபதவி அடைந்தார்.

---

## 41. திருமலை சக்கையாக் கவுடர்

[கி. பி. 1846 – 1917; திரு. 1877 – 1948.]

கோம்பையில் கன்னடக் கவுடர் வகுப்பில் திருமலை சக்கையாக் கவுடர் 1846-ல் பிறந்தார். இவர் தக்கவாறு கல்வி பயின்று சிறந்த புலவரானார். சித்திரக் கவிகள் பாடுவதில் மிக வல்லவரானதால் இவருக்குச் "சித்திரக்கவிப் புலவர்" என்னும் பட்டத்தைப் புலவர்கள் சூட்டினார்கள்.

சிலேடைகள் பாடுவதிலும் இவர் வல்லவர். இவர் எழுதிய நூல்களிற் சிறந்தன சிவபிரான் யமக அந்தாதி, மாலை மாற்று, அரிச்சந்திர வெண்பா முதலியன. இவர் எழுதிய "கர்வக்காணகுடாரி" என்ற உரைநடை நூல் ஒரு புனைந்துரைக் கதை, சித்தி விநாயகர், மாவூற்று வேலப்பர், காமாட்சி அம்மை, சபாநாதர், மல்லிங்க நாதர் ஆகிய தெய்வங்களின் மேல் பதிகங்களும், சிவ பசனைக் கீர்த்தனைகளும் பாடிய இப்புலவர் 1917-ல் இறைவனடியைச் சேர்ந்தார்.

---

## 42. ஏரம்பையர்

**[கி. பி. 1847–1914; திரு. 1878–1945.]**

இலங்கை மாகறல் என்ற ஊரில் சுப்பிரமணிய சாத்திரியாருக்கு மகனுக ஏரம்பையர் 1847 ல் பிறந்தார். கல்வி கற்றுத் தேர்ந்து புலமை பெற்ற இவர் சிவாகமப்படி மூன்று தீக்கைகளையும் பெற்றுச் சிவபூசையினை மேற்கொண்டார்.

வடமொழியிலும் வல்லவராகிய இவர் வடமொழி நீதி நூற்களைத் தமிழிலே பாடி நீதிசாரம் என்ற பெயருடன் வெளியிட்டார்; சேது புராணத்தை உரைநடையாக்கினுர், மேலும் மிருகாவதி விலாசம், கண்ணப்பர் நாடகம், மனுநீதி கண்ட சோழன் நாடகம் என்ற நாடக நூல்களுக்கு இவர் ஆசிரியர். சிவபெருமான், வைரவர், பிள்ளையார், கதிரேசர் ஆகிய தெய்வங்களுக்கு இவர் ஊஞ்சல் பாடினுர். சிறந்த பேச்சாளராகச் சைவத் தொண்டும் தமிழ்த் தாய்த் தொண்டும் ஆற்றியிருந்த இவர் 1914 ல் ஆண்டவன் திருவடியை அடைந்தார்.

---

## 43. சொக்கலிங்கச் செட்டியார்

[கி. பி. 1848–1922; திரு. 1879–1953]

நாட்டுக்கோட்டைச் செட்டிமார் நாட்டில் காரைக் குடியில் 1848 நள ஆண்டு ஆடிமாதம் இருபத்து மூன்றும் நாள் இராமநாதச் செட்டியாருக்கும், முத்துக்கருப்பு ஆச்சி யாருக்கும் புகழ் மகனுகச் சொக்கலிங்கச் செட்டியார் பிறந்தார். இவர் கல்வி கற்றுத் தமது பதினேழாம் ஆண்டில் யாழ்ப்பாணம் சென்று வட்டிக்கடைத் தொழில் புரிந்தார். அங்கே இவர் ஆறுமுக நாவலரையும் அவர் மருகர் பொன்னம்பலப் பிள்ளையையும் அடுத்து இலக்கண இலக்கியங்களைக் கற்றுச் சிறந்த புலவரானுர்; தம் முடைய ஆசிரியர் ஆறுமுகநாவலருடைய பெருமைகளைப் புகழ்ந்து "ஆறுமுக நாவல குருத்துதி" என்னும் நூலைப் பாடினுர்.

யாழ்ப்பாணத்தை விட்டுத் தமிழ்நாடு திரும்பிய சொக்கலிங்கச் செட்டியார் தேவகோட்டையிலிருந்த வன்றொண்டரிடம் சமைய நூல்களைப் பயின்றுர். வன் றொண்டச் செட்டியார் மாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையிடம் பாடங் கேட்ட பெருமை பெற்றவர். அவர் பால் பேரன்பு கொண்ட மாணவராகிய நம் சொக்கலிங்கச் செட்டியார் அவர்மீது "வன்றொண்டக் குருத்துதி" என்ற நூலைப் பாடினுர். செட்டியார் பதினுருவது வயதில் திருமணம் புரிந்து இல்லறம் தொடங்கினுர். அவ்வம்மை பன்னிரண்டாண்டு இவருடன் வாழ்ந்து மறைந்தனளாக, இவர் தம் இருபத்தொன்பதாவது வயதில் இரண்டாம் திருமணம் புரிந்து கொண்டார். அவ்வம்மையும் பதினைந்து ஆண்டுகளில் இறந்தனராக, செட்டியார் அதன்பின் மண வாழ்க்கையை வெறுத்துத் தனியராகவே வாழ்ந்தார்.

8.

இவர் திருநல்லூர்ப் பெருமணம் என்னும் ஆச்சா புரத்தில் குருபூசை மடமும், தேவாரப் பாடசாலையும் அமைத்து மாணவருக்குத் தாமே இலக்கண இலக்கியங் களைக் கற்பித்து வந்தார். பின் இவர் சிதம்பரத்தை அடைந்து 'மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை' என்ற கல்விச்சாலையை ஏற்படுத்தி அதில் மாணவருக்குத் தமிழ் நூல்களையும் போதித்து வந்தார். இவர் தம் காரைக் குடிக்கு வந்திருந்த போது 1922-ல் கூத்தப் பெருமான் திருவடி நீழலை அடைந்தார்.

இவர் இயற்றிய நூல்கள் நூற்றெட்டுக்கு மேற் பட்டன. திரு உசாத்தான புராணம், திருப்புத்தூர்ப் புரா ணம், பெருந்தோட்டத்து அத்தீச்சுவர புராணம் என்பன இவர் பாடியன. இவர் பாடிய மாலைகள் சோம சுந்தர மாலை, சௌந்தரேச தயாநிதி மாலை, குமரநாயகசிற்ச பேசர் விண்ணப்பமாலை, வடிவழகி நவமணிமாலை, சாக்கை இரட்டைமணி மாலை, வீரசேகரமாமணி மாலை என்பன. இவரியற்றிய அந்தாதிகள் கற்பக விநாயகர் பதிற்றுப் பத்தந்தாதி, திருவாரூர்த் திரிபந்தாதி, திருவாலவாய் யமகவந்தாதி என்பன. இவரியற்றிய வெண்பாக்கள் குன்றைச் சிலேடை வெண்பா, ஞானசம்பந்தர் போற்றிக் கலி வெண்பா என்பன. இவரியற்றிய பிள்ளைத் தமிழ் நூல்கள் சிவகாமி பிள்ளைத்தமிழ், திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழ், திருநாவுக்கரசர் பிள்ளைத் தமிழ், சுந்தர மூர்த்தி பிள்ளைத் தமிழ், மாணிக்க வாசகர் பிள்ளைத் தமிழ் என்பன. மயின்மலைச் சந்த விருத்தம், முத்தல நாயக மும்மணிக்கோவை முதலியனவும் இவர் பாடிய செய்யுள் நூல்கள். திரு உசாத்தான புராண வசனம், திருவாத வூரடிகள் புராண வசனம், மெய்கண்ட சிவசரித்திரம், சிவ ஞான போதார்த்த இலகுவசனம் முதலியன பல இவ

ருடைய உரைநடை நூல்கள். சைவ சமயாசிரியர்கள் நால்வர்மேலும் பிள்ளைத்தமிழ்கள் பாடிய இவர், தம்முடைய ஆசிரியருக்கு ஆசிரியர் மாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையையணுகி, "அறுபத்துமூவர் உண்மை நாயன்மார் வரலாறுகளைத் தெய்வத் திருவருளாற் பாடியருளிய சேக்கிழார் பெருமான்மேல் பிள்ளைத் தமிழ் பாடவேண்டும்" என்று பணிந்து வேண்டிக்கொண்டார். அதன்படி அப் புலவர் பெருமான் ஈடும் எடுப்பும் இல்லாத சேக்கிழார் பிள்ளைத் தமிழைப் பாடினுர். இனி இவருடைய நூல்கள் சிலவற்றை ஆராய்வோம்.

முதலில் இவர் எழுதிய புராணங்களைப் பார்ப்போம். தஞ்சாவூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி வட்டத்தி லுள்ள முத்துப்பேட்டைப் புகைவண்டி நிலையத்திற்கு அடுத்து வடபால் ஒரு மைல் தூரத்தில் உள்ளது திரு உசாத்தானம். அது கோயிலூர் என்றும் வழங்கப்பெறும். இத் திருநகருக்குத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர் எழுந்தருளி வந்து பெரியநாயகியம்மையோடு கோயில் கொண்டிருக்கின்ற மந்திரபுரீசுவரப் பெருமானை நோக்கித் தேவாரம் அருளிச் செய்திருக்கின்றுர். இந்தப் பதிக்குப் பழைய புராணம் ஒன்றிருந்தது. அதில் நூற்றறுபத்தொன்பது பாடல்களே இருந்தன. அவைகளை வைத்துக்கொண்டு இவர் ஒராயிரத்து ஐந்நூற்றிருபது திருவிருத்தங்களால் திருஉசாத்தானமாகிய சூதவனப் புராணம் என்று தலைப்பிட்டு ஓர் அருமையான புராணத்தைப் பாடி முடித்தார். இதில் திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு, சூதவனம் என்ற பெயர்க் காரணம், ஆதிசேடன், வருணன், மார்க்கண்டன் இவர்கள் வழிபட்டு வரம் பெற்ற வரலாறுகள் இவைகளை விரித் துரைக்கின்றுர். சூதவனம் என்பது மாவனம். இராமன்

சிவபெருமான் திருமுன்பு நின்று பாடுவதாக வருகிறது. இராமன் மந்திரோபதேசம் பெற்ற சருக்கத்திலுள்ள நூற்றுருவது பாட்டு:

*"அவனவள் அதுவொன்று அன்றென்று அருமறை*
*இசைப்ப உன்னே*
*அவனவள் இரண்டும் ஒன்றி அவிருமோர்*
*உருவாய் நிற்றி*
*அவன்எனப் போற்றுகோ மற்றுஅவளெனப்*
*போற்று கோமன்*
*சிவ சிவ யாதுஎன்று ஓர்தும் சேகரவனத்தாய்*
*போற்றி!"*

சிவஞான போதம் இந்த உலகத்தை "அவன் அவள் அது எனும் அவை" என மூன்று கூறுகளாக அமைந்திருப்பதாகக் கூறுகின்றது. அதனேயே இவர் இச்செய்யுளில் அவன் அவள் அது என்று தொடங்கி "அப்பனே! நீ அவன் அவள் என்ற இரண்டு கூறும் ஒன்ருகி அவிரும் ஓருருவாய் நிற்கின்ருய்; உன்னே அவனென்று ஆண் பாலாகக் கொண்டு போற்றுவேனே? அன்றி அவள் எனப் பெண்பாலாகக் கொண்டு போற்றுவேனே? தெருட்டியருளுதி" என்று கூறி "இங்ஙனம் நீ ஆண் பெண் ஆகிய இரு கூறும் ஒரு கூருக இருப்பதனை அறியாது உன்னே அழிவில்லாத காமுகன் என்று உரைக்கும் மூடர் சிலருக்கு என்ன மறுமொழி சொல்ல இருப்பது?" என்று புராண ஆசிரியர் பின்வருமாறு நூற்றெட்டாவது பாட்டாகப் பாடுகின்ருர்.

*"அருநரகு ஆழும் ஊழால் அளவில்கா முகன்என்று*
*அந்தோ*
*உருவு கண்டுஉரை நிர்மூடர்க்கு உரைப்பது என்*
*ஊடல் கூடல்*

*ஒருவடிவினில் எங்கெய்தும் உணர்த்தின் நீ*
*அன்றி யாவர்*
*தெருளுவர் சூத கானச் செல்வனே! போற்றி போற்றி.''*

இப்புராணத்திற்கு இவர் உரைநடையும் எழுதியிருக்கிறார்.

சோழபுரம் என்பது சிவகங்கை அரசரைச் சேர்ந்தது. அது முன்பு விசையபுரம் என்னும் பெயரினை உடையது. அங்கே விக்கிரம சோழன் ஆண்டிருந்த படியால் இது சோழபுரம் என்ற பெயரை அடைந்தது. இப்புராணமும் நாட்டுப்படலம், நகரப் படலங்களோடு கூடி விளங்குகின்றது. சோழபுரப் படலத்தில் இவர் பாடுகிறார்;

*''நமது பாண்டிநன் ஞட்டுடன் நம்மினக் கலப்பின்*
*அமைதி வாய்த்துடன் தழீஇக்கொடு நின்றிடும்*
*அடைவால்*
*உமையொர் பாகசுந் தரனையச் சோழர்வந்துவந்தெச்*
*சமையமுந் தடையறத்தொழும் தகையதந் நாடு.''*

இப்பாடலில் 'சோழர்கள் தம் பெண்களைப் பாண்டியருக்குத் திருமணம் முடித்துக் கொடுத்த வரலாறுகள் குறிக்கப் பெறுகின்றன. மங்கையர்க்கரசியார் நெடுமாற பாண்டியரை மணந்ததும் சோணுக்கன் என்னும் சோழன் தன் மகளை வரகுண பாண்டியருக்கு மணம் செய்து கொடுத்ததும் முதலிவைகளால் பாண்டி நாடும் சோழநாடும் நாயக நாயகி முறையில் தழுவி நிற்பது காண்க' என்று ஆசிரியர் இப்பாட்டின் கீழ்க் குறிப்பெழுதுகின்றார்.

திருப்புத்தூர் என்பது ஒரு சிறந்த பதி. அதில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும் எழுந்தருளி வந்து தேவாரத் திருப்பதிகங்கள் பாடியருளினர். இப்பதிக்குப் புராணம் ஒன்று பாடவேண்டு

வது இன்றியமையாதது என இப்புலவர் திருப்புத்தூர்ப் பெருமானைத் தொழுது அருள்பெற்று ஆயிரத்து முந் நூற்றிருபத்தைந்து திருவிருத்தங்களில் திருப்புத்தூர்ப் புராணத்தைப் பாடி முடித்தார். இவ்வூரில் பெருமான் சீதளிநாதர்; அவர் சிவகாமவல்லியோடு எழுந்தருளியிருக் கின்ருர். இவ்வூரில் வைரவக் கடவுளுக்குச் சிறப்பு மிகுதி; அவரை வழிபடுவோர் எல்லாச் செல்வங்களும் பெற்று நீடு வாழ்வாரென்று கவிஞர் பாடுகின்ருர். இனி இவர் உரைநடைகளை ஆராய்வோம். "வேதாந்தத் தெளிவு, சிவஞான போதார்த்த இலகு வசனம்" என்றது ஒரு சிறந்த நூல். இதில் இவர் வேதாந்தத்தை மூன்று கூறுகளாக வகுக்கின்ருர். அவை வைணவ வேதாந்தம், மாயாவாத வேதாந்தம், சைவ வேதாந்தம் என்பன. இவைகளை ஆராய்வார்க்கு முடிந்த நிலையாகிய சிவஞான போதத்தை இவர் எளிய உரைநடையாக்கி இந்நூலின் முடியாக அமைக்கின்ருர்.

திருத் தொண்டர் புராணசாரவிளக்கம் என்ருெரு நூல் இருநூற்று முப்பத்திரண்டு பக்கங்களில் விளங்கு கின்றது. அதன் முன் முப்பத்திரண்டு பக்கங்களில் மாணிக்கவாசகர் புராணமும் பின் பத்தொன்பது பக்கங் களில் சேக்கிழார் நாயனுர் புராணத்தோடு நம்பியாண்டார் நம்பிகள் வரலாறும் அமைந்துள்ளன. இவற்றுள் இவர் பல அரிய கருத்துக்களை வெளியிடுகின்ருர். இதன் முக வுரையில் இவர் கூறும் கருத்துக்கள் வருமாறு:—

"நமது நற்குருநாதரவர்கள் 'ஆறுமுக நாவலர்' சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் செய்தருளிய பெரிய புராண வசனம், உண்மை நாயன்மார் சரித்திரங்களை யாவரும் தெரிந்து உய்க என்னும் கருணையினுல் அவரவர் சரித்திர முறை மாத்திரமே செய்தார்கள். அக்கால நிலையின் அவ சரம் நோக்கி அதுவே போதியது என்பதே திருவுளக்

கருத்தாதலால் அம்மட்டில் அமைந்தார்கள். அந்நாயன் மார்களின் உள்ளீடான மகிமா விசேடங்களும் விளக்கத் திருவுளம் கொண்டால் அவ்வாறு செய்திருப்பார்கள். அவர்கள் செய்த பெரிய புராண சூசனம் முதலியன, பின்பு பரிசீலனம் செய்து முடிக்கக் கருதி முதலில் ஒருவாருகக் குறித்து வைத்துள்ளனவே. பின்னேயோர் அவ்வாறே அச் சிட்டனர். இது அவர்கள் சரித்திரத்தாலும் தெரிந்தது. அடியேன், நாவலர் பெருமான் பெரிய புராணத்தை வசன மாக்கிக் காட்டியருளியதையே கடைப்பிடித்துத் திருவடி சிரமேற் கொண்டு திருத்தொண்டர் புராண சாரத் திரு விருத்தங்களின் தாற்பரியங்களை வசனமாக விளக்கினேன். இதனில் நாயன்மார்கள் சரித்திரமட்டிலன்றி அங்கங்கே சிற்சில உள்ளீடான மகிமைகள், சேக்கிழார் பெருமான் குறிப்பாகவும், தெளிவாகவும் கூறியருளிய திருவாக்கு முதலிய பிரமாணங்கள் கொண்டே விளக்கினேன். அவை களை அடியேன் கருத்து என்று ஒதுக்காமல் சேக்கிழார் பெருமான் முதலிய சிவானுபூதிப் பெருஞ் செல்வர்கள் திருவுளக் கருத்தென்றே கொண்டு யாவரும் உபயோகிக் கும்படி பெரியார் திருவடிகளை மேலும் பணிந்து பிரார்த் திக்கின்றேன்.''

இதனுல் இவர் தம் ஆசிரியரிடம் கொண்டிருந்த பேரன்பு புலப்படுகின்றது. இனி இவர் திருஞான சம்பந் தர் முதலியோர்களைப் பற்றிக் கூறும் குறிப்புக்கள் ஆரா யற்பாலன; முருகப்பெருமானே திருஞான சம்பந்தராகப் பிறந்தார் என்று கூறுகின்ருர். "பிறவான் இறவான் பெம்மான் முருகன்'' ஆதலினுல் அவன் தாய் வயிற்றிற் கருவாயிருந்து பிறந்தது எங்ஙனம் என்று வினுவுவார்க்கு இவர் "முருகன் சீர்காழிக் கோவிலின் முன்புள்ள பிரம தீர்த்தக்கரையில் புத்திரராய்த் தோன்றி நின்ருர். அக்

குழந்தையை எடுத்துச் சிவபாத இருதயர் தம் மனைவியார் கையிற் கொடுத்தார். அவ்வம்மையார் வயிற்றில் கருப்பக் குறி உள்ளது போலவே விளங்கியது. உண்மையில் கருப்பத்தில் குழந்தை இருக்கவில்லை. இவ்வுண்மை 'காதலி யார் மணிவயிற்றில் உருத்தெரியவரும் பெரும்பேறு உல குய்ய உள்ளதாக' என்று பெரிய புராணம் கூறுவதால் விளங்குகின்றது'' என்று இவர் தம் கூற்றுக்கு விளக்கம் கூறுகின்ருர். இதனை விளக்க மேலும் சில ஏதுக்களைத் தொடர்ந்து கூறுகின்ருர். இது ஊகமாகவே உள்ளது; உண்மையன்று என்பது மெய் ஆராய்ச்சி அறிஞர் கூறு வது. எங்ஙனம் எனில் கூறுதும்.

திருஞான சம்பந்தர் கருவிற் புகுந்தார். பத்து மாதங்களும் வளர்ந்தார். அவ்வம் மாதத்திற்குரிய சடங்கு கள் செய்யப்பட்டன. அழுதார், திருமுலைப்பால் உண்டார்; ஒரு பெண்மணியை மணந்தார்; மணந்த அப்பொழுதே அவ்வம்மையுடன் சோதியுட் கலந்தார். வாகீசர் என்ற முனிவர் கைலாய மலையின்கீழ்க் கசங்கிக் கலங்கிக் கண்ணீர் விட்டுக் கதறி அலறிய இராவணேசுவரனுக்குத் தப்பிப் பிழைக்க வழி சொல்லிய பேருதவிக்குப் பரிசாகக் கைலை நாதர் மண்ணிற் பிறக்குமாறு கொடுமொழி கூறினர் என்ற பொருத்தமில்லாத கதையை இவரும்கூறுகிருர். வாக்கு + ஈசர் = வாகீசர்; நாவுக்கு அரசர். சுந்தரரோ தடுத்துதாட் கொள்ளப்பட்டுப் பரவையார், சங்கிலியார் என்ற இரண்டு பெண்களை மணந்து சங்கிலியாருக்குச் சொல்லிய வாக்குத் தவறி யமையால் கண்ணிழந்து பின் ஆண்டவனைப் பாடிக் கண் பெற்றுத் தொண்டர்நாதரைப் பரவையாரிடம் தூதனுப்பிப் பின் கைலைநாதர் அனுப்பிய வெள்ளானை மேற்கொண்டு கைலையைச் சேர்ந்தனர். இவரை ஆலால சுந்தரர் என்

றும், இவர் கைலேயில் சிவஞர்க்குத் தொண்டு செய்து வந்தவரென்றும், தம்மைக் கண்டு காதல் கொண்ட கமலினி அனிந்திதை என்ற தோழியரைக் கண்டு சாதாரணரைப் போலத் தாமும் காமுற்று நின்ற நிலே கண்டு ஆண்டவனருளால் மண்ணிற் பிறந்து தடுத்தாட் கொள்ளப் பெற்றுப் பின் அப்பெண்களே மணந்து காம இன்பம் நுகர்ந்திருந்தவர். கைலாசமலேயில் தலேவாசற் காவலராகிய திரு நந்தி தேவரே மாணிக்க வாசகராக மண்ணில் வந்து பிறந்தார் என்று இவர் கூறுகின்ருர். மண்ணிற் பிறந்து மந்திரியாகிக் குதிரைகள் வாங்கு வதற்குக் கொண்டுசென்ற பணத்தால் திருக்கோவில் கட்டிப் பாண்டியனுல் ஒறுக்கப்பட்டுப் பின் ஆண்டவனரு ளால் தில்லே மூதூர் அடைந்து தில்லேத் திருமன்றுள்ளே கலந்தார். இவர்கள் மனிதர்களாக வாழ்ந்து ஆண்ட வனே அடைந்து முத்தி இன்பம் பெறுவதற்கு அவனே அழுதழுது பாடித் தொண்டு செய்வதே வழி என எடுத் துக்காட்டி ஆண்டவனே அடைந்த பெரியார் என்று கொள்ளுதலே இவர்களுக்கு மிகப் பெருஞ் சிறப்பைத் தருவது என்று அறிஞர் பலர் கூறுகின்றனர்.

இவர் சமையாசிரியர் நால்வர் மேலும் பிள்ளேத் தமிழ் பாடியிருக்கிருர். அவையெல்லாம் மற்ற ஆண்பாற் பிள்ளேத் தமிழ்களேப் போலவே காப்புப்பருவம், செங்கீரைப் பருவம், தாலப்பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம், சிற்றிற் பருவம், சிறு பறைப் பருவம், சிறுதேர்ப் பருவம் ஆகிய பத்துப் பருவங்களே உடையன. பிறந்த பிள்ளேயைக் காத் தருளும்படி தெய்வங்களே வேண்டிக் கொள்வது காப்புப் பருவம். இதில் காப்புக் கடவுளாகிய திருமால் துதி முதலில் வரும். மாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளே

இவ்வரம்பைந் தகர்த்த பெருஞ்சிறப்பு அவர் வரலாற்றிற் கண்டோம். அவரைப் போலவே இவரும் அவ்வரம்பைச் சிதைத்து, திருமாலுக்கும் முழுமுதற் கடவுளென்று தாம் முடிவுகட்டிய சிவ பெருமானையே அழைத்துக் குழந்தையைக் காத்தருள்க என்று காப்புப் பருவம் தொடங்குகின்றார். பின்னர் உமையம்மை, பிள்ளையார், முருகப்பிரான், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், ஆலால சுந்தரர், மாணிக்கவாசகர், காரைக்கால் அம்மையார், திலகவதியார், கண்ணப்பர், சண்டேசர் ஆகிய அடியார்களை ஏற்றவாறு அழைத்துத் தாம் குழந்தையாகப் பாவித்துப் பிள்ளைத்தமிழ் பாடும் சமையாசிரியர்களைக் காக்க வருக என்றழைத்துக் காப்புக் கூறுகின்றார்.

செங்கீரை என்பது தவழும் குழந்தை ஒரு கால் மடக்கி ஒரு கால் நிமிர்த்து இரண்டு கைகளையும் முன்னால் ஊன்றிக் கொண்டு தலையையசைத்து ஆடுவது. இதுவே ‘செங்கீரை ஆடி அருளே’ என்று குழந்தையை வேண்டிக் கொள்ளும் பருவம். தாய் குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுவாள். அங்ஙனம் தாலாட்டுவது தாலப் பருவம். பின் குழந்தை உட்காரும் நிலையையடையும். அப்பிள்ளையை நோக்கிச் ‘சப்பாணி கொட்டு’, ‘சப்பாணி கொட்டு’ என்று பெற்றோர் வேண்டிக் கொள்ள அது சப்பாணி கொட்டுவது கண்டு உள்ளம் பூரிப்பர். இங்ஙனம் சப்பாணி கொட்டுமாறு வேண்டுவது சப்பாணிப் பருவம். பின் பிள்ளை நிற்கும். அது நடக்கும்படி தூண்டுவதற்காக ‘முத்தம் கொடு, முத்தம் கொடு’ என்று வேண்டிக் கொள்வர். இங்ஙனம் பாடுவது முத்தப் பருவம். பின் பிள்ளை நடப்பான். தாய் அவன் முன்னாலே சென்று ‘வருக, வருக’ என்று நடை பழக்குவாள். அங்ஙனம் வருக வருக என்று பாடுவது

வருகைப் பருவம். மாலை நேரம் தாய் விளையாடுவாள். அப்போது விண்ணில் தோன்றும் அம்புலியைப் பார்த்து 'அம்புலி! என் கண்மணியோடு விளையாட வா, வா'வென்று அழைப்பாள். [அம்புலி = சந்திரன்] இங்ஙனம் பாடுவது அம்புலிப் பருவம். குழந்தை வளர்ந்து விட்டான். ஆடி ஓடுகிறான். அங்கே சிறு பெண்குழந்தைகள் சிறுவீடு கட்டி விளையாடுகின்றார்கள். [சிறுவீடு = சிற்றில்] பிள்ளை ஓடி அவர்கள் மணலாற் கட்டிய சிறு வீட்டைக் காலால் சிதைக்கின்றான். அக்குறும்புச் செயலைக் கண்டு அவர்கள் 'மலரடியால் சிறியேன் சிற்றில் சிதையேல்' என்று அவனை வேண்டிக் கொள்வது போலப் பாடுவது சிற்றிற் பருவம். பிள்ளை மேலும் வளர்ந்து தன் தோழர்களோடு விளையாடுகிறான். வெவ்வேறு வீடுகளிலிருக்கும் தன் தோழர்களைத் தன்னோடு விளையாடுவதற்காகச் சிறு பறையைக் கொட்டி அழைக்கின்றான். தோழர்களை விளையாட அழைப்பதற்காகச் 'சிறுபறை முழக்கியருள்' என்று பாடுவது சிறுபறைப் பருவம். தோழர்கள் வருகிறார்கள். பிள்ளை அவர்களோடு சிறு தேர் உருட்டி விளையாடுகின்றான். [சிறுதேர் = சிறுவண்டி] 'சிறுதேர் உருட்டியருள்' என்று பாடுவது சிறுதேர்ப் பருவம். ஒவ்வொரு பருவத்திலும் பப் பத்துப் பாடல்களிருக்கும். இம்முறை தெய்வங்களைப் பற்றிப் பாடுகின்ற பிள்ளைத் தமிழில்தான். மன்னர், வள்ளல்களைப் பற்றிப் பிள்ளைத் தமிழ் பாடும்போது ஒவ்வொரு பருவத்திலும் பத்துப் பாடல்களுக்குக் குறைந்தே இருத்தல் வேண்டும். சைவ சமயாசிரியர்களைத் தெய்வமாகவே கருதும் இவர் ஒவ்வொரு பருவத்திலும் பப்பத்துப் பாடல்கள் பாடியிருக்கிறார்.

கற்பக விநாயகர்மேல் இவர் பதிற்றுப் பத்தந்தாதி பாடியிருக்கின்றார். பத்துப் பத்து பதிற்றுப் பத்து; அதா

வது நூறு. ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு விதமான விருத்த மாக அமைந்திருக்கும். கற்பகம் கேட்பதை யெல்லாம் கொடுப்பது போல அடியார்கள் கேட்கும் வரமெல்லாம் கொடுத்தருளும் பிள்ளையார் கற்பகப் பிள்ளையார். இவ்வந் தாதியில் அறுபத்திரண்டாவது பாட்டுப் பின்வருவது:-

*"தனையன் வேண்டினும் சம்பத்து வேண்டினும்*
*மனையை வேண்டினும் வான்பயன் வேண்டினும்*
*கனைவ ளங்கொள் கணேசபு ரேசனை*
*இனிய கற்பக மூர்த்தியை யேத்துமே."*

'முத்தல நாயக மும்மணிக் கோவை' என்பது இவர் பாடியது. கோவை என்பது மாலை. மும்மணிக் கோவை மூன்று மணிகள் கோத்த மாலை. முத்தலங்கள் மூன்று ஊர்கள். அவை கடம்பந்துறை, இரத்தினகிரி, ஈங்கோய் என்பன. இந்த மூன்று ஊர்களிலும் எழுந்தருளியிருக் கின்ற சிவபெருமான் முத்தல நாயகர். இந்தக் கோவை யில் முப்பது பாடல்கள் உள. முதற் பாட்டு ஆசிரியப்பா, இரண்டாவது வெண்பா, மூன்றாவது கட்டளைக் கலித் துறை. இந்த வரிசையில் ஒவ்வொரு தல நாயகரையும் பத்து இடங்களில் மாறி மாறிப் பாடிய முப்பது பாடல் கள் உள்ளன. அவற்றுளொரு வெண்பா பின்வருவது:-

"பெருவாழ் விதுவென்றே பேணுகவாட் போக்கிப்
பெருமான் உலகருளும் பெம்மான் — தருவான்
அழிதலிலாப் பேரின் பவனடியார் பாதப்
புழுதி சிரமேற் புனைந்து."

'வாட்போக்கி என்பது இரத்தினகிரி. அவனடியார் திரு வடியை வணங்கிப் பேணுக. பெருமான் அழிதலிலாப் பேரின்பு தருவான்' என்பது இதன் பொருள்.

இவர் பாடிய மற்றொரு சிறந்த நூல் ஞானசம்பந்த லீலா சங்கிரகச் சிலேடை வெண்பா. ஒன்றிலிருந்தே வேறு சில பொருள்களை எடுப்பது சிலேடையாம். இந்நூல் நூறு பாடல்களையுடையது. அதிலொன்று காட்டிச் சிலேடையை விளக்குவோம்.

*"பொச்சம்இல்போர் வீரர்களும் பொற்கொடியார்*
*கற்குயமும்*
*கச்சை யிறுக்கும்சீர் காழியே — கச்சியின்மாற்கு*
*ஆரப்புரிந்தார் அரனுருவும் ஈந்து அவ்வுலகம்*
*சாரப் புரிந்தார் தலம்."*

இப்பாடலில் திருஞானசம்பந்தப் பெருமான் காஞ்சிபுரத்தில் திருமாலுக்கு அருள் செய்த வரலாறு கூறப் பெறுகிறது. [கச்சி = காஞ்சிபுரம்; மாற்கு = திருமாலுக்கு; ஆரப் புரிந்தார் = நிறைய விரும்பினவராய்.] "ஆலகால விடத்தால் திருமால் உருவம் கருகி விட்டது. திருமகள் அதனைக் கண்டு அருவருப்புற்றனள். அதனால் திருமால் காஞ்சியில் தவம் புரிந்து பவள நிறம் பெற்றதோடு ஆண்டவன் ஆணைப்படி ஞான சம்பந்தரை நோக்கித் தவம் புரிந்திருந்தார். அங்கே சம்பந்தர் வந்தபோது அவர் திருமாலுக்கு அரன் உருவைக் கொடுத்ததோடு சிவலோகத்தைச் சாரும் படியும் அருள் புரிந்தார். அவருடைய தலம் சீகாழியே" என்று கூறுகிறது இப்பாட்டு. இதில் கச்சையிறுக்கும் என்பது சிலேடை. பொச்சம்இல் போர்வீரர்கள் கச்சை யிறுக்கும் சீகாழி—அச்சமில்லாத போர்வீரர்கள் கச்சையை இறுக்கிக் கட்டுவார்கள். பொற்கொடி போன்ற பெண்களுடைய மலையைப் போன்ற முலை அவர்கள் இரவுக் கையைக் கிழிக்கும். இங்ஙனம் கச்சையிறுக்கும் என்பது

சிலேடையாவது காண்க. கல் = மலை; குயம் = முலை. சோம சுந்தர மாலை முதலிய இவருடைய ஏனைய நூல்கள் சொல் லின்பமும் பொருள் ஆழமும் உடையன என்பதை அவை களை ஆராய்வார் தெளிவாக அறிந்து கொள்வார்கள்.

---

## 44. காசிவாசி செந்திநாதையர்

[கி. பி. 1848—1924; திரு. 1879—1955.]

யாழ்ப்பாணம் சுன்னாகத்தைச் சேர்ந்தது ஏழாலை என்னும் சிற்றூர். அதில் இவர் சின்னைய ஐயர் என்பவருக் குத் திருமகனாகப் பிறந்தார். இவர் தமிழும் வடமொழி யும் கற்று இரண்டிலும் பெரும் புலமை பெற்றார். ஈழத் திலும், இந்தியாவிலும் இவர் அரும் பெருஞ் சொற் பொழிவுகள் பல ஆற்றினார். கிருத்துவப் பாதிரிமார்கள் தம் சமையத்தைப் பரப்பியதைத் தடுத்து இவர் பல பேருரைகள் புரிந்ததோடு பல கண்டன நூல்களும் எழுதினார். 'அமிர்த போதினி என்ற வார வெளியீடு' இவரால் தொடங்கப்பெற்றுச் சில ஆண்டுகள் நடைபெற் றது. காசியிற் சென்று பத்தாண்டுகளுக்குமேல் இவர் விசுவநாதரையும், விசாலாட்சி அம்மையையும் வணங்கிக் கொண்டு தங்கியிருந்தார். அதனால் இவருக்குக் "காசி வாசி" என்ற பெயர் வழங்குவதாயிற்று.

சிதம்பரம் இராமலிங்க அடிகள் பாடிய அருட்பா மருட்பா என்றும், சைவ சமையாசிரியர் பாடிய தேவார திருவாசகங்களே அருட்பா எனவும், ஆறுமுக நாவலரு டைய வழியிலே அவர் மாணவர் கதிர்வேற் பிள்ளை சொற்

போரிட்டு வந்தார். அவருக்குப் பக்கத்துணையாக இருந்தார் செந்திநாதையர். இவர் மேலும் நீதிமன்றம் ஏறியும் சான்று பகர்ந்தார்.

1906-ல் திருப்பரங்குன்றத்தில் இவர் ஓர் அச்சுக்கூடத்தைத் தம் பெயரால் அமைத்துத் தாம் எழுதிய நூல்களை அதில் அச்சியற்றி வெளியிட்டு வந்தார். எழுபத்தாறு ஆண்டுகள் நிரம்பிய இவர் 15—5—1924-ல் சிவ பெருமான் திருவடி நிழலை அடைந்தார். இவர் எழுதிய நூல்களை ஆராய்வோம்.

இவர் தமிழுக்குச் செய்த பெருந்தொண்டு வேதாந்த சூத்திரங்களுக்கு நீலகண்ட சிவாசாரியார் வட மொழியில் எழுதியிருக்கிற பாடியத்திற்குத் தமிழில் சிறந்த மொழி பெயர்ப்பு எழுதியதே. அதனை அச்சிடும் பொருட்டே இவர் அச்சகம் ஒன்றை நிறுவினர் என்று அறிந்தார் கூறுவார்கள். இவர் எழுதிய வேறு நூல்கள் 'கந்த புராண நவநீதம்', 'சிவஞானபோத வசனாலங்கார தீபம்,' 'ஞான இரத்தினாவளி', 'சீகாழிப் பெரு வாழ்வின் சீவகாருணியமாட்சி', 'தேவாரம் வேதசாரம்,' 'தத்துவ விளக்கம் மூலமும் உரையும்', 'சைவ வேதாந்தம்', 'வைதிக சுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப்பட வினாவிடை', 'சாண் சத்திரியப் பிரசண்ட மாருதம்', 'ஞான போத விளக்கச் சூறாவளி', 'வீரபத்திராத்திரம்', 'தாந்திகத் துண்ட கண்டன கண்டனம்', 'வச்சிர தண்டம்' முதலியன; கிருத்துவர் நூல்களுக்குக் கண்டனமாகச் 'சிவனும் தேவனும்' என்னும் தீய நாவுக்கு ஆப்பு,' 'விவிலியக் குர்ச்சித கண்டனதிக்காரம்' என்பன. இவர் எழுதிய கண்டன நூல்களில் மிகவும் வன்மையானது "மகாஉக்கிர வீரபத்திராத்திரம்" என்பது. இந்த மகுடப்பேர் இட்டமைக்கு ஆசிரியர் நூலின் தலைப்

பில் பின்வருமாறு காரணம் கூறுகிருர். அது வருமாறு:-
"பூமண்டலத்தின்கண்ணே நீடிய காலத்திற்கு முன்னர் கங்காதீரத்துக் கனகலத்தில் ஆயிரம் யோசனே அகலம் நீளமுள்ளதோர் தானத்தை யாகசாலேயின் பொருட்டு வகுத்து, அதிற்குழுமிய எண்ணிறந்த தேவர், முனிவர், அந்தணர் சபையின்கண்ணே, தேவர்கள் யாவருக்கும் கொடுக்கும் அவிர்ப் பாகங்களே ஏற்றுக் கொள்பவரும், அக்கினிக்குத் தலேவரும், யாகாதிபரும், யாகரட்சகரும், சிவபெருமானே' என்று சிவபெருமானுக்குப் பரத்துவம் சாதிக்கும் சுருதிகளேச் சகலருட்பட்ட விட்டுணுவின் மேல் ஏற்றத்துணிந்தும், அப்பெருமானுக்குரிய அவிர்ப்பாகத்தை அவற்குக் கொடாது அவ்விட்டுணுவுக்கே கொடுக்கத் துணிந்தும், சிவபெருமானேப் பல பிரகாரமாகத் தூசித்தும் தலேதடுமாறி நின்ற தக்கன் தலேயை வாளிஞல் வெட்டி ஒழித்துவிட்டு அவன் தலேக்குப் பதிலாக இறுதியில் ஆட்டுத் தலேயை மாட்டியும், அத் தக்கன் செய்த சிவ தூசணங்களேக் கேட்டுக்கொண்டிருந்த தேவருள்ளே வன மாலியைத் தண்டிஞல் புடைத்தும், பிரமதேவனேக் குட்டி யும், சந்திரன் உடலேத் தேய்த்தும், சூரியன் பல்லே உடைத்தும், பகன் கண்ணேப் பறித்தும், குயிலுருக் கொண்டு பறந்த இந்திரனே வெட்டிவீழ்த்தியும், அக்கினி யின் கையையும் நாக்கையும் அறுத்தும், சரசுவதி, சாவித்திரி, காயத்திரி எனப்படுவாரது குயத்தையும் மூக் கையும் கொய்தும், இயமன், எச்சன், குபேரன், வாயு, நிருதி, வருணன் ஆகியவரை வெட்டியும், புடைத்தும், எற்றியும் இங்ஙனம் யாக சாலேயின்கண் அமர்ந்த அளவிறந்த தேவர்கள் முதலாயிஞேரைச் சங்கரித்து அந்தத் தக்கனது கீர்த்தியையும், செல்வத்தையும், வலியையும், மனச்செருக் கையும் போக்கி மகாபராக்கிரமம் படைத்து மகா உக்கிர

சொரூபம் கொண்டு சிவபிரானுர் நெற்றியின் கண்ணே நொடிப்பொழுதிலே ஆயிரம் தலைகளோடும் இரண்டாயிரம் கைகளோடும் உதித்த மகாஉக்கிர வீரபத்திரக் கடவுளை நிகர்த்துச் சிவபெருமானுக்குப் பரத்துவம் சாதிக்கும் ஈசாவாசியம் முதலிய பரோபநிடத சுருதிப் பொருள்களையும், அச்சுருதிகளை ஆதாரமாகக் கொண்டு கிளர்ந்த உத்தர மீமாஞ்சை எனப்படும் வேதாந்த சூத்திரப்பொருளையும் அலைத்துத் திரித்து, மேலே சுவர்க்க லோகத்தினும், கீழே பாதாளலோகத்தினும், நடுவிலே பூவுலகத்தின்கண்ணும் காற்றுடியும் கொள்ளிவட்டமும் போல மேலும் கீழும் சுழன்று ஓயாது சனனசாகர சமுத்திரத்தின் கண்ணே கிடந்து உழன்று வருந்தாநின்ற பசுவாகிய ஆன்மாவுக்கு ஏற்றி, அன்னம் பிரமம், பிராணன் பிரமம், ஆதித்தியன் பிரமம், நாராயணன் பிரமம் என்றாற்போல மாயாவாதச் சுருதிகளினும், புராணங்களினும் ஆன்மாவுக்குப் பிரமம் பரப்பிரமம் என்று உபசாரமாகக் கூறப்படும் பெயர்களை மெய்ம்மைப் பெயர்களாம் என்று திரித்துணர்ந்து, அதற்கு ஒருபோதும் ஓரிடத்தும் அடுக்காத அந்தப் பிரமம் பரப்பிரமம் என்னும் மகுடத்தையும் சூட்டிப் பரத்துவம் சாதித்த **ஏகான்ம வாதியாருக்கும்**, வேதாந்த சூத்திரத்திற்கு உபநிடத இதிகாச புராணப் பிரமாணங் கொண்டு திரிவுப் பொருள் படுத்தாது சத்தியார்த்தம் செய்து சிவ பரத்துவம் செய்த **நீலகண்ட சிவாசாரியாருக்கும்** கோகர்ணத்திலே வாதப்போர் நிகழ்ந்ததென்றும், அந்தப்போரிலே அச்சிவாசாரியார் தோற்றுப்போய்த் தமது சைவபாடியத்தை எறிந்து விட்டு, அச்சங்கராச்சாரியாருக்கு முன் கருடனைக் கண்ட சர்ப்பம் போலப் பயந்து ஒடுங்கி அவருக்குச் சீடனாயினர் என்று சிவாசாரிய தூசணம் செய்த யதி ஒருவரது போலி நியாயங்களை "வச்ர

9.

தண்டங்" கொண்டு தகர்த்தவருக்கு "வாய்ப்பூட்டு" என்று பெயர் வரைந்து சிவபக்த தூசணம் செய்தவரது குயுத்தி வாக்கியங்களை உடைத்துத் தூளியாக்கி ஆகாயத்தில் ஊதித் தூற்றிவிடுமாறு இந்தப் பத்திராத்திரம் உதித்ததாம் ஆதலின், இதற்கு "மகாஉக்கிர வீரபத்திராத்திரம்" என்னும் மகுடம் சூட்டப்பட்டதாம் என்க." மேலே காட்டிய உரைநடை செந்திஞரையர் உரைநடைக்கு ஓர் எடுத்துக்காட்டு. இதில் வட சொற்கள் மிகுதியாக விரவி வந்திருக்கின்றமை காண்க. எனினும் இது தவறு கண்ட இடத்து மனம் கொதித்துக் கடுமையான நடையில் கண்டனம் எழுதும் பேராசிரியர் இவர் என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

## 45. ஐ. சாமிநாத முதலியார்.

**[கி. பி. 1849 — 1918; திரு. 1880 — 1949.]**

தஞ்சை மாவட்டம் நன்னிலத்தை ஒட்டிய காவாலக்குடி என்ற ஊரில் சைவ வேளாள மரபில் ஐயாறப்ப முதலியாருக்குச் சாமிநாத முதலியார் 1849-ல் திருமகனுகப் பிறந்தார். இவர் மாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையின் மாணவர் தியாகராசச் செட்டியாரிடம் கல்வி பயின்று பெரும் புலமை பெற்ருர். இவர் சாவித்திரி வரலாற்றை வெண்பாக்களாகப் பாடியிருக்கின்ருர். மத்திர தேச மன்னன் அசுவபதி என்பவனுக்குச் சாவித்திரிதேவியினுடைய அருளால் ஒரு மகள் பிறந்தாள். அவள் பிறந்து வளர்கின்ற பருவங்களை இவர் அழகாக விவரிக்கின்ருர். வருகைப்பருவம் கூறும் வெண்பா இது:

*"கிஞ்சுகவாய் அஞ்சுகமே! கேடில் மடவனமே!
செஞ்சொல்தீம் பாகளிக்கும் தீங்கரும்பே! — மஞ்சும்
கருக விரும்பவளர் காமருபூங் கூந்தால்!
வருகஎன வந்துமகிழ் வாள்."*

ஆண்களின்மேற் பாடும் பிள்ளைத் தமிழைப் பற்றி முன்னே கூறினேம். அவற்றுள் சிறுவீடு சிதைப்பதும், சிறுபறை கொட்டுவதும், சிறுதேர் உருட்டுவதும் ஆண்களுக்கே சிறப்பாக அமைவன. அவைகளுக்குப் பதில் அம்மானை ஆடுகின்ற பருவம், நீராடுகின்ற பருவம், ஊசலாடுகின்ற பருவம் என்பன மூன்றும் பெண்களுக்கே அமையும். பத்துப் பருவங்களையும் பத்துப் பாடல்களில் பாடினர் புலவர். சாவித்திரி பூங்கா ஒன்றில் விளையாடி நின்ருள்; அங்கே வந்த சத்தியவானைக் கண்டு காதல் கொண்டாள். அவள் மாலை நேரத்திலே தன் காதலனைச் சேர விரும்பி மன்மதன் கணைக்கு அஞ்சித் தவிக்கிருள்.

*"ஊதப் பறக்கும் உமிபோலும் சூதம்எமைக்
காதப் பயின்ற தென்ன கண்காட்சி – சீதைகொண்கன்
கைப்புல்லும் பண்டையொரு காகா சுரனைவெல்லும்
மெய்ப்பலமும் நற்சார்பின் மேற்று."*

இது சாவித்திரியின் கூற்று. சூதம் என்பது பவளமல்லிகை. அது மன்மதனுடைய அம்பு; ஆதலினால், அதனைக்கண்டு சாவித்திரி கலங்குகிருள். "சீதை கொண்கனுன இராமன் கையிலிருந்த புல்லும் அன்ருெரு காகாசுரனை வென்றது; ஆதலின் மெய்யான வலுவாவது சார்பைப் பொறுத்தே உள்ளது" என்று' அவள் கூறுகின்ருள். சத்தியவானைச் சாவித்திரி மணக்கிருள். சத்தியவானுடைய தந்தை முன் அரசனுக இருந்து நாடிழந்து கண்ணிழந்து காட்டில் வாழ்ந்து கொண்டிருந்தவன்; அவனுடைய மக

னுக்குத் தன்னுடைய மகளைக் கொடுக்க மனமில்லாமற் போனுலும் சாவித்திரி தந்தை தன் மெய்ந்நிறைந்த மகளைக் கைந்நிறைந்த பொன்னைவிட அவள் விரும்பும் கண்ணிறைந்த காதலனுகிய சத்தியவானுக்கே மணம் செய்து கொடுத்தான். தன் கணவன் ஓராண்டில் இறப்பான் என்பதைத் தெரிந்த சாவித்திரி மங்கிலிய நோன்பு நோற்ருள். குறித்த நாளில் காலன் அவள் கணவன் உயிரைக் கைப்பற்றிச் சென்ருன். இவள் காலனை விருப்போடு புகழ்ந்து பேசி அவனிடம் தன் மாமனுக்குக் கண்ணும் மண்ணும் வரவேண்டுமென்றும், தன் தந்தைக்கு நூறு பிள்ளைகள் வேண்டுமென்றும், தனக்கும் நூறு பிள்ளைகள் வேண்டுமென்றும் வரம் கேட்டாள். அவள் கேட்ட வரங்களையெல்லாம் கொடுத்து,

*"சொன்ன உரையிலொன்றும் சோராம லேபலிக்கும்*
*நன்னய மென்மொழியாய்! நன்கினிஉன்–தொன்னகரம்*
*சென்றரிய செல்வமகப் பேறெய்திச் சீருறுக*
*என்ருன் இயமன் இனிது."*

அப்போது மகிழ்ந்த சாவித்திரி அவனை நோக்கி, "பெருமானே! எனக்குப் பிள்ளைவரம் தந்தீர்! கணவன் இல்லாமல் மக்களைப் பெறுவது எங்ஙனம்?" என்று கேட்டாள். அப்பொழுது ஆராயாமல் வரம் தந்த இயமன் கலங்கிச் 'சொன்ன சொல் தவறக்கூடாது' என்ற கருத்தை உன்னிச் சத்தியவான் உயிரையும் தந்தான். இந்நிலையில் கவிஞர் பின்வரும் பாடலை இயமன் வாயில் ஏற்றிப் பாடுகின்ருர்:

*"சொல்லென் பதுசிறிது! சொற்பெருமை யோபெரிது!*
*தொல்லுலகில் ஈடிதற்குச் சொல்லஒன்றும்–இல்லையால்!*
*வில்லுஞ் சிலகால் வெலாதொழியும்; மேலோர்கள்*
*சொல்லுஞ் சொல் தோற்றதுண்டோ சொல்?"*

மிக எளிய இனிய சொற்களால், புகழேந்திப் புலவர் சென்ற வழியில், இப்புலவர் தம் வெண்பாக்களை யாத்

திருக்கிருர். 'சத்தியவானுடைய தந்தை தான் ஆண்டிருந்த நாட்டைப் புல்லன் ஒருவனுக்குக் கொடுத்துவிட்டுக் காட்டுக்கு வந்தான் கால்நடையாக' என்பதைப் பின்வருமாறு இவர் பாடுகின்ருர்.

"மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் கொள்ளத்தான் போனுற்போற்-பொன்கால்
பொடியாடத் தேவியொடும் போற்றுசுத னேடுங்
கொடியோனுக் கப்பார் கொடுத்து."

இப் புலவர் பெருமான் 1. "சகுந்தலை வெண்பா," 2. "இலந்தன் வெண்பா" என்ற நூல்களைப் பாடினர். இலந்தன் வெண்பாவில் இவர் கூறுவது இலந்தன் [London] மாநகரத்தில் ஆண்டிருந்த விக்டோரியா மாராணியாருடைய புகழ்மாலை. தஞ்சை நகர்க் கரந்தைத் தமிழ்ச் சங்கத்து இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவில் புலவர் வழக்கறிஞர் டி. ஏ. இராமலிங்கஞ் செட்டியார் தலைமையில் இவர் "நமது பழைய புதுச் சரித்திரம்" என்ற தலைப்பில் ஓர் அரிய விரிவுரை நிகழ்த்தினர். அது 1914-ல் அச்சிட்டு வெளிவந்துள்ளது. அதன் முடிவில் "தன் சரிதம் உணர்த்தும் மொழி" என்ற தலைப்பில் இவர் மெய், அணி, ஊர் ஆகிய மூன்று கட்டுரைகள் முன்னரே வெளியிட்டிருப்பவைகள். அவைகளை ஒட்டிப் பிறந்த நான்காம் கட்டுரையே இது" என்று கூறுகிருர். வெண்பாப் புலியாகிய இவர் 1918-ல் சிவனுர் திருவடி நீழலை அடைந்தார்.

# 46. சிதம்பரநாதத் தம்பிரான்

[கி. பி. 1849 — ; திரு. 1880 — .]

திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவிலுக்குப் போகும் வழியில் நாகனேரிக்குச் சிறிது தெற்கே வள்ளியூர் என்ற திருநகரம் பல வளங்களோடும் விளங்குகின்றது. இங்கே தான் வள்ளியம்மை திருமணம் நடந்ததாக அறிவும் ஆராய்ச்சியும் மிக்க பெரும் புலவர்கள் தக்க சான்றுகளுடன் கூறுகின்றனர். இதற்கு அவர் கூறும் தக்க சான்றுகளுள் ஒன்று வள்ளியம்மைத் தாயாரை வளர்த்தவராகச் சொல்லப்பெறும் "நம்பிராயர் வாழ்ந்திருந்த நகரம் வள்ளியூருக்கருகேயுள்ள திருக்குறுங்குடி" என்பது. இந்த வள்ளியூரில் சுப்பிரமணிய பிள்ளைக்கும் முத்தம்மைக்கும் 1849-ல் மகனாராகப் பிறந்தார் சிதம்பரநாதத் தம்பிரான்.

இவர், இளமையிலேயே திருவாவடுதுறை ஆதீனம் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரிடம் சிவதீக்கையுடன் கல்லாடையும் பெற்றுத் துறவியானார். இவருக்கு வயிற்று வலி மிகக் கொடுமையாக இருந்தது. அதனைப் பொறுக்க மாட்டாமல் கிணற்றில் விழப்போன இவரைத் தேவி சிறு குழந்தைபோல் வந்து தடுத்து, "திருக்கோவிலில் திருப்பணி செய்" என்று கட்டளையிட்டு ஆட்கொண்டருளினாள். இவருக்குச் செய்யுள் பாடும் திறமும் வந்துவிட்டது. இவர் தம்மை ஆட்கொண்ட "திரியுகம் கண்ட தேவி" மேல் முப்பது பாடல்கள் கொண்ட மாலையொன்று பாடினார். அதன் முதற்பாட்டுப் பின்வருவது:

*"பொன்னில மாதர் ஆசை பூண்டனு தினமும் சிந்தை*
*மன்னமா ளாந்து வாடும் மதியிலேன் தன்னை ஆள்வாய்*
*துன்னமா பூகம் தெங்கு சூழ்பொழில் வள்ளியூரில்*
*தென்னவன் உய்ய வந்த திரியுகம் கண்ட தேவி!"*

# 47. பாம்பன் குமரகுருதாச அடிகள்

[கி. பி. 1850—1929; திரு. 1881—1960.]

இராமநாதபுரத்திற்குக் கிழக்கே இருபத்தேழு மைலி லும் தனுக்கோடிக்கு மேற்கே பதினாறு மைலிலும் இருப்பது பாம்பன் சந்திப்புப் புகைவண்டி நிலையம். இதிலிருந்து வடகிழக்காக ஏழு மைல் சென்றால் இராமேசுவரத்தை அடையலாம். இந்தச் சிறந்த பாம்பன் நகரத்தில் சாத்தப்ப பிள்ளைக்கும், செங்கமலத்தம்மைக்கும் திருமகனாக 1850-ல் குமரகுருதாசர் பிறந்தார். இவர் அகமுடையார் குலத்தினர். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் அப்பாவு என்பது. அவ்வூரிலிருந்த முனியாண்டியா பிள்ளை என்ற ஆசிரியரிடத்திலே இவர் கல்வி பயின்று தக்க புலமை பெற்றார்.

இவர் இளமையிலே கடவுட் பற்று மிக்கவராக விளங்கினார். கந்தர் சட்டிக் கவசமென்பதை ஒவ்வொரு நாளும் பலமுறை ஓதி முருகப்பெருமானிடத்தில் அளவில்லாத பேரன்பு கொண்டார். ஒரு நாள், இவர் தமது தென்னந் தோப்புக்குச் சென்றார். அங்கே முருகப் பெருமானைப் பாட வேண்டுமென்று எண்ணினார். இவரையறியாமலே பாடும் திறமை தோன்றிற்று; பாடி மகிழ்ந்தார். அன்று முதல் நாடோறும் முருகப்பெருமானைப் பாடினார். இராமேசுவரம் சேதுமாதவையர் என்ற முருகனடியார் தொடர்பு இவருக்கு உண்டாயிற்று. தம் இருபத்தைந்தாவது வயதில் இவர் காளிமுத்தம்மாள் என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். இவருக்கு முருகையன், குமரகுரு தாசன் என்ற ஆண் மக்களும், சிவஞானம் என்ற பெண்ணும் பிறந்தனர்.

இவர் கன்னியாகுமரி, திருச்செந்தூர் முதலிய பல இடங்களுக்குச் சென்று வழிபாடு செய்து பிரப்பன் வலசை என்ற இடத்தில், ஒரு மண்டலம் முருகனை நோக்கித் தவம் செய்து கொண்டிருந்தார். குடும்பத்திலிருந்தும், இவருடைய மனம் துறவு வாழ்க்கையையே நாடியிருந்தது. இவர் ஓயாமல் 'குமரகுரு, குமரகுரு' என்று சொல்லிக் கொண்டேயிருப்பார். அதனுல், இவரை அனைவரும் 'குமர குருதாசர்' என்று அழைப்பாராயினர். அதிலிருந்து அப்பாவு என்ற இவருடைய பிள்ளைப் பெயர் மறைந்து விட்டது. அப்பொழுது இவருக்கு வயது நாற்பத்தைந்தாயிற்று. ஒரு நாள் இவர் திடீரென்று துறவியானுர். பாம்பனை விட்டுப் புறப்பட்டுக் குமரகுருதாசர் மதுரை சென்று வடக்கு நோக்கிப் போய்ச் சிதம்பரம் முதலிய பதிகளிலே தங்கி வழிபாடு செய்து சென்னையைச் சேர்ந்தார். அங்கிருந்து காசிக்குப் போய்ச் சிவபெருமானை வழிபாடு செய்துகொண்டு சிலநாள் குமரகுருபர அடிகளாரின் திருமடத்தில் தங்கியிருந்து மறுபடியும் தெற்கு நோக்கித் திரும்பிச் சென்னை வந்தடைந்தார். சென்னைமா நகரின் தென்கோடியிலுள்ள அடையாற்றுக்கருகிலே இருக்கும் திருவான்மியூரில் அடிக்கடி சென்று சிவபெருமானையும், முருகப்பெருமானையும் கும்பிட்டுத் திருப்பாடல் பாடி வழிபடுவாராயினுர். இவருடைய புலமையையும், புத்திமையையும் அறிந்த பல்லோர் இவரிடம் சென்று வழிபட்டு நல்லுரை கேட்டுப் பேறு பெறுவாராயினர். இவருடைய ஆணைப்படி அவர்கள் இவருக்குத் திருவான்மியூரில் தங்குவதற்கு உகந்த ஓரிடம் அமைத்தனர். இவர் 30—5—1929-ல் வியாழக்கிழமையன்று முருகப் பெருமான் திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டு அத்திருவடி நிழலிலே சேர்ந்தார். இவருடைய சமாதி திருவான்மியூரில் அமைந்தது. இவருடைய நூல்களை ஆராய்வோம்.

இராமநாதபுரத்தைச் சேர்ந்த பிரப்பன்வலசை ஊரினராகிய இவருடைய மாணவர் உடையநாயகம் பிள்ளை என்ற அன்பர் இவருடைய பாடல்களைத் திரட்டி 1901-ல் அச்சிட்டு வழங்கினர். அது "குமரகுருதாச சுவாமிகள் பாடல்" என்று நானூறு பக்கங்களும் ஆயிரத்து இருநூற்றெண்பத்தொரு பாடல்களும் கொண்ட முதற் பகுதியுடனும், திருவலங்கல் திரட்டு முதலாம் காண்டம் என்ற நூற்றைம்பது பக்கங்களும் அறுநூற்ருெரு பாடல்களும் கொண்ட இரண்டாம் பகுதியுடனும் விளங்குகின்றது.

இவருடைய பாடல்திரட்டில் முதலிலிருப்பன தெய்வ வணக்கம் மூன்று பாடல்கள். இதன்பின் "அருமறை புகழ்ந்த திருமுருக சிவ சரவணத்தாதியே! அமரர்கோவே!" என்று மகுடமிட்டு முடிவன ஆறு பாடல்கள். பின் திருப்பரங்கிரி, திருச்செந்தில், திருப்பழநி மலை, திருவேரகம், திருக்குன்றுதோருடல், திருச்சோலைமலை ஆகிய ஆறு படை வீடுகளுக்கும் தனித்தனி மகுடமிட்டுப் பப்பத்துப் பாடல்கள் அமைந்துள்ளன. இதில் குன்றுதோருடல் ஆரும் பாட்டு உள்ளம் கவருவது. அது வருமாறு:-

"வண்ணமுடை யொருதுரும் பால்அமரர் வலியெலா
மலினமடை யப்பண்ணியும்
மழுமிருக முழுவையதள் மதகரிப் போர்வைபிறை
வாரியர வந்தரித்தும்
விண்ணவ ரலக்கணற வென்றுபெரு முங்நகரம்
வேவமுறு வல்விளைத்தும்
வேதனரி யுங்தேடி யறிவரிய பேரொளி
விரித்துமுள வொருவன் முன்னே
தண்ணவக் குடையனின் றலர்விடுத் தானெனுஞ்
சரிதமிவ் வுலகிலுளதேற்

*சருகனைய வெற்கந்த மதனஞ்சு வன்கொலுன்*
*றண்ணளி கிடைக்குமாயின்*
*மண்ணவரும் விண்ணவரு மென்வய மெனச்சொல்ல*
*வாயுண்டு; வாழ்வுமுண்டே!*
*மங்காத இன்பர்செறி குன்றுதோ ருடல்வதி*
*மஞ்சார் பெருந்தகையனே!"*

"எல்லா வல்லமைகளுமுடைய சிவபெருமானுக்கு முன் வந்துநின்று அவரிடம் காமம் விளையும்படி அம்பு எய் தான் மன்மதன். அவன் என்னைக் கண்டு அஞ்சுவானு? குன்றுதோறும் ஆடும் முருகப் பெருமானே, நீர் திருவருள் புரிந்தால் விண்ணும், மண்ணும் என் வசப்படும் பெரு வாழ்வு எனக்குக் கிடைக்கும்" என்று வேண்டுகின்ருர் அடிகள். திரு இராமேசுவரத்தில் மேலவாயிலில் எழுந் தருளியிருக்கின்ற முருகப் பெருமானையும், திருப்புலியூர், திருவண்ணுமலை, திருக்குமரகோட்டம், திருத்தணிகை, திருமலை, திருக்கைலாயமலை ஆகிய இடங்களில் எழுந் தருளியிருக்கின்ற முருகப் பெருமானையும் தனித்தனி மகுட மிட்டுப் பப்பத்துப் பாடல்களால் பாடுகின்ருர். திருமலைப் பெருமான் மீது இவர் பாடிய இரண்டாவது பாட்டுப் பின் வருவது:-

*"கண்ணென்று பார்க்கக் கருத்தொன்று தேடிடக்*
*கையொன்று செய்யவுரைகொள்*
*காதொன்று கேட்கநடு நாவொன்று பேசநின்*
*கழலிணை மறந்து பூசை*
*பண்ணிற் பயன்படா தென்றுல கியம்பினும்*
*பழுதறு பதார்த்தங்களைப்*
*பரமனுக் கென்றீவ திற்சிறிது புண்ணியம்*
*பரிவொடெய் தாதோவெனு*
*எண்ணியது செய்யவெனி னும்பத்தி வேண்டுமந்த*
*எய்திடின் விதுப்புவிட்ட*

*எழிலாய யோகமே யாகுமப் பத்தியும்*
*எனக்குச் சிறக்கவிலையால்*
*அண்ணலே என் பூசை எவ்வழியி ஞலுனக்*
*கானதா கக்களிப்பேன்*
*அளிசெறிந் தறைவளம் பெருகுதிருமலைமிசை*
*அமர்ந்தசிவ குகசம்புவே!"*

ஆண்டவனைப் பூசை பண்ணும் அன்பர்கள் இதனைக் கவனித்தல் வேண்டும். இதன்மேல் இவர் சண்முகானந்த சிவம், நிட்களானந்த குகன், சரவண பவானந்தன் முதலிய பல தலைப்புகளிட்டு முருகப் பெருமானைப் பாடுகின்ருர். இதன்மேல் சந்தப் பாக்கள் பல தொடர்கின்றன. இவர் பாடியிருக்கும் பிரபந்தங்கள் உள்ளூர்ச் சிவசுப்பிரமணியர் சதகம், கந்தர் இரட்டை மணிமாலை, கந்தர் ஒரு பா ஒரு பஃது, கந்தர் நான்மணிமாலை, சிவலோக சுந்தரி மாலை, கதிர்காம வேலர் வண்ணம் என்பன. இவர் "பகலெல்லாம்" என்று தொடங்கி இருபத்து நான்கு நேரிசை வெண்பாக்கள் பாடியிருக்கின்ருர். அவற்றுள் பின்வருவது ஒன்பதாவது பாட்டு:

*"வீட்டின்மேல் மாட்டின்மேல் வேற்கண்*
*மடந்தையர்மேல்*
*நாட்டின்மே லேசிந்தை நாட்டுகிற — பூட்டைநெஞ்சே!*
*இவ்வளவு நன்குனக்கிங்கு ஈந்தகும ரன்சரணை*
*எவ்வளவும் எண்ணுத தென்?"*

பூட்டை = இராட்டின் சக்கரம். இதனைத் தொடர்ந்து வரும் பதினன்காவது பாட்டுப் பின்வருவது:-

*"ஆணும்பெண் ணும்கூடி ஆடல்தரின் இன்னமுதம்*
*காணுமதை உட்கொள்ளில் கற்பமன்றே —*
*மாணுடையோர்*
*கொள்வார்உய்த் தோர்ந்தே கொளார்க்குநலன் இவ்வுல*
*கினுள்ளேது நெஞ்சே உணர்."*

இப்பாடலின் கருத்து யோகியரிடம் கேட்டு உணரற் பாற்று.

இவர் "பஞ்சவிம்சதி அதிகசதபங்கி" என்று தலைப் பிட்டு நூற்றிருபத்தைந்து பாடல் பாடியிருக்கிருர். பங்கி என்பது பங்கிடப் பெறுவது. ஒரு பாடலே பல வகை யாகப் பங்கிடப் பட்டுப் பொருள் தரும் பாடல் 'பங்கி' எனப்படும்.

திருவலங்கல் என்பது திருமாலே. இவருடைய பாமா லேத் திரட்டே திருவலங்கல் திரட்டு. இவர் பல இடங் களிற் சென்று பாடிய பாடல்கள் இவை. இவர் சென்று பாடிய ஊர்களில் திருச்சிந்துபுரம் என்பது ஒன்று. சிந்து என்பது கடல். அதனே ஒட்டியுள்ள திருச்செந்தூரே திருச் சிந்துபுரமென்பது. அத்தலேப்பில் வரும் ஆருவது பாட்டுப் பின்வருவது:-

*"இந்தஉடம்பெடுத் தேஇவண் ஏற்றபொல்*
*லாங்கனைத்தும்*
*வந்தபுலன் தெரியாதற மாய்த்தவ னே! இனும் என்*
*அந்தரம் ஓர்ந்தருள் வோருனே அன்றியெவர் உளரே*
*சிந்தைசெய் தாட்படு வார்க்கு அருள்சிந்துபுரத்தானே!"*

இதன் பொருள் வெளிப்படை. இவர் சமாதானச் சங்கீதம் என்ற தலைப்பில் ஒரு கீர்த்தனம் பாடியிருக்கிருர். அதிற் சில பகுதி வருமாறு:-

*[இராகம் — முகாரி; தாளம் — அடதாளம்.]*

*பல்லவி*

*சஞ்சல மேன் மனமே! சிவனடித்*
*தஞ்ச மான பினுமே.*

*அனுபல்லவி*

*என் செயலாலொன் றுமில்லையென்றே நின்று*
*லேதந்துயரில்லையே — யிந்தச்*
*சூதை யறிகில்லையே.* (சஞ்சல)

*சரணம்*

*வானமிடிந்து தலையில் விழும்படி*
*வம்பு வந்தாலு மென்னை? — அந்தக்*
*கானமயில் முருகை யன்றிரு வருள்*
*கை விட மாட்டாதே.* (சஞ்சல)

*பொன்னாசை பெண்ணாசை மண்ணாசை மூன்றையும்*
*போக்கடித்தாலு மென்னை? — கேளுநன்*
*தன்னுணர்ஞான மொன்றே தன்னைக் காட்டுந்*
*தலைவனிடங் கூட்டும்.* (சஞ்சல)

இவரெழுதிய பிற நூல்கள் திருவலங்கல் திரட்டின் இரண்டாம் காண்டம் [பாடல் 534], திருப்பா [பாடல் 1101], காசியாத்திரை [பாடல் 608], குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி [பாடல் 100], கந்தர் ஒலியல் அந்தாதி [பாடல் 100], கந்த கோட்ட மும்மணிக் கோவை முதலியன எண்ணிறந்தன. இவரெழுதிய உரைநடை நூல்களும் பலப்பல; அவற்றுள் "நாலாயிரப் பிரபந்த விசாரம்" என்பதும், "சைவ சமைய சரபம்" என்பதும் மிகச் சிறந்தன. இவை வைணவ சமைய ஆராய்ச்சியையும், சைவ சமையப் பெருமையையும் மிகப் பல ஆதாரங்களுடன் விளக்குவன.

## 48. பிச்சுவையர்

[கி. பி. 1850—1910; திரு. 1881—1941.]

வேம்பத்தூரில் பிச்சுவையர் 1850-ல் பிறந்து நல்ல புலவராக விளங்கினர்; இவர் சிலேடை பாடுவதில் மிக வல்லவர்; ஆதலின் இவரைப் பலரும் "சிலேடைப் புலி" என்று அழைப்பாராயினர். மாவித்துவான் மீனட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவர் வன்றெண்டச் செட்டியாரே இவருக்கு ஆசிரியர்.

முறையூரில் சண்முகம் செட்டியார் என்ற வள்ளல் ஒருவர் இருந்தார். அவர் இவருக்குப் பல உதவிகள் செய்து ஆதரித்து வந்தார். சிவகங்கை மன்னர் முத்து வடுகநாத துரைமேல் இவர் "காதல்" நூல் பாடிப் பரிசு பெற்றூர். பலப்பல தனிப்பாடல்களுடன் இவர் பாடிய பொன்மாரிச் சிலேடை வெண்பா, மதுரை நிரோட்டகயமக அந்தாதி, குன்றக்குடிச் சண்முகநாதர் உலா என்பன இவருடைய சிறந்த நூல்கள்.

---

## 49. ஈசான மடம் இராமலிங்க அடிகள்

[கி. பி. 1851—1906; திரு. 1882—1937.]

இவர் 1851-ல் பிறந்து வளர்ந்து பெரும் புலமை பெற்று விளங்கினர். சிதம்பரம் ஈசான மடத்தின் தலைவராக இருந்த வீர சைவர் இவர். இவருடைய மாணவருள் ஒருவராகிய க. வ. திருவேங்கட நாயுடு என்பவர் சோணசைல மாலைக்கு விருத்தியுரை எழுதியிருக்கிறூர்.

பூண்டி அரங்கநாத முதலியார் கச்சிக் கலம்பகம் பாடுவதற்கும், ஆறுமுகத் தம்பிரான் பெரிய புராணத்திற்கு உரை எழுதுவதற்கும் இவர் இன்றியமையாத துணையாக இருந்தார். நால்வர் நான்மணி மாலைக்கும் பழமலையந்தாதிக்கும் இவர் சிறந்த உரையெழுதி வெளியிட்டார். இவர் பல மேலான இலக்கியங்களைப் பிழையற ஆராய்ந்து அச்சிட்டார். அவற்றுட் சிறந்தன குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு, சிவப்பிரகாச சுவாமிகள் பிரபந்தத் திரட்டு, திருவிளையாடற் புராணம், திருக்கூவப் புராணம், வாயுசங்கிதை, வசவ புராணம், சீகாளத்திப் புராணம் முதலியன.

---

## 50. மு. இரா. அருணாசலக் கவிராயர்

[கி. பி. 1852—1939; திரு. 1883—1970.]

சிவகிரிக்கு அண்மையில் வடக்கே இருப்பது சேற்றூர். இது சிவகிரியைப் போலவே திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்திருந்தது. 1911-ல் இராமநாதபுரம் மாவட்டம் அமைந்த போது இது அம்மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது. சேற்றூருக்கு அருகே உள்ள முகவூரில் இராமசாமிக் கவிராயருக்கு மகனாராக 1852-ல் அருணாசலக் கவிராயர் பிறந்தார். இவர் குடும்பத்தார் எழுவர் இவர் காலத்திலேயே பெரும் புலவர்களாக இருந்தனர். அவர்கள் கந்தசாமிக் கவிராயர், இராமசாமிக் கவிரர்யர், பழநிக் குமாரசாமித் தம்பிரான், மீனாட்சி சுந்தரக் கவிராயர், அருணாசலக் கவிராயர், சுப்பிரமணியக் கவிராயர், கந்தசாமிக் கவிராயர் என்பவர். இத்தகுதி கண்டு மகிழ்ந்த

இக்குடும்பத்தின் நெருங்கிய நண்பர் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் இவ்வெழுவர் பெயரையும் அமைத்து ஒரு விருத்தம் பாடினுர். அது வருமாறு:-

*"கந்தசா மிப்பெயரும் இராமசாமிப் பெயரும்
கவினப் பூண்டு
வந்தஇரு பணேமுன திற் கிளேத்தகிளே பழநிக்கு
மார சாமி
நந்துமீ ஞட்சிசுந் தரம்பின தில் கிளேத்தகிளே
நலமி குந்த
சந்தவரு ஞசலம்சுப் பிரமணிய ஞெடுகந்த
சாமி யாலோ."*

இவர் திருவாவடுதுறை ஆதீனத்திற் சின்னப் பட்டமாக எழுந்தருளியிருந்த நமசிவாய தேசிக மூர்த்திகளிடம் இலக்கண இலக்கியங்களே நன்ருகப் பயின்று பெரும் புலமை பெற்றுர். இவர் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவராகப் பல ஆண்டுகள் தொண்டு செய்தார்.

வேணுவனத் தலபுராணம், காந்திமதியம்மை பிள்ளேத் தமிழ், திருச்செந்தூர்த் தலபுராணம், திருச்செந்தூர்ப் பிரபந்தத் திரட்டு, திருக்குற்ருலத் தலபுராணம், திருக் குற்ருலக் குறவஞ்சி முதலிய நூல்களுக்கு அரும்பதவுரையெழுதி இவர் வெளியிட்டிருக்கிருர். இவர் திருக்குறளே உரைநடையாக எழுதிப் பலரும் அறிந்து கொள்ளும்படி செய்தார்; திருக்குறள் திரட்டும் தெளிபொருள் வசனமும், திருக்குறள் மூலமும் தெளிபொருள் வசனமும் என்ற நூல்களேயும் ஆக்கி உலகப் பொதுமறையாகிய திருக்குறட் கருத்துக்களே அனேவரும் எளிதில் உணர்ந்து கொள்ளும் அரிய தொண்டினே ஆற்றினுர்; திருப்பரங்கிரிப் புராணம், திருச்செந்தூர்ப் புராணம் இவைகளே உரைநடையில் எழுதினுர். செய்யுள் இயற்றுவதிலும் இவர் வல்லவர். திருப்

பரங்கிரியில் இவர் வாழ்ந்திருந்த காலத்தில் நாற்பது செய்யுள் நூல்களைப் பாடினார். அவை 1. பிள்ளைத்தமிழ், 2. பாமாலை, 3. கலித்துறையந்தாதி, 4. பதிற்றுப்பத்தந் தாதி, 5. வெண்பா வந்தாதி, 6. அலங்காரம், 7. அநுபூதி, 8. கோவை, 9. மும்மணிக் கோவை என்பன. ஆறுமுக நாவலர் வரலாற்றை இவர் செய்யுளாகப் பாடியிருக்கிறார். சிவகாசித் தலபுராணம், சிவகாசிப் பதிற்றுப் பத்தந்தாதி, சிவகாசிக் கலிவிருத்த அந்தாதி, சிவகாசி வெண்பா அந் தாதி மூலமும் உரையும் என்பனவும் இவருடைய பேரறிவிற் பழுத்தனவே. ஒற்றைக்கடை என்பது மதுரைக்கு அருகே உள்ளது. அங்கே எழுந்தருளியிருக்கும் விநாயகர்மேல் அந்தாதி, இரட்டை மணிமாலை, மும் மணிக் கோவை என்ற நூல்களை இவர் யாத்துள்ளார். பருவதவர்த்தனியம்மை பிள்ளைத் தமிழ், சேறைத் தவம் பெற்ற நாயகி பிள்ளைத்தமிழ் ஆகிய சிறந்த நூல்களும் இவர் பாடியனவே. இங்ஙனமாகப் புலவர்களும் புரவலர் களும் போற்றும்படியாகத் தமிழ்ப்பணி சிறக்கச் செய்த இவர் பாடிய தனிப்பாடல்களும் பலப்பல.

இப்புலவர் பெருந்தகை 1939-ல் சிவபெருமான் திருவடி நீழலைச் சேர்ந்து இன்புற்றார்.

## 51. இராமசாமி ராசு

**[கி. பி. 1852 — 1897; திரு. 1883 — 1928.]**

தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள திண்டிவனத்தில் அரங்கசாமி ராசு என்பவருக்குத் திருமகனாக இராமசாமி ராசு கி. பி. 1852-ல் தோன்றினார். நுண்ணறிவுடைய இவர் இளம் பருவத்திலேயே பி. ஏ.ப் பட்டம் பெற்றுக்

காஞ்சிமாநகரிலுள்ள பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றினுர். சில ஆண்டுகளில் இவர் கடற் சுங்கத் துறையில் பணியேற்ருர். ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய நான்கு மொழிகளிற் புலமை பெற்ற இவர் இலண்டன் சென்று படித்துப் 'பாரித்தர்' ஆயினுர்.

இவர் ஆங்கிலத்தில் 'அறுபது மந்திரிகள் கதை', 'இந்தியக் கதைகள்' முதலிய நூல்களை ஆக்கிப் பெரும் புகழ் பெற்ருர். வடமொழியில் "இராமநாத ராசங்கள மகோதியானம்" என்ற நூலை இயற்றினுர். இவர் தமிழில் இயற்றியது "பிரதாபச் சந்திர விலாசம்" என்ற நாடக நூல் ஒன்றே. ஒன்றேயாயினும் அது இவருக்குப் புகழ் தந்ததோடு அறிவில்லாது தறிதலைகளாகத் திரியும் இளைஞருக்கு நல்ல படிப்பினை புகட்டி, அவர்களைத் திருந்திய வாழ்க்கையிற் செலுத்தியது. புதுமுறை நாடகங்களில் ஒன்ருகிய இது 1877-ல் வெளிவந்தது. அங்கம், களம் என்ற பகுப்புக்கொண்டு வெளிவந்த முதல் நாடகம் இதுதான்.

கடல் கடந்து சென்று பாரித்தர் பட்டம்பெற்று வந்தவர் இவர் ஆதலினுல் ஆங்கிலச் சொற்களைப் பெரிதும் கலந்து பாடல்கள் பாடியிருக்கிருர். அதில் ஒன்று பின் வருவது :-

" மைடியர் பிரதரே! எங்கள் மதருக்குக் கூந்தல் நீளம்
ஐடிலா அவளும் தூங்க அறுத்ததை விற்று நானும்
ஸைடிலோர் லேடியாகச் சட்காவில் ஏறிக்கொண்டே
ஒய்டான ரோட்டின் மீதில் உல்லாசமாகப் போனேன்."

(மைடியர் பிரதரே-**My dear brother;** மதர்-**Mother;** ஐடிலா-**Idle;** ஸைடில்-**Side;** லேடி-**Lady;** சட்கா-**Jutka;** ஒய்டான-**Wide;** ரோட்டின்-**Road.**)

இங்ஙனம் இவர் ஆங்கிலச் சொற்களைக் கலந்து பாடியது நகைச்சுவையாக இருப்பதோடு ஆங்கிலத் தமிழ் மணிப்பிரவாளத்தின் இழிவையும் எடுத்துக்காட்டுகின்றது. ஸை என்ற கிருந்த எழுத்தையும் இடையிற் கலந்து பிற மொழிச் சொற்களைக் கலப்பதால் எவ்வளவு தவறுண்டா குமோ அவ்வளவு தவறு பிறமொழி எழுத்துக்களைக் கலப் பதாலும் விளையும் என்பதை எடுத்துக்காட்டுகிறார் இந்த அறிஞர். தமிழைத் தமிழாகவே வளர்த்தல் வேண்டும். வடமொழியை வடமொழியாகவே வளர்க்கின்றோம். வட மொழியில் ழகரம் இல்லை. இல்லாத இந்த எழுத்தை அம்மொழியிற் சேர்க்க வடமொழிப் புலவர்கள் இசைய மாட்டார்கள். அவர்கள் புலவர்கள். புலமையற்றவர் புலர்தாம் தமிழில் பிறமொழிச் சொற்களையும் எழுத்துக் களையும் கலந்து பண்பாடழிந்து அலமருவர். எம்மொழி அறிஞரும் உடன்படாத சிறுமையான செயல் இது. தப்பிலிப்பயல் சேர்க்கையால் தரம் கெட்டுப்போய்க் கடைசியில் நல்லறிவுபெற்று வருந்திய ஒருவன் கூறுவ தாக இந்நாடகத்தில்வரும் இவர் பாடிய நீதிப் பாடல் பின்வருவது :-

" தடநெடும் உலகில் இந்தத் தப்பிலிப் பயலைப் போலக்
*கிடைப்பதே அரிதா கும்காண் கிட்டிய மட்டும் நம்மைத்*
*தடவியே தலையின் மூளை தனையுறிஞ் சிட்ட கெட்ட*
*மடையன்தன் வார்த்தை நம்பி மதிமோசம்*
போய்விட்டோமே."

இப்பாடலிலுள்ள இனிமையும், நீதியும் பாராட்டி மகிழற்பாலன. இவர் தம் நாற்பத்தைந்தாம் வயதில் நண்பர்கள் வருந்த இறைவன் திருவடியை அடைந்தார்.

## 52. ஆலால சுந்தரம் பிள்ளை

[ கி. பி. 1853—1923; திரு. 1884—1954. ]

இவர் அமிர்தானந்தம் பிள்ளைக்குத் திருமகனாக 1853-ல் காஞ்சிமாநகரிற் பிறந்தார். சைவ சித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகரும் இவரும் சேர்ந்து சைவ சமைய நூல்களைப் பயின்றார்கள். இவர் வடமொழியிலும் புலமை பெற்றார். நாயகருக்கு இவர் பெருந் துணைவராகி நாடெங்கும் சென்று சைவமும் தமிழும் வளர்ப்பாராயினர்.

"ஞானபானு" என்னும் மாதத் தாளினைத் தொடங்கி இவர் அதன் ஆசிரியராக விளங்கினார்; காஞ்சிப் புராணம், திருப்போரூர்ச் சன்னிதிமுறை, திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் முதலிய நூல்களுக்கு உரை வகுத்தார்; 'தேவி பாகவதம்' முதலிய வடமொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தார்; ஆசாரியப்பிரபாவம், சிவஞான போத நுட்பம் முதலிய உரைநடை நூல்களை எழுதினார்.

இவரை இவர் நண்பர்கள் 'சித்தாந்த போத ரத்னாகரம்' என அழைப்பாராயினர். இவர் 1923-ல் சிவனார் திருவடியைச் சேர்ந்தார்.

---

## 53. பூவை - கலியாணசுந்தர யதீந்திரர்

[கி. பி. 1854—1918; திரு. 1885—1949.]

14—5—1854 புதன்கிழமையன்று இவர் பரங்கிமலையில் அண்ணுச்சாமி முதலியாருக்கும் உண்ணாமுலையம்மைக்கும் திருமகனாகப் பிறந்தார். இவர் பூவிருந்தவல்லியில் பூங்காவனக் கவிஞரிடம் தமிழைப் பயின்று

புலவரானார். ஒரு நாள் கவிஞர், படியாது விளையாடி யிருந்த, தம் மாணாக்கரைப் புளியம்வளாரைக்கொண்டு தொடையில் அடித்துக் கண்டித்தார். அதனால் துன்புற்ற இவர்,

“ எந்தவிதக் குற்றமும்யான் இன்றுசெய் யாதிருக்க
எந்தன் தொடையித்னில் ஏன்சூடு - வந்ததெனப்
பூரணமாய்க் கல்விகற்ற பூங்கா வனக்கவியைக்
காரணநீ கேட்டிடுக கண்டு.”

என்ற வெண்பாவைப் பாடினார். இதனால் இவர் இளமை யிலேயே கவிபாடும் திறம் பெற்றிருந்தார் என்பது தெரி கிறது. இவர் துடுக்கு இப்பாடலைப் பாடச்செய்தது. “இன்று குற்றம் ஒன்றும் செய்யாதிருக்க” என்றதனால் இவர் அடிக்கடி குற்றம் செய்து அடிபடுபவர் போலும்! ஆனால், ஆசிரியர்கள் இதிலிருந்து சில உண்மைகளைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். வளார்கொண்டு மோதித் திருத்த முயலுவதினும் வாய்மையுரையால் மாணவரைத் திருத்துதல் எளிதாகக்கூடும். நல்ல பிள்ளைகள் ஒரு சொல்லாலேயே திருந்திவிடுவார்கள்.

“ சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.”

என்பது திருவள்ளுவ நாயனார் மெய்யுரை. கீழ்மக்களை யும் அடிக்கடி நெஞ்சு சுடச் சொல்லும் சொற்களால் திருத்திவிடலாம் என்பதுதான் இக்குறட்பாடலின் கருத்து.

ஒருநாள் இவர் தம்முடன் பயின்ற மாணவர் சிலருடன் பயிராகியிருந்த ஒரு தோட்டத்திற் புகுந்து நடந்தார். அவ்வழி இவர்கள் வீட்டுக்குக் குறுக்குவழி. அதுகண்ட தோட்டக்காரன் இவர்களைக் கோல்கொண்டு புடைத்து

வெருட்டினான். அதனால் சினம்கொண்ட இவர் அங்கிருந்த காளியம்மையைப் பார்த்து,

*" தோட்டக்கா ரச்சூரன் தோன்றி வளாரடியைப்*
*போட்டான் முதுகில் பொறுக்கேன் நான்—தோட்டிதழ்சேர்*
*தாராரும் காளியே! தாரணியில் அன்னவனைப்*
*பாராமலே யிருக்கப் பண்."*

என்று பாடினார். இதுவும் சிறுபிள்ளை விளையாட்டே; இவர் பயிரிடையே புகுந்து நடந்தது பெரும் பிழையல்லவா!

இவர் சொக்கபுரம் இராமலிங்கத் தம்பிரானிடம் பெரிய புராணம், திருக்கோவையார் முதலிய நூற்களைப் பாடம் கேட்டுச் சைவ சித்தாந்த நுட்பங்களையெல்லாம் அறிந்து கொண்டார்; பின், பேறைத் தசாவதானம் செகந்நாதப் பிள்ளையிடம் இலக்கண நூல்களைக் கற்று, அவதானமும் பயின்று அட்டாவதானியானார். இவர் தமக்குக் கிடைத்த பரிசுகளையெல்லாம் தம் ஆசிரியருக்கே கொடுத்து மிக்க நன்றி பாராட்டினார். இவர் முதல்முதல் அட்டாவதானம் செய்தது 1878-ல் திருக்கழுக்குன்றத்தில். இவர் பல இடங்களிலும் சென்று பெருஞ்சொற்கள் பல ஆற்றிச் சைவ சித்தாந்தத்தின் பெருமைகளை நிலைநாட்டியபடியால் இவரைச் "சித்தாந்த சரபம்" என்று அறிஞர் பலரும் புகழ்வாராயினர்.

இவர் 1882 லிருந்து சென்னையில் வாழ்வாராயினர்; இவருக்கு மாணவராக எண்ணற்றோர் வந்து பாடங் கேட்டுப் புலமை பெற்றனர். இவரிடம் பாடங்கேட்டுப் புலமை பெற்ற மாணவருட் சிறந்தவர்கள் மணி திருநாவுக்கரசு முதலியார், வல்லை சண்முகசுந்தர முதலியார், புழலை திருநாவுக்கரசு முதலியார், மோசூர் கந்தசாமி முதலியார், பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் முதலியோர்.

தம்முடைய ஒரே மகனும் இரு பெண்மக்களும் மனைவியும் மறைந்தனராக, கலியாணசுந்தர முதலியார் தன்னந் தனியராகித் துறவு பூண்டு கலியாண சுந்தர யதீந்திரர் ஆனார். அழகிய சிவவேடப் பொலிவும் இனிமையும் எளிமையும் பொதிந்த பேச்சு நலனும், பெருநினைவாற்றலும் உடைய இப்பெரியார் "சித்தாந்தம்" என்ற திங்கள் வெளியீட்டு ஆசிரியராகித் தொண்டாற்றினார். திருக்கழுக்குன்றம் திரிபுரசுந்தரிமாலை என்ற பாமாலை இவராற் பாடப் பெற்றது. திருப்பாசூர்ப் புராணம், திருவலிதாயப் புராணம், திருவேற் காட்டுப் புராணம், திருவொற்றியூர்ப் புராணம், காளத்திப் புராணம் ஆகிய புராணங்களை இவர் உரைநடையில் எழுதினார். 'சித்தாந்த வசன பூடணம்' என்ற நூல் சுபகிருது ஆண்டு ஆனி மாதம் வெளிவந்தது. அதில் இவர் சிவஞான போதத்தை இனிய எளிய உரை நடையில் தடை விடைகளால் தெளிவாக விளக்கியிருக்கிறார்; இந்நூல் பதினொரு பகுதிகளாகிப் பதி, பசு, பாசம், சுத்த சத்து, தசகாரியம், அவத்தை, தீக்கை, சாதனம், ஞானம், ஞானிகள், அத்துவிதமுத்தி ஆகிய இவைகளின் இலக்கணத்தை விளக்குகின்றது.

கலியாணசுந்தரயதீந்திரர் 1918ல் சிவனார் திருவடி மலரைச் சேர்ந்தார். இவருடைய திருமேனி திருவொற்றியூரில் அடக்கம் செய்யப் பெற்றது. பல புலவர்கள் இரங்கற்பாக்கள் பாடி வருந்தினர்.

*"இன்புமொழிஅன்புருவாம் இணையிலிறைபொன்னடிக்கீழ்த்*
*துன்பொருவ இன்புருவாய்த் திகழ்ந்தனையோ? தூயசில*
*மன்பெரிய சமையத்தின் மகிழ்நிலையை எனக்குணர்த்த*
*உன்பெரிய மலரடியை ஒருமையுடன் தொழுதேனே."*

*மணி திருநாவுக்கரசு முதலியார்*

## 54. வெண்பாப்புலி வேலுச்சாமிப் பிள்ளை

**[கி. பி. 1854 — 1926; திரு. 1885 — 1957.]**

சிதம்பரத்துக்கு வடகிழக்கே ஐந்து மைல் தொலைவிலுள்ள தில்லைவிடங்கன் ஊரில் சுப்பிரமணிய பிள்ளைக்கும் சுந்தரத்தம்மாளுக்கும் திருமகனாக இவர் 1854-ல் பிறந்தார்; சென்னைக் கிருத்துவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் சின்னச்சாமிப் பிள்ளையிடமும், அட்டாவதானம் சபாபதி முதலியாரிடமும் கல்வி பயின்று தமிழ்ப் புலவரானார். மேலும் கல்வி கற்கும் ஆசையால் இவர் திருவாவடுதுறையை அடைந்து மாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் பல ஆண்டுகள் தமிழைப் பயின்றார். வெண்பாக்களை விரைவாகவும், பொருள் பொருந்தவும் பாடும் வன்மை நோக்கி இவருக்கு "வெண்பாப்புலி" என்ற சிறப்புப் பெயரை மாவித்துவான் வழங்கினார். மாவித்துவான் மறைந்தபின் இவர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரிடம் தீக்கை பெற்றுச் சில ஆண்டுகள் தமிழைப் படித்துக் கொண்டிருந்தார்.

இவர் காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். ஓய்வு நேரங்களில் தம்முடைய ஆசிரியராகிய மீனாட்சிசுந்தரம் பிள்ளையைப்போலப் பல தலங்களுக்குப் புராணங்கள் பாடினார்; திருக்கச்சூர் ஆலக்கோவிற் புராணம், தில்லைவிடங்கன் புராணம், திருவேட்டக்குடிப் புராணம் என்பன அவை. தேவார சிவதல வெண்பா, தேவார வைப்புத்தலக் கட்டளைக் கலித்துறை, திருத்தில்லை நிரோட்டக யமக வந்தாதி முதலியனவும் இவர் பாடியன. கந்தபுராணத்தை ஐயாயிரத்தறுநூற்றறுபத்தைந்து வெண்பாக்களாகக் 'கந்தபுராண வெண்பா' என்று தலைப்பிட்டு இவர் பாடினார்.

---